வ்யா.—அதாவது-வாஸுதேவ விஷ்ணுஶப்தங்களான மற்ற வ்யாபக மந்த்ரங்களிரண்டுக்கும் நாராயணஶப்தம்போலே ஸ்வரூப ரூபகுணாதிகளை யெல்லாம் ப்ரதிபாதியாதே, ஸ்வரூபமாத்ரத்தை ப்ரதிபாதிக்கையாலே, நிர்விஶேஷ சிந்மாத்ரவஸ்த்வாதிகளான

ஏ.—(ஸ்வரூபரூபகுணாதிகளை) என்றது - பகவத்ஸ்வரூபரூபகுணாதிகளையெல்லாமென்றபடி. (ஸ்வரூப) பதம் - திவ்யாத்மஸ்வரூபபரம்; (ரூப) பதம் - திவ்யமங்களவிக்ரஹபரம்; (ஆதி) ஶப்தத்தாலே-விபூதிகளைச்சொல்லுகிறது.

(ஸ்வரூபமாத்ரத்தை) என்றது-பகவத்ஸ்வரூபமாத்ரத்தை என்றபடி.

(நிர்விஶேஷத்யாதி) நிர்விஶேஷத்வம் - ஸகல விஶேஷரஹிதத்வம். విశేషభేదః - సోపిసజాతీయవిజాతీయస్వగతరూపేణత్రివిధః. అచిద్బ్రహ్మణోర్భేదః - విజాతీయః, చిద్బ్రహ్మణోర్భేదః-సజాతీయః, వ్యావృత్త్యనువృత్తిభేదః - స్వగతభేదః. అనృతవ్యావృత్త్యాదయోవ్యావృత్తిధర్మాః, నిత్యత్వాదయోఅనువృత్తిధర్మాః; సత్యపదాత్-అనృతవ్యావృత్తిః, జ్ఞానపదాత్-జడవ్యావృత్తిః, అనన్తపదాత్ - పరిచ్ఛిన్నవ్యావృత్తిః, అనువృత్తిః - ఇదమంశానువృత్తిః; ధర్మపదస్యవ్యావృత్త్యనువృత్తిశబ్దాదౌయోజనీయమ్. ఏవంరూపైర్విరహితత్వమ్ - నిర్విశేషత్వమ్. స్వయంప్రకాశత్వమ్-చిత్త్వమ్. మాత్రశబ్దేన-జడత్వవ్యావృత్తిః.“యథాసైన్ధవఘనః” ఇతివత్ కృత్స్నోరసఘనఏవ ఇతివాక్యశేషః. “వృక్షస్యస్వగతోభేదఃపత్రపుష్పఫలాదిభిః। వృక్షాన్తరాత్సజాతీయోవిజాతీయశ్శిలాదిభిః॥ ఏవంచిద్వస్తునోభేదత్రయంప్రాప్తంవ్యుదస్యతే। ఐక్యావధారణంద్వైతప్రతిషేధైస్త్రిభిఃక్రమాత్” விஶேஷாபேதஃ-ஸோபிஸஜாதீய விஜாதீய ஸ்வகதரூபேணத்ரிவிதஃ. அசித்ப்ரம்ஹணோர்பேதஃ - விஜாதீயஃ, சித்ப்ரம்ஹணோர்பேதஃ - ஸஜாதீயஃ, வ்யாவ்ருத்யநுவ்ருத்திபேதஃ - ஸ்வகத பேதஃ. அந்ருதவ்யாவ்ருத்த்யாதயோவ்யாவ்ருத்திதர்மாஃ, நித்யத்வாதயோ அநுவ்ருத்திதர்மாஃ; ஸத்யபதாத்-அந்ருதவ்யாவ்ருத்திஃ, ஜ்ஞாநபதாத்-ஜடவ்யாவ்ருத்திஃ, அநந்தபதாத் - பரிச்சிந்நவ்யாவ்ருத்திஃ, அநுவ்ருத்திஃ - இதமம்ஶாநுவ்ருத்திஃ; தர்மபதஸ்யவ்யாவ்ருத்த்யநுவ்ருத்திஶப்தாதௌ யோஜநீயம். ஏவம்ரூபைர்விரஹிதத்வம்-நிர்விஶேஷத்வம். ஸ்வயம்ப்ரகாஶத்வம்-சித்த்வம். மாத்ரஶப்தேந-ஜடத்வவ்யாவ்ருத்திஃ. “யதாஸைந்தவகநஃ” (நகஅ) இதிவத் க்ருத்ஸ்நோரஸகநஏவேதி வாக்யஶேஷஃ. “வ்ருக்ஷஸ்யஸ்வகதோபேதஃபத்ரபுஷ்பபலாதிபிஃ - வ்ருக்ஷாந்தராத்ஸஜாதீயோ விஜாதீயஶ்ஶிலாதிபிஃ - ஏவம்சித்வஸ்துநோபேத த்ரயம்ப்ராப்தம்வ்யுதஸ்யதே - ஐக்யாவதாரணம்த்வைதப்ரதிஷேதைஸ்த்ரிபிஃக்ரமாத்” (நககு) என்று சொல்லுகிறபடியே - (நிர்விஶேஷசிந்மாத்ரவஸ்த்வாதிகளான.)

தொ.—(ஸ்வரூபரூபகுணாதிகள்) என்கிற (ஆதி)ஶப்தத்தாலே-விபூதிகளைச்சொல்லுகிறது. (ஸ்வரூபமாத்ரத்தை) என்றது-வ்யாபகமான ஸ்வரூபமாத்ரத்தை யென்றபடி. (நிர்விஶேஷ) என்றது - விஶேஷேண ஶூந்யமானவென்றபடி.

வ்யா.—குத்ருஷ்டிகள் மிகவுமாதரித்துப்போருகையாகிற அஶிஷ்டபரிக்ரஹமும், வ்யாப்யாத்யாஹாராதிஸாபேக்ஷதையாகிற அபூர்த்தியுமுண்டென்கை. “ஷடக்ஷரி,

---

எ.—பாரத்வாஜஸம்ஹிதாயாம், “కుదృష్టయోబహువిధావృధాన్తైదికమానినః । తథామిథ్యాదృశోబాహ్యాస్సర్వైరేవావృతంజగత్” “குத்ருஷ்டயோபஹுவிதாவ்ருதாவைதிகமாநிந: - ததாமித்த்யாத்ருஶோபாஹ்யா: ஸர்வைரேவாவ்ருதஞ்ஜகத்” (ருஉ0) என்கிறபடியே - குத்ருஷ்டிகளென்றபடி. இவ்விடத்தில், (குத்ருஷ்டிகள்) என்கிறது - ஶங்கராதிகளை.

“‘సత్యంజ్ఞానమనన్తంబ్రహ్మ’ ఇత్యత్ర, సత్యపదమ్-నిరుపాధికసత్తాయోగిబ్రహ్మాహ. తేన వికారాస్పదమ్-అచేతనమ్. తత్సంసృష్టచేతనశ్చవ్యావృత్తః, నామాన్తరభజనార్హావస్థాన్తరయోగేన తయోర్నిరుపాధికసత్తాయోగరహితత్వాత్. జ్ఞానపదమ్-నిత్యాసఙ్కుచితజ్ఞానైకాకారమాహ. తేన కదాచిత్సఙ్కుచితజ్ఞానత్వేన ముక్తావ్యావృత్తాః. అనన్తపదమ్, దేశకాలవస్తుపరిచ్ఛేదస్వరూపమాహ. గుణత్వాత్స్వరూపస్య స్వరూపేణగుణైశ్చానన్త్యమ్. తేనపదద్వయవ్యావృత్తకోటిద్వయవిలక్షణాస్సాతిశయస్వరూపస్వగుణానిత్యావ్యావృత్తాః. విశేషణానాంవ్యావర్తకత్వాత్” ఇతి విశిష్టాద్వైతసిద్ధాన్తః. “‘ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரம்ஹ’ இத்யத்ர, ஸத்யபதம்-நிருபாதிகஸத்தாயோகிப்ரம்ஹாஹ. தேநவிகாராஸ்பதம் அசேதநம். தத்ஸம்ஸ்ருஷ்டசேதநஶ்சவ்யாவ்ருத்த:, நாமாந்தரபஜநார்ஹாவஸ்த்தாந்தரயோகேந தயோர்நிருபாதிகஸத்தாயோகரஹிதத்வாத். ஜ்ஞாநபதம்-நித்யாஸங்குசிதஜ்ஞாநைகாகாரமாஹ. தேந கதாசித்ஸங்குசிதஜ்ஞாநத்வேந முக்தாவ்யாவ்ருத்தா:. அநந்தபதம், தேச காலவஸ்த்வபரிச்சேதஸ்வரூபமாஹ. குணத்வாத்ஸ்வரூபஸ்யஸ்வரூபேணகுணைஶ்சாநந்த்யம். தேநபதத்வயவ்யாவ்ருத்தகோடித்வயவிலக்ஷணாஸ்ஸாதிஶயஸ்வரூபஸ்வகுணாநித்யாவ்யாவ்ருத்தா:. விஶேஷணாநாம் வ்யாவர்த்தகத்வாத்” இதி விஶிஷ்டாத்வைதஸித்தாந்த:.

(வ்யாப்யாத்யாஹாராதி) என்றது - வ்யாப்யபதார்த்தவாசகபதாத்யாஹாரமென்றபடி. (ஆதி)ஶப்தத்தாலே - குணவாசகபதாத்யாஹாரத்தை நினைக்கிறது.

ஸம்வாதப்ரமாணோதாஹரண மநுக்ருண்ஹாதி (ஷடக்ஷரி) இத்யாதிநா. (ஷடக்ஷரி) யாவது - “ఓంనమోవిష్ణవే” “ஓம்நமோவிஷ்ணவே” (ருஉக) என்னுமது. ப்ரணவநமஸ்ஸுக்கள் ஸர்வமந்த்ர ஸாதாரண மாகையாலே,

---

தொ.—(குத்ருஷ்டிகள்) என்றது - சங்கராதிகளென்றபடி.

வாஸுதேவ விஷ்ணுமந்த்ரங்களுடைய பூர்த்தியை ஸம்வாதத்தாலே உபபாதிக்கிறார் (ஷடக்ஷரி) இத்யாதியால்.

பி.—கக. (வ்யாப்யாத்யாஹாரம்) என்றது - வ்யாப்யமான நாரஶப்தம் அங்குண்டானாப்போலே, இங்கில்லாமையாலே, “ஸர்வத்ரவஸதி” என்று ஸர்வஶப்தத்தாலே வ்யாப்யத்தை அத்யாஹரித்துக்கொள்ள வேணுமென்றபடி.

வ்யா.—வ்யாப்யபதார்த்தங்களையும், வ்யாபநப்ரகாரத்தையும், வ்யாப்திபலத்தையும், வ்யாபகனுடைய குணங்களையும் சொல்லாதே, வ்யாப்திமாத்ரப்ரகாஶகமாகையாலே அபூர்ணம்.

ஏ.—அவற்றுக்கர்த்தம் விவக்ஷியாதே, ப்ரதாநபூத நாமத்ரயத்தினுடைய அர்த்தங்களை விவக்ஷித்து, அபூர்த்தியையும் பூர்த்தியையும் உபபாதித்தருளுகிறாரென்று கண்டுகொள்வது.

(வ்யாப்திமாத்ரப்ரகாஶகமாகையாலே) என்றது-"విష్ల్-వ్యాప్తౌ" "விஷ்ல் - வ்யாப்தௌ" (௩௨௨) என்கிற விடத்தில் வ்யாப்திவாசகமான "விஷ்ல்" என்கிற தாதுவில் "ఇతోలోపస్స్యాత్" "இதோலோபஸ்யாத்" (௩௨௩) என்று இத்ஸம்ஜ்ஞிகமான ல்காரம் லோபமாய், அநந்தரம் "விஷ்" என்றிருந்ததாய், "ఔణాదికేతాచ్ఛీలేయే" "ஔணாதிகேதாச்சீலேயே" னுப்ரத்யயம் ப்ராப்தமாய், "விஷ்ணுஃ" என்று ஶப்தமாய், "வ்யாப்நோதீதி - விஷ்ணுஃ" என்ற வ்யுத்பத்தியாலே, பகவத்ஸ்வரூபவ்யாப்திமாத்ரப்ரதிபாதகமாகையாலே யென்றபடி. இவ்விடத்தில், மாத்ரஶப்தம் "మాత్రంకార్త్స్న్యేవధారణే" "மாத்ரம்கார்த்ஸ்ந்யேவதாரணே" என்று அவதாரணார்த்தகமாய், அந்யயோக வ்யவச்சேதகமாயிருக்கும். "விஶதீதி-விஷ்ணுஃ" என்று மருளிச் செய்வர்கள். "యస్మాద్వ్యిష్టమిదంవిశ్వం యస్యశక్త్యామహాత్మనః। తస్మాద్విష్ణురితిప్రోక్తో విశతేర్ధాతోః ప్రవేశనాత్." వ్యిష్ట-వ్యాప్తమిత్యర్థః. "'யஸ்மாத்வ்யஷ்டமிதம்விஶ்வம் யஸ்யஶக்த்யாமஹாத்மநஃ - தஸ்மாத்விஷ்ணுரிதிப்ரோக்தோ விஶதாதோஃ ப்ரவேஶநாத்.' வ்யஷ்டம்-வ்யாப்தமித்யர்த்தஃ." (௩௨௪) இதி விஷ்ணுபுராணே. வ்யாப்திஶ்ச த்ரேதா-ஸ்வரூபதஃ, தர்மபூதஜ்ஞாநதஃ, விக்ரஹதஶ்ச.

தொ.—(வ்யாப்யபதார்த்தங்களையும்) என்றது-நாரஶப்தார்த்தங்களையுமென்றபடி. (வ்யாபநப்ரகாரத்தையும்) என்றது - நாராயணபதத்திலே பஹுவ்ரீஹிஸமாஸஸித்தமான அந்தர்யாமித்வத்தையுமென்றபடி. (வ்யாப்திபலத்தையும்) என்றது - அதில் தத்புருஷஸமாஸஸித்தமான ஸர்வாபாஶ்ரயத்வத்தையுமென்றபடி. அதாவது - தத்தத்வஸ்துஸ்வரூபநிர்வாஹகனாகை. (வ்யாபகனுடைய குணங்களையும்) என்றது-நாரஶப்தார்த்தங்களான ஜ்ஞாநாநந்தாமலத்வாதி குணங்களையுமென்றபடி. (வ்யாப்திமாத்ரப்ரகாஶகமாகையாலே) என்றது-விஷ்ணுஶப்தத்தாலே வ்யாப்திமாத்ரப்ரதிபாதகமாகையாலே யென்றபடி.

பி.—(வ்யாபநப்ரகாரம்)-தத்புருஷபஹுவ்ரீஹிகளாலே, உள்ளோடு புறம்போடுவாசியற வ்யாபிக்கைக்கு, ஷடக்ஷரிக்கு "விஷ்ல்வ்யாப்தௌ" என்று வ்யாப்திஸூசக முண்டானாலும், த்வாதஶாக்ஷரிக்குப்போலே "ஸர்வத்ராஸௌ" என்று ஶ்ருக்தியில்லாமையாலே, வ்யாபநப்ரகாரத்தைச் சொல்லவில்லையிறே. வ்யாப்திபலந்தானே உபாயோபேயமாகை. இதுக்கு ஶப்தம் அயநபதத்தில், "அநேநாயத இத்யயநம்" "இயத இத்யயநம்" என்கிற வ்யுத்பத்தித்வயம்

வ்யா.—வ்யாபகப்ரகாரத்தைச் சொல்லாநிற்கச்செய்தேயும், வ்யாப்யபதார்த்தங்களுக்கு வாசகஶப்தம் இல்லாமையாலும், 'సర్వంవసతి' 'ஸர்வம் வஸதி' (௩௪) என்று அர்த்தபலத்தாலே ஸர்வஶப்தம் புகுந்தாலும்,

---

எ.—(வ்யாபகப்ரகாரத்தைச் சொல்லாநிற்கச்செய்தேயும்) என்றது- "வஸ நிவாஸே" என்கிறவிடத்தில் நிவாஸார்த்தகமான வஸ தாதுவின்மேலே கர்த்ரர்த்தகே ஔணாதிகே உதேவப்ரத்யயமாய், ப்ரத்யயம்-நித்தாகையாலே உபதாவ்ருத்த்யா, "வஸதீதி - வாஸுதேவ:" என்ற வ்யுத்பத்தியாலே நிஷ்பந்நமான வாஸுதேவஶப்தமானது, "ஸர்வத்ரவஸதீதி - வாஸுதேவ:" என்று அதிகரணவ்யுத்பத்யா ஆதாரகத்வலாபேந வ்யாபகப்ரகாரத்தைச் சொல்லாநிற்கச்செய்தேயு மென்றபடி. அதிகரணவ்யுத்பத்தி லப்தமான ஸர்வஶப்தம் ஸாகல்யவாசியாகையாலே குணங்களையுஞ்சொல்லில் ஆத்மாஶ்ரயாநவஸ்த்தாரூப தோஷத்வயம் வருகையாலே குணவ்யதிரிக்த சேதநாசேதநவாசியாகக்கடவது.

(வ்யாப்யபதார்த்தங்களுக்கு வாசகஶப்தமில்லாமையாலும்) என்றது - "ఆక్షేపతఃప్రాప్తాధారికస్యైవగ్రాహ్యత్వాత్" "ஆக்ஷேபத:ப்ராப்தாதாரிகஸ்யைவ க்ராஹ்யத்வாத்" (௩உ௫) என்கிறபடியே - ஆக்ஷேபத: ப்ராப்தமானதன்றிக்கே, ஸ்வத: வ்யாப்யபதார்த்தங்களுக்கு வாசகஶப்தமில்லாமையாலுமென்றபடி.

(அர்த்தபலத்தாலே ஸர்வஶப்தம்புகுந்தாலும்) என்றது - "సర్వత్రాసౌ సమస్తంచవసత్యత్రేతివైయతః। తతస్సవాసుదేవేతి విద్వద్భిఃపరిపఠ్యతే" "ஸர்வத்ராஸௌ

தொ.—இனி, திருத்வாதஶாக்ஷரியினுடைய அபூர்த்தியை யருளிச்செய்கிறார் (வ்யாபகப்ரகாரத்தை) இத்யாதியால். (வ்யாபகப்ரகாரத்தை) என்றது - அந்தர்யாமித்வத்தை யென்றபடி. (சொல்லாநிற்கச்செய்தேயும்) என்றது - "வஸதீதி-வாஸுதேவ:" என்கிற கர்த்தரிவ்யுத்பத்தியாலே சொல்லாநிற்கச்செய்தேயுமென்றபடி. (வாசகஶப்தம்) என்றது - ஸர்வத்ர என்ற ஶப்தமாதல், "ஸர்வம்" என்கிற ஶப்தமாதலென்றபடி. ("ஸர்வம்வஸதி" என்று அர்த்தபலத்தாலே ஸர்வஶப்தம் புகுந்தாலும்) என்றது - "வஸதீதி வாஸுதேவ:" என்கிற வ்யுத்பத்தியால் வாஸரூபார்த்தபலத்தாலே, ஸர்வத்ர என்றது - அதிகரணவாசியான ஸர்வஶப்தம் புகுந்தாப்போலே, "ஸர்வம் அஸ்மிந்வஸதீதி வாஸுதேவ:" என்கிற அதிகரணவ்யுத்பத்தியால், ஸர்வம் என்று - ஸர்வஶப்தம் புகுந்தாலுமென்றபடி.

பி.—"ஸர்வத்ராஸௌ" இத்யாதியாலே - த்வாதஶாக்ஷரிக்கு வ்யாபகப்ரகாரத்தைச்சொல்லாநிற்கச் செய்தேயுமென்றபடி. "ஸர்வத்ராஸௌ" இத்யாதி. "அஸௌ ஸர்வத்ரவஸதீதியதஸ்ஸமஸ்தஞ்ச அத்ராஸ்மிந்வஸதீதி யத:, தத:, ஸவாஸுதேவ:" இதி வித்வத்பி: பரிபட்யதே. வாஸுதேவ

வ்யா.—அதில் குணம் அந்வயியாமையாலும், இனி குணஸித்திக்காக பகவச்சப்தத்தைக் கூட்டிக்கொள்ளவேண்டுகையாலும்,

---

ஏ.—ஸமஸ்தஞ்சவஸத்யத்ரேதிவையதஃ-அதஸ்ஸவாஸுதேவேதி வித்வத்பிஃ பரிபட்ட்யதே” (௩உ௬) என்று நிருக்த்யர்த்தபலத்தாலே ஸர்வஶப்தம் புகுந்தாலுமென்றபடி. (ஸர்வத்ரேதி) ஸர்வத்ர - சேதநாசேதநேஷு, அஸௌ-பரமாத்மா, வஸதி; அத்ர-பரமாத்மநி, ஸமஸ்தம் - ப்ரபஞ்சஜாதம், வஸதி - ஜாதிகுணப்ரபாப்ரபாவாந்நிவத் தததீநஸத்தாக மித்யர்த்தஃ. யதஃ, வஸதி- “అనశ్నన్నన్యోఽభిచాకశీతి” ఇత్యుక్తరీత్యా తద్గతదోషైరసంస్పృష్టః. వసనాత్-వాసుః, ద్యోతనాత్-దేవః, వాసుశ్చాసౌ దేవఇతి-వాసుదేవః, “వాసనాద్ద్యోతనాచ్చైవవాసుదేవంతతోవిదుః” ఇతి. యతస్సర్వత్రవసతి అతః వాసుదేవఇతి ఃద్వద్భిఃబ్రహ్మవిద్భిః పరిపఠ్యత ఇత్యర్థః. “அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி” (௩உ௭) இத்யுக்தரீத்யா தத்கததோஷைரஸம்ஸ்ப்ருஷ்டஃ. வஸநாத் - வாஸுஃ, த்யோதநாத் - தேவஃ, வாஸுஶ்சாஸௌதேவ இதி-வாஸுதேவஃ, “வாஸநாத்த்யோதநாச்சைவ வாஸுதேவம்ததோவிதுஃ” (௩உஅ) இதி. யதஸ்ஸர்வத்ரவஸதி அதஃ வாஸுதேவ இதி வித்வத்பிஃ ப்ரம்ஹவித்பிஃ பரிபட்ட்யதஇத்யர்த்தஃ.

(அதில்) என்றது - அநந்தரமாநந்தமான ஸர்வஶப்தத்தி லென்றபடி. (குணம் அந்வயியாமையாலும்) என்றது - பூர்வவத் ஆத்மாஶ்ரயாநவஸ்தாரூபதோஷங்களுக் கவகாஶமின்றிக்கே ஸர்வஶப்தம்ஸாகல்யவாசியானபோதிலும், கீழ் “ஸர்வத்ர” என்கிறவிடத்தில் குணம் அந்வயியாமையாலும். “సర్వనామ్నాంబుద్ధిస్థావ్యవహితపూర్వపరామర్శకత్వాత్” “ஸர்வநாம்நாம்புத்திஸ்த்தாவ்யவஹிதபூர்வ பராமர்ஶகத்வாத்” (௩உக) என்னும் நியமத்தாலும், குணமந்வயியாமையாலு மென்றபடி.

(குணஸித்திக்காக) என்றது - குணஸித்த்யர்த்தமாகவென்றபடி. (பகவச்சப்தத்தைக் கூட்டிக்கொள்ளவேண்டுகையாலும்) என்றது-“జ్ఞానశక్తిబలైశ్వర్యవీర్యతేజాంస్యశేషతః।భగవచ్ఛబ్దవాచ్యాని” “ஜ்ஞாநஶக்திபலைஶ்வர்யவீர்யதேஜாம்ஸ்யஶேஷதஃ - பகவச்சப்தவாச்யாநி” (௩௩௦) என்கிறபடியே-குணவாசக பகவச்சப்தம் கூட்டிக்கொள்ளவேண்டுகையாலு மென்றபடி.

தொ.—அதில் குணமந்வயியாதாப்போலே, அந்த அதிகரணவாசியான ஸர்வ ஶப்தத்தினுடைய விபக்திபரிணாமமுடைய ப்ரதமாந்தமான ஸர்வஶப்தத்திலும் குணமந்வயியாமையால் உண்டான துக்கத்தையுடையவர்களாய்க் கொண்டு, ஐஶ்வர்ய லாபாதிகளா லுண்டான ஸுகவிஶிஷ்டராவர்களென்றபடி.

பி.—ஶப்தத்துக்கு - வ்யாப்திவாசகத்வம் நிருக்திபலத்தாலேயொழிய அவயவஶக்த்யா அன்றென்ன வருளிச்செய்கிறார். நாராயணபதத்தில் - வ்யாப்தி கண்டோக்திப்ரகாரம்; அயநபதத்திலும் காரணேகர்மணி வ்யுத்பத்தித்வயத்திலும் வ்யாப்திபலமான உபாயோபேயபலங்களைச் சொல்லுகையாலே,

வ்யா.—வ்யாப்திபலத்தைச் சொல்லாமையாலும், திருத்வாதஶாக்ஷரியும் அபூர்ணம். இம்மந்த்ரம், அவைபோலன்றிக்கே, வ்யாப்ய பதார்த்தங்களோடு, வ்யாபகப்ரகாரத்தோடு, வ்யாப்திபலத்தோடு, வ்யாபகனுடைய குணங்களோடு வாசியற ஶாப்தமாகக் காட்டுகையாலே, அவற்றிற்காட்டில்

எ.—(வ்யாப்திபலத்தைச் சொல்லாமையாலும்) என்றது-அந்தர்ப்பஹிர் வ்யாப்திக்கு வ்யாப்யபதார்த்தம் ஆர்த்திகமாகையாலே தத்பலமான பரத்வ ஸௌலப்யங்களைச் சொல்லாமையாலு மென்றபடி. அன்றிக்கே, உபாயோபேயங்களைச் சொல்லாமையாலும் என்னவுமாம். (அபூர்ணம்) என்றது - அர்த்தபூர்த்தியில்லை யென்றபடி.

"த்வாதஶாக்ஷரி" என்னாதே, (திருத்வாதஶாக்ஷரி) என்று கௌரவித்தது, ஸ்ரீரங்கராஜனுக்கு ஆராதநமந்த்ரமாகையாலே. ப்ரம்ஹாண்டபுராணே ஸ்ரீரங்கமாஹாத்ம்யே, "సాత్వతంపౌష్కరం చేతి సంహితే పాఞ్చరాత్రకే । తదుక్తేనక్రమేణైవద్వాదశాక్షరవిద్యయా॥ దీక్షితొదీక్షితైస్సార్ధం సాత్వతైర్భగవజ్జ్ఞభిఃపరైః । అష్టాఙ్గేన విధానేననిత్యమర్చ్యయపద్మజ" "ஸாத்வதம்பௌஷ்கரஞ்சேதிஸம்ஹிதேபாஞ்சராத்ரகே - ததுக்தேநக்ரமேணைவத்வாதஶாக்ஷரவித்யயா - தீக்ஷிதோதீக்ஷிதைஸ்ஸார்த்தம்ஸாத்வதைःபஞ்சபிःபரைः - அஷ்டாங்கேநவிதாநேநநித்யமர்ச்சய பத்மஜ" (௩௩௧).

திருவஷ்டாக்ஷரியினுடைய பூர்த்தியை யருளிச்செய்கிறார் (இம்மந்த்ரம்) என்றுதுடங்கி. (இம்மந்த்ரம் அவைபோலன்றிக்கே) என்றது - இந்த திருவஷ்டாக்ஷரிமந்த்ரம், ஷடக்ஷரி த்வாதஶாக்ஷரி மந்த்ரங்கள்போலன்றிக்கேயென்றபடி. (வாசியற) என்றது - தரதமமன்றிக்கேயென்றபடி. (ஶாப்தமாகக்காட்டுகையாலே) என்றது-அத்யாஹாரமாகவும் ஆர்த்தமாகவுமன்றிக்கே, ஶப்ததஃ ப்ரதிபாதிக்கையாலு மென்றபடி. எங்ஙனேயென்னில்; "చేతనాచేతనం సర్వం నారమిత్యభిధీయతే" "சேதநாசேதநம்ஸர்வம்நாரமித்யபிதீயதே" (௩௩௨) என்கிறபடியே - சேதநாசேதநரூப வ்யாப்யபதார்த்தங்களை நாரஶப்தத்தாலும், "అన్తర్బహిశ్చతత్సర్వం వ్యాప్యనారాయణస్థితః" "அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம்வ்யாப்யநாராயணஸ்த்திதஃ" (௩௩௩) என்கிறபடியே - அந்தர்பஹிர்வ்யாபகப்ரகாரத்தை நாராயணபதத்தில் தத்புருஷபஹுவ்ரீஹிஸமாஸங்களாலும் வ்யாப்திபலமான பரத்வஸௌலப்யங்களையும், அந்தர்யாமித்வோபாயத்வோபேயத்வங்களையும், நாராயணபதத்தில் "நாராணும் அயநம்" என்று தத்புருஷனாலே ஸமஸ்தவஸ்துஸத்தாநிர்வஹணார்த்தம் தானுதாரமாயிருக்கையாகிற பரத்வமும், "நாராஃ அயநம் யஸ்ய" என்று பஹுவ்ரீஹியாலே பெரியவனுனதான் ஸத்தாநிர்வஹணார்த்தம் ஸமஸ்தசேதநாசேதநங்களிலும் தன்னை யமைத்துக்கொண்டு புகுந்திருக்கையாகிற ஸௌலப்யமும், ஸமஸ்த சேதநாசேதநங்களிலும் ஸத்தாநிர்வஹணார்த்தம் அந்தராத்மதயாவஸ்த்திதனுய்க்கொண்டு நியந்தாவாயிருக்கையாகிற பரத்வமும், அயந

மூ.—கஉ. இத்தை வேதங்களும்,

வ்யா.—இதுக்கு அர்த்தபௌஷ்கல்ய நிபந்தநமான ஆதிக்யமுண்டு" என்று, மற்ற வ்யாபகமந்த்ரங்களிரண்டினுடைய அபூர்த்தியையும், திருமந்த்ரத்தினுடைய அர்த்தபூர்த்தியையும், ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளையருளிச்செய்தாரிறே.

கஉ.—இதுதனக்கு ஶிஷ்டபரிக்ரஹமுண்டோவென்ன வருளிச்செய்கிறார்,

(இத்தை) என்றுதுடங்கி. அதாவது - விஷ்ணுகாயத்ரியிலே வ்யாபகமந்த்ரத்ரயத்தைச் சொல்லுகிறவளவில் ப்ரதமத்திலே நாராயணஶப்தத்தை ப்ராதாந்யேந ப்ரதிபாதிக்கையாலும், "విశ్వం నారాయణమ్" "விஶ்வம் நாராயணம்" (ஙரு) என்றுதுடங்கி "నారాయణపరం బ్రహ్మ తత్త్వం నారాయణః పరః, నారాయణపరో జ్యోతిరాత్మా నారాయణః పరః, యచ్చ కిఞ్చిజ్జగత్యస్మిన్ దృశ్యతే శ్రూయతేఽపి వా,

---

எ.—பதத்தில்-"ஈயதே அநேநேதி - அயநம்" என்று கரணேவ்யுத்பத்தியால் உபாயத்வத்தையும், "ஈயதேஅஸாவித்யயநம்" என்று கர்மணிவ்யுத்பத்தியால் உபேயத்வத்தையும், "జ్ఞానాదయో గుణా రూపమ్" "ஜ்ஞாநாதயோகுணா:ரூபம்" (ஙஙச) என்று துடங்கி, "తత్సర్వం నారముచ్యతే" "தத்ஸர்வம்நாரமுச்யதே" (ஙஙரு) என்கிறபடியே - நாரஶப்தத்தாலே வ்யாபகனுடைய ஸ்வரூபநிரூபகங்களான ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளையும், நிரூபிதஸ்வரூபதர்மங்களான ஜ்ஞாநஶக்த்யாதிகளையும், வாத்ஸல்ய ஸௌஶீல்யாதி குணங்களையும் ப்ரதிபாதியாநின்றதிறே.

[மற்றை இரண்டுக்கும்]-வாஸுதேவ விஷ்ணுஸம்ஜ்ஞிக வ்யாபக மந்த்ரங்களிரண்டுக்கும், [அஶிஷ்டபரிக்ரஹமும் அபூர்த்தியுமுண்டு]-நிர்விஶேஷசிந்மாத்ரவஸ்த்வாதிகளான குத்ருஷ்டிகள் மிகவு மாதரித்துப் போருகையாகிற அஶிஷ்டபரிக்ரஹமும், வ்யாப்யாத்யாஹாராதி ஸாபேக்ஷதையாலே அர்த்தாபூர்த்தியுமுண்டு" என்று மூலார்த்தம்.

கஉ.—உத்தரவாக்யஸ்ய ஸங்கதி: (இதுதனக்கு) இத்யாதி.

வேத விரும்பின ப்ரகாரத்தை ப்ரமாணோபந்யாஸபூர்வகமாக வருளிச்செய்கிறார் (அதாவது) என்று துடங்கி. (விஶ்வம்நாராயணம்) விஶ்வம் - ஸ்வரூபஸர்வதத்த்வமாய், நாராயணம் - பத்த முக்த நித்யரூபேண மூன்றுவகையாயிருக்கிற ஆத்மாக்களுக்கும், போக்யபோகோபகரண போகஸ்தாநரூபேண மூன்றுவகையான அசேதநங்களுக்கும், அந்தர்யாமியாயுதாரண நியமந ரக்ஷணங்களைப் பண்ணிக்கொண்டிருக்குமவனாய்; நாராயணபரம்ப்ரம்ஹ - பரப்ரம்ஹவாச்யனும் நாராயணனே! பரதத்த்வமும் நாராயணனே! பரம்ஜ்யோதியும் நாராயணனே! பரமாத்மாவும் நாராயணனே! இந்த ஜகத்தில் ப்ரத்யக்ஷத்தாலே காணப்பட்டும் ஶ்ருதியாலே கேட்கப்பட்டுமிருக்கிறது யாதொருவஸ்து

வ்யா.—अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणः स्थितः'' "நாராயணபரம்ப்ரம்ஹதத்த்வம்நாராயணஃபரஃ, நாராயணபரோஜ்யோதிராத்மாநாராயணஃபரஃ, யச்சகிஞ்சிஜ்ஜகத்யஸ்மிந்த்ருஶ்யதேஶ்ரூயதேபிவா, அந்தர்பஹிஶ்சதத்ஸர்வம் வ்யாப்யநாராயணஸ்த்திதஃ" (௬ரு) என்று ஸகலவேதாந்த ஸாரபூதமான நாராயணாநுவாகத்திலும், "एको ह वै नारायण आसीत् न ब्रह्मा नेशानो नेमे द्यावापृथिवी" "ஏகோஹவைநாராயண ஆஸீத், நப்ரம்ஹாநேஶாநோநேமேத்யாவாப்ருதிவீ" (௬௬) என்று மஹோபநிஷத்திலும், "चक्षुश्च द्रष्टव्यं च नारायणः, श्रोत्रं च श्रोतव्यं च नारायणः" "சக்ஷுஶ்சத்ரஷ்டவ்யஞ்சநாராயணஃ, ஶ்ரோத்ரஞ்சஶ்ரோதவ்யஞ்சநாராயணஃ" (௬எ) என்றுதுடங்கி "दिशश्च प्रदिशश्च नारायणः" "திஶஶ்சப்ரதிஶஶ்சநாராயணஃ" (௬எ) என்று முடிவாக நடுவுடைய ஸுபாலோபநிஷத்திலும், "यस्यात्मा शरीरं यस्य पृथिवी शरीरं" "யஸ்யாத்மாஶரீரம்யஸ்யப்ருதிவீஶரீரம்" (௬அ) என்றுதுடங்கி "यस्य मृत्युः शरीरं" "யஸ்யம்ருத்யுஶ்ஶரீரம்" (௬அ) என்கிறதிருக நடுவுள்ள பர்யாயங்கள்தோறும் "एष सर्वभूतान्तरात्मा अपहतपाप्मा दिव्यो देव एको नारायणः" "ஏஷஸர்வபூதாந்தராத்மாபஹதபாப்மாதிவ்யோதேவ ஏகோநாராயணஃ" (௬௯)

எ.—அந்த ஸகல ப்ரமாண ப்ரதிபந்நமான வஸ்துவை யெல்லாவற்றையும் உள்ளோடு புறம்போடு வாசியற வ்யாபரித்து அந்தராத்மாவாய்க்கொண்டு நிற்கிறவன் நாராயணன்; நாராயணனொருவனுமே உளனன்; ப்ரம்ஹாவுமில்லை, ருத்ரனுமில்லை; இந்த த்யாவாப்ருதிவிகளுமில்லை, நக்ஷத்ரங்களுமில்லை; காண்கிற கண்ணும் காணப்படுகிறதும் நாராயணன்; கேட்கிற செவியும் கேட்கப்படுகிறதும் நாராயணன்; திக்குக்களும் விதிக்குக்களுமெல்லாம் நாராயணனே; யாவனொருவனுக்கு ஜீவாத்மா ஶரீரமாயிருக்கிறது, யாவனொருவனுக்கு ப்ருதிவி ஶரீரமாயிருக்கிறது, யாவனொருவனுக்கு ம்ருத்யு ஶரீரமாயிருக்கிறது; இவன் ஸர்வபூதங்களுக்கும் ஆத்மாவாய், தத்கததோஷம் தட்டாதபடி அபஹதபாப்மாவாய், பரமபதநிலயனாகையாலே திவ்யனாய், லீலாவிபூதியோகத்தாலே தேவனாய், இப்படி ஸர்வாதிகனாகையாலே அத்விதீயனான நாராயணன்.

பி.—கஉ. (நடுவுள்ள பர்யாயங்கள்தோறும்) என்றது - "யஸ்யாத்மா ஶரீரம்" என்று துடங்கி, "யஸ்யம்ருத்யுஶ்ஶரீரம்" என்கிற ஶ்ருதிமுடிவாக நடுவுள்ளபர்யாயஶ்ருதிகளான ஆரணங்கள்தோறும். முடிவிலே - "ஏஷஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மாதிவ்யோதேவ ஏகோநாராயணஃ" என்று சொல்லுகையாலுமென்றபடி. அதாவது-"யஆத்மநிதிஷ்டந் ஆத்மநோந்தரோய ஆத்மாநவேத, யஸ்யாத்மாஶரீரம், ய ஆத்மாநமந்தரோயமயதி ஸதஆத்மாந்தர்யாம்யம்ருதஃ, யஃப்ருதிவ்யாம் திஷ்டந், ப்ருதிவ்யா அந்தரோ யம் ப்ருதிவீநவேத, யஸ்யப்ருதிவீஶரீரம், யஃப்ருதிவீமந்தரோ யமயதி, ஸஆத்மாந்தர்யாம்யம்ருதஃ, ஏஷஸர்வபூதாந்தராத்மாபஹதபாப்மாதிவ்யோ தேவ ஏகோநாராயணஃ" என்கிறபடியே - உபநிஷத்கோஶங்களிலுள்ள நடுவுள்ளபர்யாயஶ்ருதிகளைக் கண்டுகொள்வது. ஏகார்த்தத்தை அநேகதரம் சொல்லுகையாலே, பர்யாயஶ்ருதிகளென்கிறது.

வ்யா.—என்று அந்தர்யாமி ப்ராஹ்மணத்திலும் வாஸுதேவவிஷ்ணுஶப்தங்களை யநாதரித்துநாராயணஶப்தத்தையிட்டு பகவத்ஸ்வரூபாதிகளை நிர்த்தேஶிக்கையாலும், அபௌருஷேயமாய், நித்யநிர்த்தோஷமாய், ஸ்வதப்ரமாணங்களான வேதங்களும் விரும்பிற்றின. “యథా సర్వేషు దేవేషు నాస్తి నారాయణాత్పరః । తథా సర్వేషు మన్త్రేషు నాస్తి చాష్టాక్షరాత్పరః” “భూత్వోర్ధ్వబాహురద్యాత్ర సత్యపూర్వం బ్రవీమి వః। హే పుత్రశిష్యాశ్శృణుత న మన్త్రోష్టాక్షరాత్పరః” “யதா ஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத்பரः - ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பரः” “பூத்வோர்த்வபாஹுரத்யாத்ர ஸத்யபூர்வம்ப்ரவீமிவः - ஹேபுத்ரஶிஷ்யாஶ்ஶ்ருணுதநமந்த்ரோஷ்டாக்ஷராத்பரः” (௪௦) “సర్వవేదాన్తసారార్థస్సంసారార్ణవతారకః । గతిరష్టాక్షరో నౄణామపునర్భవకాఙ్క్షిణామ్” “ஸர்வவேதாந்தஸாரார்த்தஸ்ஸம்ஸாரார்ணவதாரகः - கதிரஷ்டாக்ஷரோந்ருணாமபுநர்ப்பவகாங்க்ஷிணாம்” (௪௧) “ఆర్తా విషణ్ణాశ్శిథిలాశ్చ భీతా ఘోరేషు చ వ్యాధిషు వర్తమానాః । సంకీర్త్య నారాయణశబ్దమాత్రం విముక్తదుఃఖాస్సుఖినో భవన్తి” “ஆர்த்தாவிஷண்ணாஶ்ஶிதிலாஶ்சபீதாகோரேஷுசவ்யாதிஷுவர்த்தமாநாः- ஸங்கீர்த்யநாராயணஶப்தமாத்ரம்விமுக்தது:காஸ்ஸுகிநோபவந்தி” (௪௨)

எ.—(பகவத்ஸ்வரூபாதிகள்) என்கிறவிடத்தில், (ஆதி)ஶப்தத்தாலே குணசேஷ்டிதங்களைச் சொல்லுகிறது. (நிர்த்தேஶிக்கையாலும்) என்றது-ப்ரதிபாதிக்கையாலுமென்றபடி. (விரும்பிற்றின) - ஆதரித்தன, பரிக்ரஹித்தனவென்று கருத்து.

ப்ருஹதாரீதே - யாதொருபடி ஸர்வதேவர்களிலும் வைத்துக்கொண்டு நாராயணனிற்காட்டில் பரமாயிருப்ப தொன்றில்லை, அப்படியே ஸர்வமந்த்ரங்களிலும் வைத்துக்கொண்டு திருவஷ்டாக்ஷரத்திற்காட்டில் பரமில்லை. புத்ரஶிஷ்யர்களைக்குறித்துக் கையெடுத்து ஶபதபூர்வகமாகச் சொல்லுகிறேன் கேளுங்கோள், திருவஷ்டாக்ஷரத்திற்காட்டிற் பரமாயிருப்பதொருமந்த்ரமில்லை; ஸர்வவேதாந்த்தங்களிலும் பரமான அர்த்தமாய், ஸம்ஸாரமாகிறகடலைக் கடத்துவதான திருவஷ்டாக்ஷரம், மோக்ஷகாங்க்ஷிகளான புருஷர்களுக்குப் புகலிடம்.

(ஆர்த்தா) இதி-(ஆர்த்தாः)-நஷ்டைஶ்வர்யகாமாः. (விஷண்ணாः)-அபூர்வைஶ்வர்யகாமாः. ஶிதிலாः-பகவத்ப்ராப்திரஹிதாः, ஆத்மப்ராப்திகாமாः. பீதாः - பகவத்ப்ராப்திவ்யதிரேகேண ஸம்ஸாரணாத் பீதாः. “யாவதாத்மபாவி அஶரீரியாய்த் திரிவாரொருவன்” இத்யநுக்ருஹீதரீத்யா, கேவலஸ்யாபி ஸம்ஸாரித்வாத். “ఘోరేషు చ వ్యాధిషు వర్తమానాః” “கோரேஷுசவ்யாதிஷுவர்த்தமாநாः”. “యన్ముహూర్తం క్షణం వాపి” “யன்முஹூர்த்தம் க்ஷணம்வாபி” (௩௩௬) “వరం హుతవహజ్వాలా” “வரம்ஹுதவஹஜ்வாலா” (௩௩௭) “తతః ప్రాప్తి మహాదుఃఖ” “ததப்ராப்திமஹாது:க்க” (௩௩௮) இத்யாதிரீத்யா ப்ரஸித்தாः பரமார்த்தாः. நாராயணஶப்தமாத்ரம் - நாராயணஶப்தோ மூலமந்த்ரோபலக்ஷணம். ஏகதேஶோநதத்ஸமுதாயஸ்யாபிஸ்மரணஸம்பவாத், தத்ரஶப்தஶக்த்யாரக்ஷண விஷயேது “సాఙ్కేత్యం పారిహాస్యం చ” “ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யஞ்ச” (௩௩௯) இத்யுக்தரீத்யா அமுத்ரைகதேஶோநாபி கார்யகரத்வாத் மாத்ரஶப்த ப்ரயோகः. அர்த்தபோதநே ரக்ஷணவிஷயேது நாராயணஶப்தஸ்மாரித மூலமந்த்ரஸ்ய பரிபூர்ணோபதேஶதயா மந்த்ராந்த்தராநபேக்ஷயம் - மாத்ரஶதார்த்ததः. ஶிஷ்டம் ஸ்பஷ்டம்.

வ்யா.—“ నారాయణేతిశబ్దోఽస్తి వాగస్తి వశవర్తినీ । తథాపి నరకే ఘోరే పతన్తీతి కిమద్భుతమ్” “நாராயணேதிஸப்தோஸ்திவாகஸ்திவஸவர்த்திநீ - ததாபிநரகேகோரேபதந்த்தீதிகிமத்புதம்” (௪௩) “కింతత్ర బహుభిర్మన్త్రైః కింతత్ర బహుభిర్వ్రతైః । నమో నారాయణాయేతి మన్త్రస్సర్వార్థసాధకః” “கிம்தத்ரபஹுபிர்மந்த்ரை꞉கிம்தத்ரபஹுபிர்வ்ரதை꞉ - நமோநாராயணாயேதிமந்த்ரஸ்ஸர்வார்த்தஸாதக꞉” (௪௪) இத்யாதிகளாலே, வேதார்த்தோப ப்ரும்ஹணங்களாயிருக்கிற ஸ்வப்ரபந்தங்களிலே பலவிடங்களிலு மித்தை ஸ்லாகித்துக்கொண்டு செல்லுகையாலே, வேதார்த்தவிஸதீகரண ப்ரவ்ருத்தரான வ்யாஸாதிபரமருஷிகளும் விரும்பினார்கள்;

எ.—(நாராயணேதி)-நாராயண என்கிற ஸப்தமுண்டு, அத்தைச் சொல்லுகைக்கு வாகிந்த்ரியமுண்டு, இப்படியிருக்க, கோரமான நரகத்திலே என்னவென்று விழுகிறார்கள்; இதோராஸ்சர்யம்.

(கிம்தத்ர) இதி - திருமந்த்ரமானது, ஸர்வார்த்தத்தையும் ஸாதித்துக் கொடாநிற்குமதுண்டாயிருக்க, அநேக மந்த்ரங்களாலென்ன ப்ரயோஜநமுண்டு? அனேக கர்மாநுஷ்டானங்களாலென்ன ப்ரயோஜநமுண்டு?

(வ்யாஸாதிகள்) என்கிறவிடத்தில், (ஆதி)ஸப்தத்தாலே-பராஸர வால்மீகி ஸௌநக ஸௌநகாதிகளைச் சொல்லுகிறது. (விரும்பினார்கள்)-ஆதரித்தார்கள். சகாரம், உக்தஸமுச்சயம்.

தொ.—௧௨. (நாராயணேதிஸப்தோஸ்தி) என்றது-“వైకుణ్ఠనామగ్రహణమశేషాఘహరం విదుః” “வைகுண்டநாமக்ரஹணம்-அஸேஷாகஹரம்விது꞉” என்கிறபடியே, ‘ஸகலபாபநிவர்த்தகமாய் இவர்கள் ஸுலபமாக வுச்சரிக்கும்படியான நாராயணஸப்த முண்டென்றபடி. (வாகஸ்திவஸவர்த்திநீ) என்றது - அந்தநாராயணஸப்தத்தை யுச்சரிக்கைக்கு ஸ்வாதீனையாய், “நாராயணஸப்தத்தைநீ உச்சரி” என்றால், மாட்டேனென்னாதே, தான்நினைத்தபோது சொல்லும்படியான வாக்குண்டென்றபடி. (ததாபி) என்றது - ஸப்தமும் ஸுலபம், உச்சரிக்கைக்கு வாக்கு ஸ்வாதீனையாயிருக்கவென்றபடி. (நரகே கோரேபதந்தீதிகிம்) என்றது-அந்தஸுலபமான ஸப்தத்தை ஸ்வாதீனையானவாக்காலே ஒருகால்சொல்லி ஸம்ஸாரத்தினின்றும் உத்தீர்ணராகாமல், ஜநங்கள் ஸம்ஸாரத்திலேவிழுகிறபடியென்! என்று சித்ரகுப்தன் யமனைக் கேட்க; யமனும், அத்புதம்; இதுவோராஸ்சர்யம் என்கிறான். அநேகஜல்பம்பண்ணிப்போருகிற இவர்கள்வாயில் நாராயண ஸப்தம் புகுராமைக்கடியானபாபமேதோ.’ என்கிறான். அன்றிக்கே, அநேகஸப்தம் பண்ணிப்போருகிறவிவர்கள்வாயில் இஸ்ஸப்தம்புகுராமையுண்டோ? ஆகிலும், இவர்கள் ஸம்ஸாரத்திலழுந்துகிறது இதிலர்த்தமறியாமையென்றோ, என்று ஆஸ்சர்யப்படுகிறானாகவுமாம்.

(தத்ர) என்றது - அபிமதலாபத்திலென்றபடி. (ஸ்வப்ரபந்தங்களிலே) என்றது - ஸ்வபுராணங்களிலே யென்றபடி.

பி.—(பதந்தி)-விழுகிறீர்கள். (இதிகிம்?)-இது வெது (அத்புதம்)- ஆஸ்சர்யம்.

வ்யா.—"வண்புகழ்நாரணன்"

எ.— முதற்பத்து-இரண்டாந்திருவாய்மொழியில்-பத்தாம்பாட்டு.

எண்பெருக்கந்நலத் - தொண்பொருளீறில
வண்புகழ்நாரணன் - திண்கழல்சேரே.

அழகிது, அப்படியே யாகிறது; பஜநத்துக்கு அவலம்பநமான மந்த்ரமேதென்ன, அதின்னதென்றும், அதனுடைய அர்த்தம் அநுஸந்தேயமென்றும் சொல்லுகிறார். இது தன்னைப் புறம்புள்ளார் ஜபஹோமாதிகளாலே காரியங்கொள்ளாநிற்பர்கள். நம்மாசார்யர்கள் "ஸ்வரூபாநுஸந்தாநத்துக்கிடாயிருக்கிற இதனுடைய அர்த்தாநுஸந்தாநம் மோக்ஷஸாதநம்" என்று தாங்களுமநுஸந்தித்து, தங்களைக் கிட்டினார்க்கு முபதேஸித்துக்கொண்டு போருவர்கள். வேதங்களுக்கும் இவ்வாழ்வார்க்கும் இம்மந்த்ரம் ப்ரஸ்துதமானவாறே, முன்பே ஸப்தத்தைச்சொல்லி அநந்தரம் அர்த்தத்தைச் சொல்லுதல், அன்றியே, முன்பே அர்த்தத்தைச்சொல்லிப் பின்பே ஸப்தப்ரயோகம்பண்ணுதல், செய்யக்கடவதொரு நிபந்தனமுண்டாயிருக்கும்; அதுக்கடி, அர்த்தாநுஸந்தாநம் உத்தேஸ்யமாகையாலே; "யாவையும் எவருந் தானுமமைவுடைநாரணன்"(௧) என்னுதல், "நாரணன்முழுவேழுலகுக்கும் நாதன்"(௨)என்னுதல்,செய்வதொருநிர்ப்பந்தமுண்டு; "𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌬𑌹𑌿𑌶𑍍𑌚 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌯 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃" "அந்தர்ப்பஹிஸ்சதத்ஸர்வம்வ்யாப்யநாராயணஸ்ஸ்த்தித:" (௩௪0) என்னுதல், "𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌪𑌰𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃" "நாராயணபரோஜ்யோதி:" (௩௪௧) என்னுதல், செய்யும்வேதம்.

(எண்பெருக்கந்நலம்)இத்யாதி-இப்பாட்டாலே-திருமந்த்ரத்தை ஸார்த்தமாகவருளிச்செய்கிறார். ஆழ்வான், இப்பாட்டளவும் வரப்பணித்து, இப்பாட்டளவிலே வந்தவாறே. "இத்தை உந்தம்மாசார்யர்கள் பக்கலிலே கேட்டுக்கொள்ளுங்கோள்" என்ன; பட்டரும் சீராமப்பிள்ளையும் எழுந்திருந்துபோகப்புக்கவாறே அவர்களை யழைத்து, "இன்னபோதின்னாரிருப்பார் இன்னார்போவார் என்று தெரியாது, இருந்து கேளுங்கோள்" என்று திருமந்த்ரத்தை உபதேசித்து, இப்பாட்டை நிர்வஹித்து, "இப்பாட்டை யிதுக்கர்த்தமாக நினைத்திருங்கோள்" என்று பணித்தான்.

(எண்பெருக்கு)என்கிறவித்தால்-ஜீவாநந்த்யத்தைச் சொல்லுகிறது. (நலத்து)-இவ்வஸ்துக்கள்தான் அஜ்ஞாநகுணாஸ்ரயமுமா யிருக்கக்கடவதிறே, ப்ரணவத்தில் த்ருதீயபதமான மகாரத்தாலே-ஜ்ஞாநகுணாஸ்ரயமுமாய் ஜ்ஞாநஸ்வரூபனுமா யிருக்குமென்று சொல்லிற்றிறே. (ஒண்பொருள்) அசைதந்யம் அசித்துக்கு ஸ்வபாவமாகாநிற்கச்செய்தே வஸ்துதான் ஜடமுமாயிருக்குமிறே - அஸம்ஜ்ஞாவத்தாயிருக்குமிறே; அங்ஙனன்றிக்கே, இவ்வஸ்துதான் ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாஸமுமாய், தர்மபூதஜ்ஞாநமானதுவும் விஷயங்களை க்ரஹித்துத் தன்னையு மறிவிக்கக்கடவதாயிருக்கும்; அத்தைப்பற்றச் சொல்லுகிறது. (ஈறில) என்கிறவிது-கீழும்மேலும் அந்வயித்துக்கிடக்கிறது. ஈறிலவான ஒண்பொருளையும், ஈறிலவான வண்புகழையுமுடையவனாகையாய்த்து - நாராயணனாகையாகிறது; "𑌭𑌾𑌵𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌮𑌙𑍍𑌗𑌳𑌗𑍁𑌣𑌾𑌹𑌿 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌨𑌃" "பாவத்கமங்களகுணஹீகிதர்ஸநம்ந:" (௩௪௨) தன்னுடைய

தொ.—இனி, ஆழ்வார்கள் விரும்பினபடியை யருளிச்செய்கிறார். (வண்புகழ்நாரணன்) இத்யாதியால். (வண்புகழ்) என்றது-உதாரங்களான கல்யாணகுணங்களை யுடையவனென்றபடி.

வ்யா.—" செல்வநாரணன் " என்று தொடங்கி

ஏ.—கல்யாணகுணங்களோபாதி நித்யமுமாய் ப்ரகாரமுமாயிருக்கு மி வ்வஸ்து என்கைக்காக குணங்களை நிதர்சநமாகச் சொல்லுகிறது; நித்ய ரான த்ரிவிதசேதநரையும், நித்யமான கல்யாணகுணங்களையு முடையனு யிருக்கையாய்த்து - நாராயணனுகையாவது. அவனுடைய (திண்கழல்சே ரே) - இப்படி ஸம்பந்தம் காதாசித்கமாகை தவிர்ந்து நித்யமானபின்பு, ஸ்வ ரூபஜ்ஞாநமுடையாரை அவன்றானொருநாளும் விடானிறே, ஆஸ்ரிதரை யொருகாலும் விட்டுக்கொடாத திண்மையைப்பற்ற (திண்கழல்) என்கிற து. (சேர்) - ஆஸ்ரயி. உன்னுடையதாய் உனக்கு வகுத்ததாயிருந்தபின்பு நீ கடுகஸ்வீகரி; நமஃ என்றபடி... ....*

முதற்பத்து-பத்தாந்திருவாய்மொழி-எட்டாம்பாட்டு.

செல்வநாரணனென்றசொற்கேட்டலும்
மல்கும்கண்பனிநாடுவன்மாயமே
அல்லுநன்பகலுமிடைவீடின்றி
நல்கியென்னைவிடான்நம்பிநம்பியே.

" நாமிதுக்குமுன்பு நினைத்தும் பேசியும் தப்பச்செய்தோம், இனித் தவிருமித்தனை" - என்று " அவன்குணங்கள் நடையாடாததோரிடத்திலே கிடக்கவேணும்" என்றுபோய், ஒருகுட்டிச்சுவரிலே முட்டாக்கிட்டுக்கொ ண்டு கிடந்தார்; அங்கே, வழிபோகிறானொருவன், சுமைகனத்து, " ஸ்ரீமந் நாராயணு" என்றான்; அச்சொல்லைக்கேட்டுத் தம்முடைய கரணங்கள் அங் கே ப்ரவணமாகிறபடியைக்கண்டு விஸ்மிதராகிறார்.

(செல்வநாரணனென்ற சொல்கேட்டலும்) - ஆழ்வார் பரிஸரத்தில், ப்ரம்ஹசாரியெம்பெருமான் பேர்சொல்லுவாரில்லை, அதிலர்த்தாநுஸந்தாந ம்பண்ணவேண்டா வாய்த்து இவர் நோவுபடுகைக்கு. என்போலவென்னி ல், விஷஹரணமந்த்ரம்போலே. அச்சொல்லு செவிப்பட்ட வளவிலே, கண்ணானது என்னை யொழியவே நீர் மல்கப்புக்கது; நெஞ்சும் அவ்வளவி லே, "எங்குற்றாய்?" என்று தேடப்புக்கது. (மாயமே) "அல்லேன்" என்ற கனுகைக்கு நான் வேண்டிற்று, "ஆவேன்" என்று கூடுகைக்கு நான் வே ண்டிற்றில்லையோ! இதோராஸ்சர்யமிருந்தபடியென்! அவன் பின்னைச்செ ய்கிறதென்னென்னில்; (அல்லுமித்யாதி) தம்மபிஸந்தியொழியவே, தம்மு டைய கரணங்களுக்கு பகவதநுபவமே யாத்ரையாம்படி அவன் மேல்விழு கிற காலமாகையாலே "நல்ல அல்லும் நல்ல பகலும்" என்கிறார். திவாராத் ரவிபாகமற எனக்கு ஸ்நேஹித்து பரிபூர்ணனானவன் என்னை ஸ்வீகரித்து என்னைவிட க்ஷமனாகிறிலன்; அவன்பேர்மாத்ரத்தைக் கேட்டவாறே, என் கண்ணானது பனிமல்காநின்றது; நெஞ்சானது தேடாநின்றது; இதோரா ஸ்சர்யமிருந்தபடியென்! என்கிறார். (இடைவீடின்றி) நானொருகால்தேடி விடாநின்றேன், அவன் இடைவிடாதே ஸ்நேஹியாநின்றான். (என்னைவி டான் நம்பிநம்பியே) அபூர்ணனானவென்னை பூர்ணனானான் நம்பிவிடுகிறி லன். (நம்பி)-என்னையொரு மதிப்பனாக நினைத்து. நம்பி, அல்லுநன்பகலு மிடைவீடின்றி நல்கிநம்பி என்னைவிடான்; மாயமே. (நம்பியே) இவனையே

தொ.—(செல்வன்) என்றது = ஸ்ரீமானானவனென்றபடி.

வ்யா.—"வாழ்புகழ்நாரணன்" என்று முடிவாக, ஆதிமத்யாவஸாநமாக நம்மாழ்வாரருளிச்செய்கையாலும்,

---

எ—பரிபூர்ணனென்கிறது. ஸம்ஸாரி சேதநனைப்பெற்று, பெருப்பேறுபெற்றானாயிருக்கிற விவனையே, பரிபூர்ணனென்கிறது லோகத்தார்.... ......*

பத்தாம்பத்து-ஒன்பதாந்திருவாய்மொழி-முதல்பாட்டு.

சூழ்விசும்பணிமுகில்தூரியமுழக்கின
ஆழ்கடலலைதிரைகையெடுத்தாடின
ஏழ்பொழிலும்வளமேந்தியவென்னப்பன்
வாழ்புகழ்நாரணன்தமரைக்கண்டுகந்தே.

பரமபதத்துக்குப்போக உபக்ரமிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்ட ப்ரீத்யதிஶயத்தாலே ஸ்த்தாவரஜங்கமங்களுக்குண்டான விக்ருதியை யருளிச்செய்கிறார்.

(சூழ்விசும்பு)-பூமியைச் சூழும்படி யிடமுடைத்தான ஆகாஶத்திலே. (அணிமுகில்) - ஆபரணமான முகிலென்னுதல், ஆகாஶப்பரப்படங்கலும் அணியப்பட்ட முகிலென்னுதல்.

(தூரியமுழக்கின) தூர்யகோஷத்தைப் பண்ணுகின்றன. (சூழ்விசும்பு) இத்யாதி காந்தப்பரொப்பித்து நின்று பெரிய மண்டபங்களிலே நின்று கொட்டுமாப்போலே காணும் இவையிருக்கிறது. "మన్ద్రంజగర్జుర్జలదాః" "மந்த்ரம்ஜகர்ஜுர்ஜலதாஃ"(ந-சந)இவனைப் பெறுகைக்கடியான அவன் வரவிலேபிறந்த விக்ருதியிறேயிது; இவன்றான் போகப்புக்கால் சொல்லவேண்டாவிறே. அவற்றுக்கு அபிமாநிகளான இந்த்ரவருணபர்ஜந்யங்களைச் சொல்லிற்றாகவுமாம். (ஆழ்கடல்) எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கவற்றான அளவுடைய கடல், தைர்யபங்கம் பாந்து அலையாநின்றுள்ள திரையாகிற கையையெடுத்துக் கூத்தாடிற்றின. (ஏழ்பொழிலும் வளமேந்திய) ஸப்த த்வீபங்களும் புதுக்கணித்தன. உபஹாரங்களைத் தரித்தனவென்றுமாம். இதெல்லா மாரைக்கண்டென்ன, (என்னப்பன்) எனக்கு பரமபந்துவானவன். இவர்களோடு நிருபாதிகஸம்பந்த மவனுக்குண்டானால், அவனோடு ஸம்பந்தமுள்ளவை யெல்லாவற்றுக்கும் அதிகரிக்கவேண்டி யிருக்குமிறே; ராஜபுத்ரன் போகாநின்றால் ராஜஸம்பந்தமுடையார்க்கெல்லாம் கிஞ்சித்கரிக்கவேண்டுமாப்போலே. (வாழ்புகழ்நாரணன்) ஆஶ்ரிதர் வாழும்படி பண்ணவற்றான கல்யாணகுணங்களையுடைய ஸர்வேஶ்வரன். அவன் றன்னைக் கண்டோமென்னின், (அவன் தமரைக்கண்டு.) அவன் கேட்குமென்னும் பீதியாலேயோவென்னில், (உகந்தே) ப்ரீதிப்ரேரிதராய். ...*

தொ.—(வாழ்புகழ்) என்றது - நித்யஸித்தங்களான கல்யாணகுணங்களையுடையவனென்றபடி. ஸர்வத்ர வ்யாப்தங்களான கல்யாணகுணங்களையுடையவனென்றபடியாகவுமாம்.

வ்யா.—"நாடுநகரமுநன்கறிய நமோநாராயணுய" என்றுதொடங்கி

திருப்பல்லாண்டு-நாலாம்பாட்டு.

ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்வந்தெங்குள்குழாம்புகுந்து
கூடுமனமுடையீர்கள்வரம்பொழிவந்தொல்லைக்கூடுமினே
நாடுநகரமும்நன்கறியநமோநாராயணுயவென்று
பாடுமனமுடைப்பத்தருள்ளீர்வந்துபல்லாண்டுகூறுமினே.

ப.—கீழ்-அநந்யப்ரயோஜநரை யழைத்தார்; அவர்கள் மங்களாஶாஸநத்துக்கு ப்ரத்யாஸந்நராகையாலே; நீரிலே நீர்சேர்ந்தாற்போலே சேர்ந்திருக்குமிறே. அவ்வளவிலும் பர்யாப்தி பிறவாமையாலே,"ஈஶ்வரன் கைபார்த்திருக்குமவர்கள்" என்னு மிவ்வளவைக்கொண்டு, ஆத்மப்ராப்திகாமரையும், ஐஶ்வர்யகாமரையும் அழைக்கக்கோலி, முந்துற ஆத்மப்ராப்திகாமரை அழைக்கிருர். ஐஶ்வர்யத்திற்காட்டில் ஆத்மப்ராப்தி உத்க்ருஷ்டமென்னும் நினைவாலே யழைக்கிருரல்லர், அந்த மோக்ஷத்தை யிவர் அநர்த்தமென்றிருக்கையாலே. இனி யெத்தாலே முற்பட வழைக்கிறதென்னில், பகவத்ஸம்பந்தத்துக் குபகரணமான ஶரீரமோக்ஷம் அணித்தாகையாலும், அம்மோக்ஷத்தை ப்ராபித்தால் மீளவொண்ணுமையாலும், ஐஶ்வர்யகாமனுக்கு காலாந்தரத்திலேயாகிலும் பகவத்ஸம்பந்தம்பண்ண யோக்யதையுண்டாகையாலும்; இவனுக்கு அந்த யோக்யதையு மழிகையாலே, தூர்க்கதியைக்கண்டு முந்துறவழைக்கிருர். ப்ரயோஜநாந்தரபரரை "மங்களாஶாஸநம் பண்ண வாருங்கோள்" என்ன, வருவர்களோ வென்னில், பகவத்ப்ராப்தியி லுத்கர்ஷத்தையும், அத்தைப்பற்ற கைவல்யத்திலுடைய நிகர்ஷத்தையும் அறிவித்தால், அத்தைவிட்டு இத்தைப்பற்றவேணும் என்னும் ஆத்மகுணோபேதரையிறே யிவரழைக்கிறது.

(ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்) (ஏடு) என்பது-பொல்லாங்கு. "உங்களைப் பொல்லாதநிலத்திலே யிடுவதன்முன்னம்" என்று பிள்ளையமுதனூர். (ஏடு) என்கிறது - ஸூக்ஷ்மஶரீரத்தை. ஸ்தூலஶரீரத்திற்காட்டில் ப்ரதாநமாய், அதிலுடைய ப்ரயோஜநரூபமாய் ஆப்ரளய மநுவர்த்திக்கையாலே, "பாலேடு" என்னுமாப்போலே சொல்லுகிறது. (நிலத்திலிடுவதன்முன்னம்) ஸ்வகாரணமான மூலப்ரக்ருதியிலே லயிப்பதற்கு முன்னே. (ஏடு) என்று - உடம்புக்குப்பேராய், ஸ்தூலஸூக்ஷ்மரூபமான ஶரீரம் ஸ்வகாரணமான மூலப்ரக்ருதியிலே லயிப்பதற்கு முன்னேயென்னவுமாம். இவ்வாக்யந்தான் - அவர்களுடைய அநர்த்தத்தைக்கண்டழைக்கிருரென்னு மிடந்தோற்றவிருக்கிறதிறே. (வந்து) ஸ்வதந்த்ரராயிருப்பார்க்குத் தம்மளவில் வருமிடத்திலுண்டான தூரத்தைச்சொல்லுகிறது. (எங்கள் குழாம்புகுந்து) கேவலருமொரு ஸமஷ்டியாயிறேயிருப்பது. அது ஸ்வதந்த்ரமாகையாலே அந்யோந்யம் சேராச்சேர்த்தியாயிருக்கும். ஒருத்தருடைய ஸம்ருத்தி ஒருத்தரதாயிறே யித்திரளிலே யிருப்பது. "𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌨𑍀𑌚𑌭𑌾𑌵𑍈𑌃" "பரஸ்பரநீசபாவை:"(ஙசச)என்னக்கடவதிறே. இத்திரளில் புகுவார்க்கு எவ்வள வதிகாரம் வேணுமென்னில்; (கூடுமனமுடையீர்கள்) "புகுருவோம்" என்னும் நினைவேவேண்டுவது. அவிலக்ஷணங்களான புருஷார்த்

தொ.—(நாடுநகரமும் நன்கறிய) என்றது-நாட்டாரும் நகரத்தாரும் நன்ருகவறியும்படியாகவென்றபடி.

எ—தங்களுக்கு புரஶ்சரணங்களும் கனக்கவேண்டியிருக்க, அதில் விலக்ஷணமான வித்திரளிலே புகுகைக்கு புரஶ்சரணம் வேண்டாதே யிருப்பானென்னென்னில்; அவை அப்ராப்தங்களாகையாலே புரஶ்சரணாதிகள் அபேக்ஷிதங்களாயிருக்கிறன; இது ஸ்வரூபப்ராப்தமாகையாலே வேண்டா. மாதாபிதாக்களை யநுவர்த்திக்கைக்கு இச்சையேவேண்டுவது. (உடையீர்கள்) இந்த இச்சையால்வந்த ப்ரயோஜநாதிஶயந்தாலே “வைஶ்ரவணன்” என்னுமாப்போலே அருளிச்செய்கிறார். கூடினைப்பார்க்குச் செய்யவேண்டுவது, முன்புநின்ற சிறுமையைக் குலைத்துவரவேணும். (வரம்பொழிவந்து) “வரம்பொழிய” என்கிறவிது (வரம்பொழி) என்று கிடக்கிறது. ஸர்வேஶ்வரனுக்கு ப்ரகாரபூதனாய், அவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை அநுபவிக்க இட்டுப்பிறந்தவன், “[illegible]” “ஜராமரணமோக்ஷாய” (நசரு) என்கிறபடியே - ஸ்வாநுபவத்தளவிலே யொருவரம்பை யிட்டுக்கொண்டானிறே; அத்தையொழிந்து வாருங்கோள் என்கிறார். (ஒல்லைக்கூடுமினோ) பற்றுகிற புருஷார்த்தத்தினுடைய வைலக்ஷண்யத்தை யநுஸந்தித்தால், பதறிக்கொண்டுவந்து விழவேண்டாவோ. (ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்) என்ற ஶரீரத்தில் அஸ்த்திரதையைப்பற்ற; இங்கு (ஒல்லை) என்கிறது, பற்றுகிற விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தைப்பற்ற. (கூடுமனமுடையீர்கள்) என்றும் (கூடுமினோ) என்று மருளிச்செய்கிறாரிறே யோக்யதையைப்பற்ற. “இத்திரளில் நின்றும் பிறிகதிர்ப்பட்டார் சிலரிவர்கள்” என்று தோற்றுமிறே ஸ்வரூபம் ப்ரகாஶித்தால்.

(நாடுநகரமும் நன்கறிய) இத்திரளிலே புகுருகைக்கு வேண்டுவனவருளிச்செய்தார்; இதுக்குமேல் மங்களாஶாஸநத்துக்கு வேண்டுவன வருளிச்செய்கிறார். (நாடு) என்று - அவிஶேஷஜ்ஞரைச் சொல்லுகிறது; (நகரம்) என்று - விஶேஷஜ்ஞரைச் சொல்லுகிறது. ராஜாவுக்கு ப்ரத்யாஸந்நரிறே நகரஸ்தர். நாட்டார் தூரஸ்த்தரிறே; ஆகையாலே யருளிச்செய்கிறார். (நன்கறிய) நன்றாக வறிய. பகவத் ப்ரத்தியாஸக்தியாலே அவிஶேஷஜ்ஞர் விடும்படியாகவும், அதுதானே ஹேதுவாக விஶேஷஜ்ஞர் பரிக்ரஹிக்கும்படியாகவும். (நன்கறிய) இந்நன்மை யறியவென்னவுமாம். (நமோநாராயணாயவென்று) “இவ்வளவும் போராது, தன் ஸ்வரூபத்தை யுள்ளபடியறிந்து ஸ்வரூபாநுகுணமான கைங்கர்யத்தைப்பெறவேணும்” என்று வைஷ்ணவனாய் வரவேணுமென்று. “[illegible]” “அஹமபிநமம,பகவதஏவாஹமஸ்மி” (நசசு) என்றிறே நமஶ்ஶப்தத்துக்கர்த்தமிருப்பது. ஸ்வாமிபக்கல் அநுகூலவ்ருத்தியிறே புருஷார்த்தமாவது. (பாடுமனமுடைப்பத்தருள்ளீர்) நினைத்திருக்குமளவுபோராது; ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடவேணும் என்னும் நெஞ்சுண்டாம்படியான ப்ரேமத்தை யுடையீராகில். (வந்துபல்லாண்டுகூறுமினே) வந்து, பல்லாண்டுபாடுங்கோள். இத்திரளிலே புகுரவேணுமென்றிருப்பீர், அத்தைச்செய்யுங்கோள்; அவ்வளவும்போராது, உங்களுடைய வ்ருத்திவிஶேஷமும் பெறவேணுமென்றிருப்பீர், திருப்பல்லாண்டு பாடுங்கோள் என்று க்ரியையை யிரண்டாக்கி நிர்வஹிக்கவுமாம்.

வ்யா.—"ஓவாதேநமோநாரணாவென்பன்" என்று பெரியாழ்வாரும்,

ஏ.— பெரியாழ்வார்திருமொழி - ௫-பத்து - ௧-திருமொழி.

நன்மைதீமைகளொன்றுமறியேன்நாரணாவென்னுமித்தனையல்லால்
புன்மையாலுன்னைப்புள்ளுவம்பேசிப்புகழ்வானன்றுகண்டாய்திருமாலே
உன்னுமாறுன்னையொன்றுமறியேனோவாதேநமோநாரணாவென்பன்
வன்மையாவதுன்கோயிலில்வாழும்வைட்டவனென்னும்வன்மைகண்டாயே.

(நன்மையித்யாதி) நான் திருநாமஞ் சொல்லுகை அத்தலைக்கு நன்மையாய்த் தலைக்கட்டுகிறதோ? தீமையாய்த் தலைக்கட்டுகிறதோ? அறிகிறிலேன். இவனைப்பார்த்தால் தோஷமாய், அவனைப் பார்த்தால் குணமாயிருக்கும்; இத்தலையைப் பார்த்தால் அபராதமாய், அத்தலையைப் பார்த்தால் அபராதஸஹமாயிருக்கும். (நாரணாவென்னுமித்தனையல்லால்) "நல்கத்தானாகாதோ நாரணனைக் கண்டக்கால்" (௩) என்று அபராத ஸஹத்வத்தைக்காட்டும் திருநாமமிறே. ஸம்ஸாரிக ளபராதத்தைப் பொறுத்துவிடமாட்டாதே நிற்கிறவிடமிறே. (புன்மையால்) தண்மையால். (உன்னை) ஸர்வாதிகனை வுன்னை. (புள்ளுவம்பேசி) க்ருத்ரிமஞ்சொல்லி. (௪) * என்கொள்வனுன்னைவிட் டென்னும் வாசகங்கள் சொல்லுகிறே னல்லேன் (புன்மை) - ப்ரயோஜநத்தை யாசைப்படுகை; (நன்மை) - மோக்ஷத்தை. யாசைப்படுகை. "பெருமக்கள்" என்று * பேராளன்பேரோதும் பெரியோரிறே. "மாசூணாவான்கோலத்தமரர்கோன்." (௫) (திருமாலே) "மைதிலியுந்துதிசெய்யநின்ற" (௬) என்று - ஸ்தோத்ரத்துக் கதிகாரி பிராட்டியிறே. பிரீதிக்குத்தோற்றுச்சொல்லுமவளிறே. "தன்னாகத்திருமங்கை"(௭)என்று அவளுக்கு அநுபவம் ஸத்தாஸித்தியானாற்போலே, எனக்கும் திருநாமம் சொல்லுகை ஸத்தாஸித்தி அன்றிக்கே, ஸர்வாதிகத்வம்; "வானவர்சிந்தையுள்வைத்துச் சொல்லும் செல்வன்" (௮) ப்ரயோஜநத்தோடு சொல்லில் பகவந்மந்த்ரம் கழியுண்கிறதிறே. இதரபலங்களை விட்டு மோக்ஷத்துக் குறுப்பாகச் சொல்லப்பாரும் என்ன (உன்னுமாறுன்னையொன்றுமறியேன்) ஶாஸ்த்ரோக்தமாக நிரந்தரஸ்ம்ருதிபண்ண வறியேன். (ஓவாதேநமோநாரணாவென்பன்) ப்ரயோஜநம் பெற்றவாறே குலையும் ஐஶ்வர்யகாமர்க்கு, அங்கி கைப்பட்டவாறே குலையும் உபாஸகர்க்கும் இதுதானே ப்ரயோஜநமாகையாலே, ப்ரபந்நர்க்குக் குலையாது. (ஓவாதே) இது மாறினால் எனக்கு ஸத்தை குலையும். சொல்லாதபோது ஸத்தை குலையுமென்பது சொல்லில் உனக்கு அவத்யம் என்பதாகாநின்றீர்; நல்ல வன்மையாயிருந்ததி! என்ன; அவ்வன்மைக்குக் குறை யென்னென்கிறார் மேல். (உன்கோயிலில்) இத்யாதி.—வன்மை - மிடுக்கு. "கோயிலில்வாழும்" என்று புறம்புள்ள அபிமாநம் குலைகையாலும், தாம் அநந்யப்ரயோஜநராகையாலும் இவருடைய ராஜகுலமிருக்கிறபடி. (கோயிலில்வாழும்) - "భవద్విషయవాసినః" "பவத்விஷயவாஸிநஃ," (௩௪௭) "இவற்றின்புறத்தாமென்றெண்ணேல்" என்று பகவதபிமாநமுள்ள தேசத்தே கிடக்கையிறே தங்களுக்குப் பேறாக நினைத்திருப்பது. உன்னல் - நினைத்தல்....................*

தொ.—(ஓவாதே) என்றது - விச்சேதியாமே யென்றபடி.

வ்யா.—" நாத்தழும்பெழநாரணு" என்று தொடங்கி "நலந்திகழ்நாரணன்" என்று பெருமாளும்,

எ.— பெருமாள் திருமொழியில் "தேட்டருந்திறல்" [உ] என்கிற திருமொழியில் நாலாம்பாட்டு.—

தோய்த்ததண்டயிர்வெண்ணெய்பாலுடனுண்டலுமுடன்றுய்ச்சிகண்
டார்த்ததோளுடையெம்பிரானென்னரங்கனுக்கடியார்களாய்
நாத்தழும்பெழநாரணுவென்றழைத்துமெய்தழும்பத்தொழு
தேத்தியின்புறுந்தொண்டர்சேவடியேத்திவாழ்த்துமென்னெஞ்சமே.

(தோய்த்த தண் தயிர்வெண்ணெய் பால்) - கடைந்து பிரித்த வெண்ணெய், அதுக்குறுப்பாகத் தோய்த்த தயிர், அதுக்கடியான பால்; (உடனுண்டலும்) - இவையடங்க நிஶ்ஶேஷமாக வொருகாலே அமுதுசெய்தவாறே; உடைக்கொளுவிட்டவாறே கோபித்தாள் தீராவெகுளியளாய். ஸ்நேஹத்துக்கவதியுண்டாகிலிறே கோபத்துக் கவதியுண்டாவது. (ஆய்ச்சிகண்டு) - வாயது கையதுவாகக் கொண்டியோடே கண்டுபிடித்தாளாய்த்து. (ஆர்த்த தோளுடை யெம்பிரான்) - கண்டவாறே பிடித்துக்கொண்டு கட்டினாள். (எம்பிரான்) - ஆஶ்ரிதஸ்பர்ஶமுள்ள த்ரவ்யத்தாலல்லது செல்லாமைகாட்டி என்னை அநந்யார்ஹனுக்கினவன். (என்னரங்கனுக் கடியார்களாய்)-அவதாரகாலத்தில் இழந்தார் இழவுதீர வந்து ஸுலபரான பெரிய பெருமாளுடைய செயலாலே எழுதிக்கொடுத்தவர்களாய்த்து. (நாத்தழும்பெழ) - நாவானது தழும்பேறும்படி; (நாரணுவென்றழைத்து)- 'அம்மே!' என்பாரைப்போலே திருநாமத்தை யடைவுகெடச் சொல்லி; (மெய்தழும்பத் தொழுது) - ப்ரணாமம் பண்ணினபடி தோற்ற, உடம்பெல்லாம் தழும்பாகச் சிறியாத்தானைப்போலே; (ஏத்தி) - இப்படிப்பட்ட செயல்களைச்சொல்லி யேத்தி; (இன்புறும் தொண்டர்சேவடி) - மநஸ்ஸிலேவைத்து ஏத்துகையாலே விஷயத்தைக் கிட்டினால் பிறக்கும் நிரதிஶயாநந்த யுக்தராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீபாதங்களை; (தொண்டர்சேவடியேத்தி வாழ்த்துமென்னெஞ்சமே) - அவர்கள்தாங்கள் அகப்பட்ட நவநீத சௌர்யத்தில் போகாது என்நெஞ்சு; அதிலே அகப்பட்டவர்கள்தங்களை ஏத்தி வாழ்த்துமித்தனை. ஏத்திவாழ்த்துமிச்செயலுக்கிவர்கள் நிலவராவதே என்று ஸ்தோத்ரத்தைப்பண்ணி, இது நித்யமாகவேணுமென்று மங்களாஶாஸநம் பண்ணும் என்நெஞ்சு. சாத்துப்பாட்டு.—

தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள் திறல்விளங்குமாருதியோ டமர்ந்தான்றன்னை, எல்லையில்சீர்த்தயரதன்றன்மகனய்த்தோன்றிற்றதுமுதலாத்தன்னுலகம்புக்கதீரு, கொல்லியலும்படைத்தானைக்கொற்றவொள்வாள் கோழியர்கோன்குடைக்குலசேகரன் சொற்செய்த, நல்லியலின்தமிழ்மாலைபத்தும்வல்லார் நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரே.

"[Sanskrit, Grantha script]" "பாவோநாந்யத்ரகச்சதி" (ஙசஅ) என்று அங்குப்போகேனென்ற திருவடியை விடமாட்டாமே இங்கேவந்து நித்யவாஸம் பண்ணுகிறவனை. (எல்லையில்சீர்) இத்யாதி - ஸஹ்ஸ்ரகுணனான சக்ரவர்த்திக்கு, "[Sanskrit, Grantha script]" "பிதரம்ரோசயாமாஸ" (ஙசக) என்று பிள்ளையாய்ப் பிறந்ததுதொடக்கமாக, பரமபதம் புக்கதுமுடிவாக உண்டான ஸ்ரீராமாயணகதையை.

தொ.—(நாத்தழும்பெழ) என்றது-நாவானது தழும்பேறும்படியென்றபடி. (நலந்திகழ்) என்றது - குணங்களாலே விளங்குகிறவென்றபடி.

வ்யா.—"நான்முகனை நாராயணன் படைத்தான்" என்று தொடங்கி,

எ.—(கொல்லியலும் படைத்தானை) - கொலையை முயலாநின்றுள்ள வேலையுடைய படையையுடையராய். (கொற்றவொள்வாள்) - வெற்றியையும் அழகையுமுடைய வாளையுடைய. (கோழியர்கோன்) - கோழியர்க்குக் கோன். (கோழி) - உறையூர்; (கோன்) - சோழராஜன். (குடைக்குலசேகரன் சொல்செய்த) - வெண்கொற்றக் குடையை யுடையரான ஸ்ரீகுலசேகரப்பெருமாளருளிச்செய்த. (நல்லியல் இன்தமிழ்மாலை பத்தும்வல்லார்) - அழகிய இயலை உடைய தமிழ்மாலை பத்தும் வல்லார். (நலந்திகழ்நாரணன் அடிக்கீழ்நண்ணுவார்) - பரமபதத்திலே விளங்காநின்றுள்ள ஸர்வேஶ்வரன் திருவடிகளைக் கிட்டப்பெறுவார்கள்.

நாலாந்திருவந்தாதி - முதல்பாட்டு.

நான்முகனைநாராயணன்படைத்தான்நான்முகனும்
தான்முகமாய்ச்சங்கரனைத்தான்படைத்தான்—யான்முகமாய்
அந்தாதிமேலிட்டறிவித்தேனாழ்பொருளைச்
சிந்தாமல்கொண்மினீர்தேர்ந்து.

மஹோபநிஷத் ப்ரஸித்தனான நாராயணனே ப்ரஹ்மருத்ர ப்ரமுகமான ஸகலஜகத்துக்கும் காரணபூதன், ப்ரஹ்மாதிகளடங்கலும் கார்யகோடி கடிதமென்று அபாதிதமான வேதார்த்தத்தைச் சொன்னேன்; இத்தைத் தப்ப விடாதே கொள்ளுங்கோளென்று பரோபதேஶ ப்ரவ்ருத்தராகிறார்.

(நான்முகனை நாராயணன் படைத்தான்) இத்யாதி.— "ఏకోహవై నారాయణఆసీత్" "ஏகோஹவை நாராயண ஆஸீத்" (கருo) என்கிறபடியே கார்யரூபமான ஸகலபதார்த்தங்களும் நாமரூபவிபாகாநர்ஹமாம்படி தன்பக்கலிலே லயித்து, தானொருவனுமே காரணபூதனாய்க்கொண்டு உளனாய்நின்ற நாராயணன்; "బహుస్యామ్" "பஹுஸ்யாம்" (கருக) என்கிறபடியே அவ்யவஹிதமான தன் ஸங்கல்பத்தாலே மஹதாத்யண்டபர்யந்தமான ஸமஷ்டிபதார்த்தங்களை ஸ்ருஷ்டித்து, இவ்வருகுண்டான வ்யஷ்டிபதார்த்தங்களை, சதுர்முகமுகேந ஸ்ருஷ்டிக்கைக்காக "యో బ్రహ్మాణం విదధాతి పూర్వమ్" "யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்" (கருஉ) என்கிறபடியே, (நான்முகனை) - ப்ரதமம் ப்ரஹ்மாவை, (படைத்தான்) - ஸ்ருஷ்டித்தான். (நான்முகனும்) - "వేదశబ్దేభ్య ఏవాదౌ దేవాదీనాం చకార సః" "வேதஶப்தேப்யஏவாதௌ தேவாதீநாஞ்சகாரஸ:" (கருங) என்கிறபடியே ஸ்ருஜ்யபதார்த்தங்களினுடைய நாமரூபக்ருத்யங்களை ப்ரதிபாதிக்கிற பழவொழுக்கான நாலுவேதங்களையும் யுகபதேவ உச்சரிக்கைக் குறுப்பான நாலுமுகத்தையுடையனான ப்ரஹ்மாவும். (தான்) - எம்பெருமான்பக்கல் மறித்துக் கேள்விகொள்ளவேண்டாதபடி தானே. (முகமாய்) - ப்ரதாநனாய்க்கொண்டு. "బ్రహ్మణశ్చాపి సంభూత శ్శివః" "ப்ரஹ்மணஶ்சாபிஸம்பூதஶ்ஶிவ:" (கருச) என்கிறபடியே, (சங்கரனை) - ருத்ரனை, (படைத்தான்) - ஸ்ருஷ்டித்தான் என்கிற. (ஆழ்) - ஶ்ருதிஸாகரத்திலே பிறர்க்குத் தெரியாதபடி மறைந்துகிடக்கிற. (பொருளை) - இப்பரமார்த்தத்தை. (யான்) - பகவத்ப்ரஸாத விஶேஷத்தாலே தத்த்வஜ்ஞானத்தைக் குறைவற உடைய நான். (முகமாய்) - பரதத்த்வயாதாத்ம்யவேதநத்தில் ப்ரதாநபூதனாய்க்கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டுமாபோலே ஒருவரால் அடைவு குலைக்கவொண்ணாதபடி. (அந்தாதிமேல்) - அந்

தொ.—(படைத்தான்) என்றது - ஸ்ருஷ்டித்தானென்றபடி.

வ்யா.—"எட்டெழுத்துமோதுவார்கள் வல்லர்வானமாளவே" என்று திருமழிசைப்பிரானும்,

எ.—தாந்ருபமான ப்ரபந்தத்திலே. (இட்டு)-ஏறிட்டு. உங்கள் அநர்த்தங்கண்டு ஸஹிக்கமாட்டாமல், (அறிவித்தேன்) - அர்த்தித்வநிரபேக்ஷமாக அறிவித்தேன். (நீர்) - அறிகைக்கு யோக்யதையுடைய நீங்கள். (தேர்ந்து) ஸம்ஸாரத்தின் பொல்லாங்கையும் நாம் சொல்லுகிற அர்த்தத்தின் அருமை பெருமையையும் யுக்தியுக்தமாக விசாரித்து. (சிந்தாமல்) - அநவதாநாதிகளாலே நெஞ்சில் நின்றும் நழுவி மங்கிப்போகாதபடியாக. (கொண்மின்)- மநஸ்ஸாலே த்ருடகடிதமாக வைத்துக்கொள்ளுங்கோள். இத்தனையும் செய்யவேணுமென்று தன் செல்லாமையாலே கால்கட்டி இரக்கிறார். (ஆழ் பொருளை) - நசிக்கிறபொருளை என்றுமாம்.

திருச்சந்தவிருத்தம் - எழுபத்தேழாம்பாட்டு.

எட்டுமெட்டுமெட்டுமாயொரேழுமேழுமேழுமாய்
எட்டுமூன்றுமொன்றுமாகிநின்றவாதிதேவனை
எட்டினாயபேதமோடிறைஞ்சிநின்றவன்பெயர்
எட்டெழுத்துமோதுவார்கள்வல்லர்வானமாளவே.

(எட்டுமெட்டுமெட்டுமாய்)-சதுர்விம்ஶதி தத்த்வங்களுக்கு மாத்மாவாய்நின்று ஸத்தையை நோக்குமவன்; இந்தஸாமாநாதிகரண்யம் ஶரீராத்மபாவத்தாலேசொல்லுகிறது: இத்தால்-அண்டகாரணமான ப்ராக்ருத ஸ்ருஷ்டியைச்சொல்லுகிறது. (ஓர் ஏழுமேழுமேழுமாய்)-ஸப்தத்வீபங்களும், அவற்றுக்கு தாரகமான ஸப்தகுலபர்வதங்களும், அந்த த்வீபங்களுக் கவச்சேதகங்களான ஸப்தஸமுத்ரங்களுமாய். அண்டாந்தர்வர்த்திகளான ஸர்வலோகங்களுக்கு முபலக்ஷணம். ஸ்தலசரராயும், ஜலசரராயும், பார்வதேயருமான சேதநரை நினைக்கிறது. (எட்டுமூன்றுமொன்றுமாகிநின்ற) - த்வாதஶாதித்யர்க்கும் அந்தராத்மாவாய்நின்ற. இது ஆராத்ய தேவதைகளுக்கு முபலக்ஷணம். "అగ్నావాజ్యాహుతిస్సమ్యక్" "அக்நாவாஜ்யாஹுதிஸ்ஸம்யக்" (௫௫). (ஆதிதேவனை) ஸூக்ஷ்மசிதசித்வஸ்துஶரீரனையும், ஸ்தூலசிதசித்வஸ்துஶரீரனையும், கார்யகாரணங்களிரண்டுமாய்க்கொண்டு ஸர்வஸமாஶ்ரயணீயனானவனை. (எட்டினாயபேதமோ டிறைஞ்சிநின்று) - அஷ்டாங்க ப்ரணாமத்தைப்பண்ணி, அம்முகத்தாலே யாஶ்ரயித்துநின்று. ப்ரணாமத்துக்கு அஷ்டாங்கதையாவது - பகநாபிமாநியாய் விழுகையும், மநோபுத்திகளுக்கு ஈஶ்வரனே விஷயமாகையும், பாத கரத்வய ஶிரஸ்ஸுக்களும் பூமியிலே பொருந்துகையும், "మనోబుద్ధ్యభిమానేన సహన్యస్యధరాతలే। కూర్మవచ్చతురఃపాదాన్ శిరస్తత్రైవపఞ్చమమ్" "மநோபுத்த்யபிமாநேந ஸஹந்யஸ்யதராதலே-கூர்மவச்சதுர:பாதாந்ஶிரஸ்தத்ரைவபஞ்சமம்" (௫௬) என்னக்கடவதிறே. (அவன் பெயரெட்டெழுத்துமோதுவார்கள்) - கீழ்ச்சொன்ன ஜகதந்தராத்மபாவத்துக்கு வாசகமான மந்த்ராந்தரங்களிற்காட்டில் திருவஷ்டாக்ஷரத்தை வாயாலே உச்சரியாநிற்குமவர்கள்; (வல்லர்வானமாளவே)-அர்த்தத்தை மநஸ்ஸாலே அநுஸந்தித்தும், வாயாலே ஶப்தத்தை யுச்சரித்தும், ஶரீரமான ப்ரணாமத்தைப்பண்ணியும் இப்படி மநோவாக்காயங்களாலே பஜிக்குமவர்களிட்ட வழக்கு பரமபதமென்கை. "ఆపోనారాఇతిప్రోక్తాః" "ஆபோநாரா இதிப்ரோக்தா:" (௫௭) என்றும், "నరాజ్జాతానితత్త్వాని" "நராஜ்ஜாதாநிதத்த்வாநி" (௫௮) என்றும் ஜகத்காரணவஸ்துவை நாராயணனென்னக்கடவதிறே.

டிநா.—(வல்லர்) என்றது - ஸமர்த்தரென்றபடி.

வ்யா.—" நான்கண்டுகொண்டேன் நாராயணாவென்னுநாமம்" என்று உபக்ரமதசையிலே ஒருகாற்சொன்னாற்போலே ஒன்பதின்காற்சொல்லி,

ஏ.— பெரியதிருமொழி-முதல்பாட்டு.

வாடினேன்வாடிவருந்தினேன்மனத்தால்பெருந்துயரிடும்பையில்பிறந்து
கூடினேன்கூடியிளையவர்தம்மோடவர்தருங்கலவியேகருதி
ஓடினேனோடியுய்வதோர்பொருளாலுணர்வெனும்பெரும்பதம்தெரிந்து
நாடினேனாடிநான்கண்டுகொண்டேன்நாராயணாவென்னும்நாமம்.

(வாடினேன்)-கொம்பையிழந்த தளிர்போலே. ஆஶ்ரயத்துக் கழிவில்லாமையாலே இன்னும் நோக்குவோமென்னில், நோக்குகைக்கு யோக்யதையுண்டென்கை. "𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌰𑌾𑌘𑌵𑍇𑌣𑌾𑌹𑌮𑍍" "அநந்யாராகவேணாஹம்" (ரு.௫௧) என்கிற பிராட்டியோடொத்த ப்ராப்தி ஸகலாத்மாக்களுக்கு முண்டானபின்பு இப்ப்ராப்தியை யுணர்ந்தால் அநாதிகால மிழந்தவர்க்கு 'வாடினேன்' என்னத்தட்டில்லையிறே. "𑌯𑌶𑍍𑌚𑌰𑌾𑌮𑌂𑌨𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍𑌤𑍁" "யஶ்சராமம்நபஶ்யேத்து" (ரு.௬௦)="ராமம்" என்கிறது-கண்ணுக்கு வகுத்த விஷயத்தைக் காணாதிருக்கிறான் யாவனொருவன்; "யஃ"-எத்தனையேனுமுயர்ந்தவனாகவுமாம். "து"-இது தப்பினாலும். தப்பாதது தப்பினால் வருமது இவ்வளவன்று என்கைக்காக விஶேஷிக்கிறது. "𑌯𑌞𑍍𑌚𑌰𑌾𑌮𑍋 𑌨𑌪𑌶𑍍𑌯𑌤𑌿" "யஞ்சராமோ நபஶ்யதி" (ரு.௬௦)- எத்தனையேனும் சிறியாரும் இவர் கண்பார்வைக் கிலக்காகாதாரில்லை. "யம்" – எத்தனையேனும் சிறியவனென்கிறது. எத்தனையேனும் சிறியாரிறே இவர் கண்பார்வைக்கு இலக்காவார். "யாருமோர்நிலைமையனென வறிவரியவெம்பெருமான் - யாருமோர்நிலைமையனெனவறிவெளிய வெம்பெருமான்". (ரு.௬௧) ப்ரஹ்மாதிகளுடைய ஜ்ஞாநத்துக்கும்அவிஷயமாயிருக்கும்; ஓரிடைச்சிக்கும் வேடனுக்கும் கைபுகுந்திருக்கும். எத்தனையேனும் உயர்ந்தவனாகிலும் பெருமாளுடைய ஒருநாளைப் புறப்பாடு காணாகில் அவன் பெரியனல்லன். எத்தனையேனும் சிறியனானவன் பக்கலிலும் தப்பாது அவருடையபார்வை; தப்புகிறான் யாவனொருவன், அவன் அவஸ்துக்களோடு மெண்ணப்படான்; எண்ணப்படாமையிலே எண்ணப்படும். எல்லாரும்நிந்தித்து சீ! சீ!! யென்னப்படும்;இவனை நிந்திப்பார் வஸிஷ்டாதிகள்தொடக்கமானார். நால்வரிருவரோவென்னில்; "𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌸𑍍𑌸𑌵𑌸𑍇𑌲𑍍𑌲𑍋𑌕𑍇" "நிந்திதஸ்ஸவஸேல்லோகே" (ரு.௬௦)="லோகே நிந்திதஃ"-இவனை நிந்திக்கைக்குரியரல்லாதாரில்லை. விஷயப்ரவணனானவன், இப்போது பழியாய் மேல் நரகமாயிருக்கச்செய்தே தான்"நல்லதுசெய்கிறோம்"என்றிருக்குமிறே. அப்படி,தான் நல்லது செய்கிறோமென்றிருக்குமோ வென்னில்; "𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌪𑍍𑌯𑍇𑌨𑌂𑌵𑌿𑌗𑌰𑍍𑌹𑌤𑍇" "ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே" (ரு.௬௦)–தானும் தன்னை நிந்தித்துக் கொள்ளும். திருக்கைத்தலமிழந்தவன்† "இற்றைப்புறப்பாடுகாணப்பெறுதநாம் கற்பூரமும் எலுமிச்சங்காயும் பெற்றோமாகில், முடிந்து பிழைக்கலாய்த்து" என்றிருக்குமிறே. ஒருநாளைப் புறப்பாடு இழந்தார் வார்த்தை யிதுவானால் அநாதிகால மிழந்தவர்க்கு 'வாடினேன்' என்றல்லது வார்த்தையில்லையிறே. 'வாடினேன்' என்ற இதுதான் எவ்வவஸ்தையைப் பற்றச்சொல்லுகிற வார்த்தை? விஷயப்ரவணராய்ப் போந்தபோது அவற்றை அநுபவித்துக் களித்துப்போருகையாலே, வாட்டமில்லை; பகவத்விஷயத்தில் கைவைத்தபின்புதானே வாட்டமில்லை; ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்து பூர்வவ்ருத்த

தொ.(கண்டுகொண்டு)என்றது-ஶ்ரவணப்ரத்யக்ஷத்தாலேயறிந்தென்றபடி.

† திருக்கைத்தலம்=நம்பெருமாள் திருக்கைத்தலஸேவை.

எ.—த்தை யநுஸந்தித்தபோதை வார்த்தை. ப்ராப்தி ஸமயத்திலிறே பூர்வ வ்ருத்தத்தை ஸ்மரியாநொழிவது. " ஸ்ரீஜநம்ஸ்மரந் " "நோபஜநம்ஸ்மரந்" (ஙகூஉ) என்னுமளவும் வந்ததில்லையிறே. ஜ்ஞாநலாபவேளை யாகையாலே பூர்வ வ்ருத்தந்தா னிவர்க்கு ப்ரத்யக்ஷம்போலேயிறே தோற்றுகிறது. (வாடி) என்கிற இவ்வநுபாஷணம், இரண்டிடத்திலும் பொருள்பெற்றுக்கிடக்கிறது. அநாதிகாலமிவ்விழவு ப்ரவ்ருத்தமாய்ப்போந்ததென்றும், மேலே ஓரநர்த்தத்தை விளைத்ததென்றும் தோற்றுகிறது. விஷயப்ராவண்யம் காதாசித்கமாய் அநுதாபம்பிறந்து மீளுகையன்றிக்கே, அநாதிகால மிதுவே யாத்ரையாய்ப்போந்ததென்றும், இவ்வளவன்றிக்கே இதுக்குமேலே விளைந்ததோரநர்த்தத்தைச்சொல்ல ஒருப்பட்டமையும் தோற்றுகிறது. மேல்விளைந்த அநர்த்தந்தானேதென்னில்: (வருந்தினேன் மனத்தால்) - மாநஸமான க்லேஶத்தை அநுபவித்துப்போந்தேன். இந்த்ரியங்கள் விஷயங்களிலே ப்ரவணமாய், அவற்றை அநுபவிக்கக்கோலி, அவற்றை லபியாமையாலும், லபித்தாலும் அவற்றில் அநுபவிக்கலாவ தொன்றில்லாமையாலும், மாநஸமான க்லேஶத்தை அநுபவித்துப்போந்தேன். ஸர்வேந்த்ரியங்களுக்கும் கந்தமான மநஸ்ஸை ப்ரத்யகர்த்த ப்ரவணமாக்கமாட்டாமையாலே, மாநஸமான க்லேஶத்தை அநுபவித்தேன். இத்தால் சொல்லிற்றாய்த்து - ஶப்தாதிவிஷயங்களிலே ப்ரவணனாய், திருவடிகளை ஒருநாளும் நினைக்கப்பெற்றிலேனென்றபடி. (பெருந்துய ரிடும்பையில் பிறந்து) - விஷயங்களிலே ருசியைப் பிறப்பித்து, வாஸநையை யுண்டாக்கி, ராக த்வேஷங்களை மிகுத்து, இதிலுண்டான அவித்யாகர்மங்களும் ஶரீராரம்ப ஹேதுவாக வந்து பிறந்தேன். (துயர்) என்று - துஃகம். (இடும்பை) என்றும்- துஃகம். இத்தால் - ஶரீரந்தான் துஃகாயதநமுமாய், துஃகஹேதுவுமாயிருக்குமென்கை. துஃகாயதநமுமாய் மேலே அநேகதுஃகங்களை விளைக்கவும்வற்றாயிருக்கை. "பெருந்துயரிடும்பையில்பிறந்து-கூடி-வாடினேன்" என்னாதே, முதலிலே 'வாடினேன்' என்பானென்னென்னில்; கர்மஸம்பந்தமநாதியாய் அசித்ஸம்ஸர்க்கமும் ப்ரவாஹரூபேண நித்யமாயிருக்கையாலே நடுவே ஒன்றைப்பிடித்துச் சொல்லுகிறார். (பிறந்து) - ஜநநமரணங்களில்லாதவாத்மா "செத்தான் பிறந்தான்" என்று வ்யவஹாராஸ்பதமாகையாலே. (கூடினேன்) - நித்யமாய், ஏகரூபமாய், ஜ்ஞாநாநந்தலக்ஷணமாய் பகவச்சேஷமானவாத்மாவை, "தேவோஹம், மநுஷ்யோஹம்" "தேவோஹம் மநுஷ்யோஹம்" என்னலாம்படியானபடி. (கூடினேன்) — அசித்ஸம்ஸர்க்கந்தான் ஸத்தாப்ரயுக்தமென்னலாம்படி பொருந்தினபடி. 'கூடினேன்' என்கையாலே, இதுதான் ஆத்மாவுக்கு ஸ்வரூபமன்று, ஔபாதிகம்-வந்தேறி என்னுமிடம் தோற்றுகிறது. ராஜபுத்ரன்வழிபோகாநிற்க, வேடர்கையிலே அகப்பட்டாற்போலேயிறே ஆத்மாவுக்கு அசித் ஸம்பந்தந்தான் வந்தபடி. அயஃபிண்டத்தை அக்நியினருகே வைத்தால், அக்நிபரமாணுக்கள் ஸூக்ஷ்மரூபேண அதிலே ஸங்க்ரமித்தாதல், வாஸநையாலேயாதல் அதினுடைய ஔஷ்ண்யஸ்வபாவத்தையும் நிறத்தையும் பஜித்து அதுதானென்னலாமாப்போலே, இவ்வாத்மாவும் அசித்ஸம்ஸர்க்கத்தாலே அதுதானென்னலாம்படி அசித்கல்பமானபடி. பரமாணுப்பற்று சிவப்புமாறினாலும் வாஸநையாலே சுடும். (கூடி)-ஶரீரவிஶ்லேஷம் அஸஹ்யமாம்படி பொருந்தினபடி. ஜ்ஞாநம் பிறந்தால் ஶரீரவிஶ்லேஷந்தான் ப்ரார்த்தித்துப் பெறவேண்டும்படியானபடி. (கூடி) என்கையாலே, அநாதிகாலமித்தோடே பொருந்திப்

௭.—ப்ராப்யாந்தர ஸ்ரத்தைகுலைகையும், புருஷார்த்தத்தில் அவிச்சிந்நமான பாரிப்பும், ப்ராப்யம் ஸபலமாம்படியான அபேக்ஷையும் இவை ஆறும் பரிக்ரஹித்த உபாயபலமாய் விளையுமவையிறே! காலமே கண்ணுறங்காதே வந்து துவளும்படியான த்வரையும், போற்றுதற்குப் பொருள் தேடும்படியான கலக்கமும், தங்கள வடிவைக்காட்டி வளைக்கும்படியான ஆர்த்தியும், நோன்பை வ்யாஜமாக்கி வேண்டினவற்றிலபேக்ஷை அற்றபடியும், பரிபூர்ணமாக கைங்கர்யத்தை அபேக்ஷிக்கிறபடியையும், அதில் களையறுத்துத்தரவேணுமென்று சொல்லும்படி ப்ரார்த்திக்கிறபடியையும் காட்டி "நாமுடையோம்" என்ற புண்யத்தினுடைய பலங்களை வெளியிடுகிறார்கள். கீழ்ச்சொன்ன உபாயத்துக்கு வேறொன்றை பலமாக்குகையாவது-மாணிக்கத்தையிட்டு தவிடு கொள்வாரைப்போலேயிறே! அந்த உபாயத்துக்கு உபாயாந்தர நிவ்ருத்தி போலே ஸகலபலஸாதாரணமென்று விரோதியான பலத்தை அபேக்ஷிக்கலாகாதிறே! ஸ்வரூபாநுரூபமான பலத்தில் தங்களுடைய அபிநிவேசத்தை அறிவிக்கவேணுமென்று ச்ருதிசிரஸ்ஸித்தமாய், கருத்தறியும் மூதுவர் கைப்பட்டுக்கிடக்குமதாய், கருந்தரையில் வாஸனையாலே அவர்கள் பிறந்தவிடத்தில் அபேக்ஷிக்குமதாய், அவர்களோடொத்த ப்ராப்தியை உணர்ந்தவர்கள் பாரிக்குமதாய், பகவதநந்யார்ஹசேஷமான வேஷத்துக்கு அத்யந்தமநுரூபமாய், ஈச்வரனுடைய முகவிகாஸத்துக்கு ஹேதுவாயிருந்துள்ள பரம ப்ராப்யத்தை, ப்ரபந்த நிகமநம்பண்ணுகையாலே, எல்லார்க்கும் தெரியும்படி வெளியிட வேண்டுகையாலே, நாட்டார் இசைகைக்கு நோன்பு என்று ஒன்றை வ்யாஜீகரித்துப் புகுந்தோமித்தனை, எங்களுக்கு உத்தேச்யம் உன் திருவடிகளிலே நித்யகைங்கர்யமென்று ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுகிறார்கள். எம்மாவீட்டிலர்த்தத்தோடே தலைக்கட்டுகிறது. எம்மாவீட்டிலே ப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்து, ஒழிவில் காலத்திலே ப்ரார்த்தித்து, அதுதன்னுடைய எல்லைநிலமான பாகவதாநுபவத்தை "நாளும் வாய்க்க" என்று நெடுமாற்கடிமையிலே ப்ரார்த்தித்தார்ஆழ்வார்; அவரிற்காட்டில் இவர்களுக்குள்ளவாசி, "நீராடப்போதுவீர்" "எல்லாரும்போந்தாரோ" என்றுபுருஷார்த்தத்தில் சரமாவதியிலே முதலடியிலே நின்று, அது நிலைநிற்கைக்காக ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணி அர்த்திக்கிறார்கள். "ஆவாவென்றாராய்ந்தருள்" "எம்மேல்விழியாவோ" என்று பெண்கள், அக்ரூரன் மநோரதித்தாப்போலே மநோரதித்துக் கொண்டு வந்தபடியே, நாமும் பெரிய ஆதரத்தோடே புறப்பட்டிருந்து, வந்தகாரியங்களைச் சொல்லுங்கோளென்றுகேட்டு, வேண்டுவனவும் கொடுக்க இசைந்து, பறைகொண்டகாலத்துக்குப்பெறும் ஸம்மாநம்பண்ணுவதாக இசைந்துவந்தகாரியம் தலைக்கட்டிவிட்டோம்,

திரிய "பறைதாராய்" என்று நின்றார்கள்; "பாடிப்பறைகொண்டு" என்றதுக்குமேலேயும் ஒரு பறையுண்டாயிருந்தது, நாமதறிந்திலோம், நமக்கு இதுவேதெரிந்ததில்லை, மேல்விளையும்படி காண்கிறோமென்று பேசாதேயிருந்தான்; எங்கள் த்வரையையும் தலைதடுமாறான பரிமாற்றத்தையும்கண்டுவைத்து இதுக்கு ஹ்ர்தயம் கேட்டிலையே! எங்கள் நினைவைக்கேளாய் என்று துடைதட்டுகிறார்கள். ஸித்தப்பண்ணின ப்ராபக ஸ்வீகாரம் அஸத்ஸமமாம்படியான ப்ராப்யருசியையும், 'உன்றாலே பேறு' என்று அறுதியிட்டால் நீ வரக்கண்டிருக்கவொண்ணாதபடியிருக்கிறத்வரையையும், எங்கள் ஆற்றாமையின் ஸ்வபாவத்தையுங் கேளாயெனகிறார்கள்.

வ்யா.— (சிற்றஞ்சிறுகாலேவந்து) சிறுபெண்களாகையாலே குளிர்காலத்தில் புறப்படமாட்டாத நாங்கள், அறப்போதோடே புறப்பட்டுவரும்படியன்றோ எங்கள்த்வரை இருந்தபடி. இவர்களுக்கு ஆபிமுக்யம் பிறந்தகாலம், ஆத்மஹித சிந்தநத்துக்கு ஸத்வோத்தரகாலமாக விருக்கும் ப்ராஹ்ம முஹூர்த்தமாய் வந்து விழுந்தது. மாஸம் மார்கழிமாஸமாய், பக்ஷம் பூர்வபக்ஷமாய், அதிலே பௌர்ணமியாய், அப்படியே ஒரு நன்னாள்வந்து பலித்தாப்போலே அத்திவஸத்தில் முஹூர்த்தமும் ப்ராஹ்மமாய் வந்து விழுந்தது. (காலை) (சிறுகாலை) (சிற்றஞ்சிறுகாலை) "செங்கல் பொடிக்கூறை" என்று தாமஸரும் உணரும்படியான அளவு-காலையாவது; "ஆய்ச்சியர் மத்தினாலோசைபடுத்த" என்று - இடைச்சிகள் உணர்ந்து ஸ்வகர்த்யத்திலே அதிகரிக்கும்படியான அளவு - சிறுகாலையாவது. "ஆய்ச்சியர்மத்தினாலோசைபடுத்த" என்றதுதான் விடிவுக்கு அடையாளமாகச்சொல்லும்படி, அதுக்கு முன்னே உணர்ந்தார்களிறே தாங்கள்; இவர்களுக்கு, ராத்ரிகழிந்து பகல் வருவதற்குமுன்புத்தை நடுவில் போதையிறே நினைக்கிறது; அஜ்ஞாநதசை குலைந்து ப்ராப்திதசை புகுருவதற்கு முன்புத்தை ஜ்ஞாநதசையைச்சொன்னபடி. முனிவர்களும் யோகிகளும் உணருங்காலம்-சிற்றஞ்சிறுகாலையாவது. ஸம்ஸாரியான நிலைகுலைந்து முக்தனாவதுக்கு முன்பு முமுக்ஷுத்வம் அங்குரித்த தசையிறே! இருள் அகன்றவளவாய், வெளிச்செறிப்புள்ள வளவெல்லாம் ப்ரகாஶியாத வளவாய்த்து; இதரவிஷய ப்ராவண்யத்தால்வரும் அறிவுகேடின்றிக்கே பகவத்விஷயத்தில் ஜ்ஞாநங்கொண்டு நேரான பரிமாற்றமு மின்றிக்கே யிருக்கிறவளவைப் பிடித்தபடி. "காலை நன்ஞாநத்துறை படிந்தாடி" என்று ஜ்ஞாநதீர்த்தாவகாஹநத்துக்கு யோக்யமான காலம் பெற்றபடி. "தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்று ஶ்ரிய:பதியை விஷயீகரிக்கு மதிறே! நன்

ஞானமாவது ; துறைபடிகையாவது - ஸதாசார்யோபதேசமூலமாக, பிராட்டி புருஷகாரமாக, பாகவதர்கள் உசாத்துணையாக, எம்பெருமானைப் பற்றுமது. "உன்மணாளனை எம்மை நீராட்டு" என்று துறைதப்பாமலிழிந்தவர்களிறே இவர்கள். ஓயும்பொழுதின்றிவிடிவுகாணாதபடி நீண்ட ஸம்ஸார காளராத்ரிகழிந்து, "பகற்கண்டேன்" என்று ஒருபகல்முகஞ்செய்கிற ஸமயமிறே! "அத்ர த்வஜ்ஞாநம்" "அந்தகந்தமஜ்ஞாநம்" (௩௯௨) இத்யாதி. காலைமாலை என்று ஒருநியதியில்லையிறே! அவன் தோற்றும்காலம் விடிவாமத்தனையிறே ! திருவாய்ப்பாடிக்கு நாட்டார் விடிவு அஸ்தமயமாய் ஸர்வபூதங்களினுடைய அஸ்தமயம் விடிவாயிறே நடப்பது. "ஆவிர்பூதம் மஹாத்மநா" "ஆவிர்ப்பூதம் மஹாத்மநா" (௩௯௩) என்று அபராத்ரம் விடிவாய்வந்து விழுந்ததிறே! விரியுங்கதிரோபோல்வானிறே! (சிற்றஞ்சிறுகாலே) சிறுகாலே வரில் உன்னைக்காணவொண்ணாதென்று சிற்றஞ்சிறுகாலே வந்தோம். "சிறுகாலே யூட்டி யொருப்படுத்தேன்" என்று மாத்ர்பரதந்த்ரனாய் இளங்கன்று மேய்க்கவேணும், விடிந்தவாறே காலிப்பின்னேபோம், எல்லியும் போதாகவரும், நீராட்டமைத்துவைக்கையாலே ஆடி அமுதுசெய்யும், "அல்லுற்றான் வந்தபின்னை" என்கிறபடியே இருளிலே ஆள்பார்த்து ஊரிலே திரியும், அபிமதைகளை வேண்டின விடங்களிலே புணர்ந்து, இராநாழிகை மூவேழுசென்றவாறே இங்கேகிடைகாட்டவரும், அக்காலமறிந்துவந்து கைக்கொண்டார்கள். நாள்தோறும ஒரு விடிவுண்டாய் நடக்கிறதிறே ! ஸுப்ரபாதமாய்த்து இந்ததிவஸமொன்று மாய்த்து.

அதுக்கடி என்னென்றால் (வந்து) வந்த வருத்தத்தை "வந்து தலைப்பெய்தோம்" என்று கீழே சொன்னார்களிறே! (வந்து) ஸம்ஸாரபதவியில் ஓடினவர்கள் மீண்டுவருவதிலும் வருத்தமுண்டு எங்கள் வரத்துக்கு. தேஹாத்மாபிமாநம்பண்ணி இருப்பாரை எதிரசூழல் புக்குத் திரிகிறவனுடைய யத்நத்தாலே வருவிக்கலாம், நிவ்ருத்திஸாத்யமென்று ஸ்வரூபத்தை யுணர்ந்து வாராதாரை வருவிக்க அரிதிறே ! உபாயஸ்வீகாரத்தில் உபாயப்ரதிபத்தி பண்ணுதபடியான நிலையிலே நிற்கிறவர்களை க்ரியாரூபமானத்தை ஏறிட்டுக்கொண்டு வரும்படிபண்ணுகை அரிதிறே! "உவாசச" "உவாசச" (௩௯௪) என்று பெருமாள் திருவுள்ளத்தைப் புண்படுத்தினாப்போலே சொல்லுகிறார்கள். வரவுக்குநோவுபடுகிறவனை வார்த்தையாலும் புண்படுத்தினான். தான் சரண்யராகப் பற்றிவந்தாரை உண்டாக்கிக் காரியங்கொள்ளமாட்டிற்றிலனென்றதிறே விபீஷணனை; அப்படியே காலடியிட்ட நாங்களேவந்தோம் என்கிறார்கள். "பத்ப்யாமபிகமாச்ச" "பத்ப்யாமபிகமாத்" (௩௯௫)

என்று தாம்வந்தநூரம் பாராதே வாசலளவும் புறப்பட்டதுபோரு த்திலரே! (வந்து) "இவ்விதிபோதுமாகில" என்றுவந்தால் காரியங் கொள்ள விருக்கும் நாங்கள் வரும்படியன்றோ த்வனை யிருந்தபடி. (வ ந்து) பிறந்தவிடத்தில் நின்றும் ஆயர்குலத்திலே வந்து, 'மழைகொ லோ வருகின்றது' என்னும்படி வீதியூடேவந்து, நம்தெருவின் நடுவேவந்து, கதவின்புறமேவந்து, முற்றம் புகுந்து, நம்மில் லம புகுந்து நிமலரணைமேல்வைகி, மாலைபுகுர ப்ராப்தமா யிருக்க படுக்கையை விட்டுப் படிகடந்து, காவலுங்கடந்து, உன்தோரண வாசலிலேவந்து, உட்கட்டிலே புகுந்து, பள்ளிக்கட்டிற் கீழே சிற றஞ்சிறுகாலே வந்த வருத்தமறியவேண்டாவோ? "கறவைகள் பின் சென்று" என்று அந்தப்போக்கு நிகர்ஷமாகச்சொன்னப்போலே இவ் வார்த்தையும் தப்புஎன்றிருக்கிறார்கள். ஸ்வரூபத்தை யுணராதபோது அது ப்ராப்தமாயிருக்கும்; ஸ்வரூபத்தை யுணர்ந்தால் இது ப்ராப்தமா யிருக்கும். உபாயாந்தரத்துக்கு நிவ்ர்த்தி தோஷம்; இவ்வதிகாரிக்கு ப்ரவ்ர்த்தி குற்றம். ப்ராப்யப்ராவண்யம் ஸ்வரூபத்தைமறப்பித்தது. "பூமருவுகோல நமபெண்மை சிந்தித்திராதுபோய்" என்னப்பண்ணு மிறே!

நீங்கள்வந்து செய்த தப்பு என்னென்ன; (உன்னைச்சேவித்து) இதிறே நாங்கள் செய்த தப்பு என்கிறார்கள். எங்கள் ஸ்வரூபத்தை யறி யாவிட்டால் உன் ஸ்வரூபத்தைத்தான் உணர்ந்தோமோ? இத்தலையில் ப்ரிதீபாவனையாயிருக்கை-இவனைவிடில்தான் உளனாகாதபடி யிருக்கு மவனிறே! வரவுதானே மிகையாம்படி யிருக்கிறஉன்னை, அதுக்குமே லே துராராதர்பக்கல் செய்வதெல்லாஞ் செய்தோம். பஞ்சாகநிவித் தையிற் சொல்லுகிற பரிவ்ர்த்தியைக் கரையேறி, துஸ்ஸாதமாய்க் கைபுகுந்தாலும் நிஸ்ஸாரமான விஷயங்களிலே துவண்டு, அதுதன க்கு உறுப்பாக இதரஸேவையிலேஇழிந்து, அவர்கள் முகத்தில் விழி த்து, அவர்கள் முகத்தில் வெம்மைபொறுத்து, நீசபாஷணங்களைப்ப ண்ணித் திரிகையாகிற ப்ரவ்ர்த்தியை அநாதிகாலம் பண்ணிற்று; அத் தைத்தவிர்ந்து, விஷயம் வகுத்தநாய், ஸுசீலனாய், ஸ்வாராதனாய், புலன்கொள் வடிவுபடைத்தவனாய், தானேதன்னைத் தருவானாய், தந் தால் பின்னையொருகாலும் கைவிடாதவனாயிருந்தவனை உசிததாஸ் யம்பண்ணுகை ப்ராப்தமாகச்சொல்லாநிற்க, எதிரே இட்ட நாலடிக் கும் பொறுதே உபசாரஞ்சொல்லுமவன் கருத்தறிகையாலே,பின்னே தொடர்ந்து ஸேவித்ததைக் குற்றமாகச் சொல்லுகிறார்கள். (உன்னைச் சேவித்து) "..." "ஸோபப்யகச்சத்" (௯௧௬) என்று அபிகந் தாவான உன்னை அபிகமனம்பண்ணி குலப்ரஸூதத்திலே த்ர்ப்தனும்

உன்னை நாங்கள் ஸேவிக்கை மிகையன்றே. "சென்று நாம்சேவித்தால்" என்கிற இரண்டிமிகையும் செய்தோமிறே. "பின்னே சென்று" "சூழவேநின்று" என்று எங்களைத் தொடர்ந்து ஸேவிக்கிற உன்னை "ஸ்ருஜு ஷ்டபதவீம்" "பேஜார் முகுந்தபதவீம" (௬௬௭) என்கிறபடியே சுவடு பார்த்துத் தொடர்ந்து திரிந்து. "நாரணன்போமிட மெல்லாம் சோதித்துழிதருகின்றாள்" என்னக்கடவதிறே!

ஸேவித்தவளவேயோ? அதுக்கு மேலேயும் சில செய்திலோமோ? (உன்பொற்றாமரையடியேபோற்றும்) சூட்டக்கண்ட பூவை விலைமதித்து விற்பாரைப்போலே, கண்டு அநுபவிக்கையே ப்ரயோஜநமாயிருக்கிற திருவடிகளைப் பெற்றுவைத்து வேறேயொரு ப்ரயோஜநம் தோற்றும்படியான செயல் செய்த செல்லாமை பாராய். (சேவித்து-போற்றும்) "தொடர்ந்தேத்தவும்" என்கிறபடியே. (உன்-அடி-போற்றும்) ஸ்வரூபகுணாதிகள் போற்றுகிறோமல்லோம். (அடியே-போற்றும்) அங்குத்தைக்கு மங்களாஶாஸநம்பண்ணி, தனக்கும் ரக்ஷை தேடிக்கொள்ளுகையன்றிக்கே, தன்னை அழியமாறியும் அத்தலைக்கு நன்மைகளை ஆஶாஸிக்கை. புத்ரஶிஷ்யதாஸாதிகள் தாங்களும் உண்டு உடுத்து பித்ராதிகளுக்கும் ஶேஷமாயிருக்குமாப்போலன்றிக்கே, அத்தலைக்கே ஶேஷமாயிருக்குமிருப்பு தனக்கு உஜ்ஜீவநமாயிருக்கை. (உன்னடியே போற்றும்) அடியானுக்கு அடியிலேயிறே! ப்ராப்தி. "அடிச்சியோம்" என்கிறஇவர்கள் கூறுளும் துறுப்புக்கூட்டில் போகார்களிறே! (உன் - பொன் - அடி) உலகமளந்த பொன்னடி போற்றுகிறவர்களோ, காடுறைந்த பொன்னடி போற்றுகிறவர்களோ நாங்கள். அவை, உலகமெல்லாந் தலை விளாக்கொள்ளுதல், வானவர்தம் சென்னிமலராவுதலாயிறே! அந்தப்பொன்னடிகள் இருப்பது; இது, "மாகமாநிலம் முழுதும் வந்திறைஞ்சும்" என்றிறே இப்பொன்னடி இருப்பது. (உன்-பொன்-அடி) எல்லார்க்கும் பொதுவாயிருக்கையும், ஸ்பர்ஹணீயமாயிருக்கையும்; கண்டால் விடவொண்ணாதிருக்கையும், விட்டால் பிழைக்கவொண்ணாதிருக்கையும். வெறும்பொன்னடியாயிருக்கிறதோ? பொற்றாமரை யடியன்றோ? ஸாதநத்வமும் ஸாத்யத்வமும் பூர்ணமாயிருக்கை. தாமரையன்ன பொன்னாடியிறே? "தநம் மதீயம் தவ பாதபங்கஜம்" "தநம்மதீயம் தவபாதபங்கஜம்" (௬௬௮) (உன்பொற்றாமரையடியே) எங்களுக்கு பொன்னும் பூவும் புறம்பே தேடவேணுமோ? (உன்பொற்றாமரையடி) பெண்களுக்குப் புறம்பு அந்யபரதைகளுண்டானால் க்ர்ஷ்ணன் அவற்றைக் குலைப்பதும் திருவடிகளாலே. "அழித்தாயுன் திருவடியால்" "கற்றினம்மேய்த்த வெந்தை கழலிணை" என்று ஆஶ்ரயணீயமும் இது; "அவன் தாளிணைக்கிழ்ப்புகுந

காதல்'' என்று ஆசைப்படுவதும் இது. ஆஸாநுகுணமாக ''தாள்கண்டுகொண்டென் தலைமேற்புனைந்தேனே'' என்று இவர்கள் சென்னிக்குக்கோலமாகச் சூடுவதும் இத்தை. (போற்றும்)''பரமனடிபாடி'' ''அடிபோற்றி - கழல்போற்றி'' என்று மூடியச்சொல்லிக் கொண்டு போந்தார்களிறே! கண்ணன்தாள் வாழ்த்துமது ஸ்வரூபப்ராப்தமாயிருக்குமிறே! இதுக்குமேலே ஒன்றுநினைக்கும்படியிறே ருசிகார்யமாய்வந்த ஆற்றாமை இருந்தபடி.

(போற்றும் பொருள்) போற்றுகிற ப்ரயோஜநம். இவர்கள் ''போற்றும்பொருள்'' என்று பாரித்துக்கொண்டு சொல்லத் துடங்கினவாறே சிற்றஞ்சிறுகாலே புணர்ந்துவந்த அனந்தலாலே சிவந்த போதரிக்கண்களிலும், இவர்கள் கோவைக்கனிவாயில் பழுப்பிலும், பேச்சினினிமையிலும், வடிவழகிலும் பாடகமும் சிலம்பும் த்வனிக்கிற இவர்கள் பொற்றாமரையடியிலும் கண்ணை வைத்து நாம் செல்லுகிற இது இவன் ப்ரதிபத்தி பண்ணுகிறிலன் என்று தோற்றும்படி அந்யபராயிருந்தான், ''கோளாய்'' என்கிறார்கள். இவர்கள் தாம், தங்களையறிந்தால் பின்னை நின்று வார்த்தை சொல்லவேண்டாவோ? வார்த்தைசொல்லா நிற்கச்செய்தே ''கேளாய்'' என்னும் போது நடுவே அந்யபராக வேணுமிறே! (கேளாய்) எங்கள்ப்ராப்யத்தை அழித்தோ நீ உன் ப்ராப்யம் பெறப்பார்ப்பது என்று அடியைவிட்டுத் துடையைத் தட்டுகிறார்கள். (கேளாய்) ''அத்யாபயந்தி'' ''அத்யாபயந்தி'' (௯௯௯) என்று ஓதுவிக்க இழிந்தவளாகையாலே ''ஶ்ரூயதாம்'' ''ஶ்ரூயதாம்'' (௭00) என்று கேட்பிக்க வேணுமிறே! இவன்றனக்கு ஶிஷ்யன்வாய்த்தாப்போலே ஆகவொண்ணாதே இவர்களுக்கு. ''கேளீரோ'' என்று பெண்களுக்கு முதலிலே கர்த்தவ்யாம்ஶம் சொன்னார்கள்; இவனுக்கு கர்த்தவ்யாம்ஶம் சொல்லுகிறார்கள். அழகிது, எனக்குத்தான் ஏதானால் நல்லது, உங்கள் பேச்சே யமையாதோ? இதொரு பொருள் கேள்வியாயிருந்தது, விடிவோறே வந்து கைக்கொண்டிகோள், நமக்கு உசித தர்மங்களையும் விட்டு, புறம்புள்ள அந்யபரதைகளையுங்கழித்து, இற்றைக்கு, இதுவே கேள்வியாக இருக்கிறோம், சொல்லலாகாதோ? என்றான். (நீ-கேளாய்) சீரிய சிங்காஸநத்திலேயன்றோ நீயிருக்கிறது, தர்மாஸநத்திலேயிருப்பார்க்குக் கேட்க வேண்டாவோ?

(நீபோற்றும்பொருள்கேளாய்) உனக்கு க்ரமத்திலே இவர்கள் காரியஞ் செய்கிறோமென்று ஆறியிருக்க வொண்ணாது, த்வரிக்கவேணுங்காணென்கிறார்கள். பேறு உங்களதாய் நீங்கள் த்வரியாநின்றீ

கோளே என்றான். (பிறந்தநீ) இவ்வளவாக த்வரித்தோம் நாங்களாகி லன்றோ மேலும் நாங்கள் த்வரிப்பது, எதிர்சூழல்புக்கு இவ்வளவாக க்ருஷிபண்ணின நீ பலவேளையிலே ஆறியிருக்கலாகாதுகாண். எங்கள் ருசிகார்யமான த்வரைக்கு முற்பாடனான நீயே பேற்றுக்கும் முற்பா டனாகவேணுங்காண். எத்தனை கார்யத்தை யிட்டுப் பிறப்போமென்று தெரியாது, இதென்னன்புதென்ன. (பெற்றம்மேய்த்துண்ணுங் குலத் தில்பிறந்த நீ) இங்கு வந்து பிறந்தது ஏதுக்காக? ஆர்க்காக? என்று விசாரிக்கலாகாதோ? (பெற்றம்மேய்த்துண்ணும்) நீ பிறப்பிலியாய் பிற வாதார் நடுவேயிருந்து பிறவியற்றார்க்கு முகங்கொடுக்கிற நிலத்திலே வந்தோமோ? பிறவிக்குப் போர பயப்பட்டு உன்னையே கால்கட்டுவா ருள்ளவிடத்திலே வந்தோமோ? பிறவாநிற்கச்செய்தே ஆசாரப்ரதாநர் புகுந்து நியமிக்கும் ராஜகுலத்திற் பிறவியிலே வந்தோமோ? வயலால் உழக்குக்குப் பசுமேய்க்கவந்து வயிறு வளர்க்கும் எங்கள் குலத்திலே நீ என்செய்யப் பிறந்தாய் என்று விசாரிக்கலாகாதோ?

(பெற்றம்மேய்த்து) தாழ்ந்தவர்களை ரக்ஷணம்பண்ணும் இக்குல த்திலே பிறக்கச்சொன்னாரார்? பரரக்ஷணமும்பண்ணாமல் ஸ்வரக்ஷண மும் பண்ணாதார்குலத்திலே உன்னைப் பிறக்கச்சொன்னாரார்?. (பிற ந்தநீ) நீ ஆசைப்பட்டுப் பிறந்தபிறவியன்றோவிது. (பெற்றம்மேய்த் துண்ணுங்குலத்தில் பிறந்த) "எங்கள் பெற்றத்தாயன் வடமதுரை ய்பிறந்தான்" என்றல்ல இவர்கள் நினைத்திருப்பது. (குலத்தில்பிற ந்த) குலத்துக்குத் தலைவரானவர் வயிற்றிலே பிறந்தபடியாலே எல் லார்க்கும் ஸாதாரணமிறே இப்பிறவி. நாம் உங்களிலே வந்து பிறந் தோமாகில் நம்மைச்செய்யசசொல்லுகிறதென்னென்ன; அந்தரங்க வ்ருத்திகொள்ளச் சொல்லுகிறோமென்கிறார்கள்; ஆனைத்தானென்றா ன்; (எங்களை) குலத்திலபிறந்த நீ குலங்கெழு கோவியரான எங் களைகொள்ளவேண்டாவே. "நீளாகுலேந ஸத்ருஶீ" "நீளாகுலேநஸத்ர்ஶீ" (௭௦௧)எங்களிலேஒருத்தியை ஆசைப்பட்டன்றோ நீ இங்குப்பிறந்தது. (எங்களை) "திருமாமகள்மண்மகள்" என்கிற ப்ரதாநமஹிஷிகள் உன்னை த்தேடிநிற்க, நீ ஆசைப்பட்டு மேல்விழும்படி உகக்கைப்பாடியான எங்களை, "ஒசிசெய்நுண்ணிடையிளவாய்ச்சியர் நீயுகக்கு நல்லவர்" என் று நாங்கள ஆதார விஷயமென்று ப்ரஸித்தமன்றோ. (பிறந்தநீ-எங் களை) பிறவாதாரைப் பிறவாதார் ஏவிக்கொள்ளவும், பிறந்தாரைப் பிற ந்தார் ஏவிக்கொள்ளுகையும் ப்ராப்தமன்றோ, இவ்வாய்க்குலத் தாய்ச்சியோமாய்ப்பிறந்த எங்களை விரும்பியன்றோ நீ ஆயனாய்ப்பிற ந்தது. "ஆயனாகியாயர்மங்கை வேயதோள் விரும்பினாய்." (எங்களை) பசுக்களுக்கு வேறுரக்ஷகருண்டாகிலும் உன்னை யொழியவேறுரக்ஷிப்

பாசில்லாத வெங்களை. பசுக்கள், தானும்பறித்துத்தின்னும்; பிறரும் ஐயோ! என்னும்படியிருக்கும்: இரண்டாகாரமுமில்லாத எங்களை. (குற்றேவல்) அந்தரங்கமாய் ஏவிக்கொள்ளுமது. முகப்பேகூவிப் பணிகொள்ளவேணுமிறே! விடுத்த திசைக்கருமமுமல்ல, கருதுமிடத்தில் வ்யாபாரமுமல்ல, அனுதினவ்ருத்தியும் ஏவின வ்ருத்தியுமாகவேனும், திருத்திரைக்குள்ளில் வ்ருத்தி;-உடைவாளும் அடுக்குருவுமெடுத்தல், கலசப்பானைபிடித்தல், படிக்கம் வைத்தல், உமிழும்பொன்வட்டிலெடுத்தல், திருவடிகள் விளக்குதல், ஒலியன் பணிமாறுதல், சாமரமிரட்டுதல், அடைக்காய்திருத்துதல், அடிவருடுதல், முலைகளிடர்தீர வணைத்தல், இவை தொடக்கமானவை - கோவிந்தற்குப்பண்ணும் குற்றேவலாகிறது. இவையெல்லாம் க்ரமத்திலே கொள்ளுகிறோமென்றான். (எங்களை) தாஸ்யத்தில் சுவடறிந்து அதில் ருசியும் த்வரையும் விளைந்து க்ரமப்ராப்திபொறுக்கமாட்டாதபடி வந்து மேல்விழுகிற எங்களை. அநந்தரக்ஷணத்துக்கு நாங்களிருப்புதோமென்று தோற்றியிருந்ததோவென்று தங்களாற்றாமையை யணித்துக்காட்டுகிறார்கள். சிறிதுவிட்டுப்பிடிக்க அறியாத எங்களை; ஒரு படுக்கையிலே ஒக்கவிருக்கப் பிரிவதற்கிரங்குமெங்களை.

(குற்றேவல்-கொள்ளாமல்-போகாது) உனக்கு விஹிதம். (பிறந்த-நீ-கொள்ளாமல்-போகாது) முன் தீம்பு செய்தார்க்கு வீண்போமோ? புறம்புள்ள ஜீவநத்தை மாற்றினால் நீயும் இடாதொழியவோ? அந்நபாநாதிகள் தாரகமான நிலையைத்தவிர்ந்து உன் வடிவழகைக் காட்டி, "எல்லாம் கண்ணன்" என்று தாரகாதிகள் நீயே யாம்படி பண்ணினால் ஸ்வரூபாநுரூபமான அடிமைகொள்ளாதே போகப்போமோ? ஒருவனுக்கிடுகிற சோற்றை விலக்கிப் பின்னைத் தானும் பொகட்டுப் போகவோ? நாங்களிசையாதவன்று தப்பினத்தைச்செய்யலாவதில்லை, ஸ்வரூபஜ்ஞாநமுண்டாய் இசைவுமுண்டான இன்று நழுவவிடுவதோமோ? [உண்டிட்டாய் இனியுண்டொழியாய்] ஆசையைவிளைத்த உனக்கு அதின் காரியஞ்செய்யவேண்டாவோ? (கொள்ளாமற்போகாது) நாங்கள் விடநினைத்தால் நீதான் விடவல்லையோ? "திருவாணை நின்னாணைகண்டாய்" என்று ஆணையிடமாட்டார்களிறே! அபிப்ராயந்தோற்றச்சொல்லுமித்தனையிறே! [வளைத்துவைத்தேன் இனிப்போகலொட்டேன்] தடுக்கையும் வளைக்கையும் ஆணையிடுகையும் பரிசிறே! "கொள்ளாமற்போகாது" என்று அடுகுவளம் தடையானபின்பு கேட்க என்று விடுகையிறே!

"கொள்ளாமற்போகாது" என்று-மீளவொண்ணாதபடி நிர்ப்பந்தித்தவாறே; நாம், அந்தரங்கமாக வேண்டுமவை ஏவிக்கொள்ளுகிறோம், உங்களுக்கு நம்பக்கலிலும் சில கொள்ளாமற்போகாதே, நீங்கள்

ஏ.—நோன்புக்கு அங்கமாகச் சொன்னவற்றை இப்போது கொண்டு போமித்தனையிறே! நீங்களனைவரும் அறியவேண்டி வந்தத்தைக் கொண்டுபோகவேணும். இப்போது "பறைதருவான்" என்றும், "பாடிப்பறை கொண்டு" என்றும், "போற்றப்பறைதரும்" என்றும், "அறைபறை" என்றும், "இற்றைப்பறைகொள்வான்" என்றும், "பறைதருதியாகில்" என்றும், "சாலப்பெரும்பறை" என்றும், "உன்றன்னைப் பாடிப்பறை கொண்டு" என்றும், "நீதாராய்பறை" என்றும், ஒருக்காற் சொன்னாப்போலே ஒன்பதின்காற்சொன்ன பறையை, இற்றைக்கும் கொள்ளுங்கோளென்று பெண்களுக்குக் கொடுக்கும்படி பறையை எடுத்துக்கொண்டுவாருங்கோளென்றான்; (இற்றைப்பறைகொள்வானன்று காண்கோவிந்தா) ஆன்று ஒருப்ரயோஜநம் கொண்டுபோமவர்களோ நாங்கள், உன்னை அங்ஙனே விடுவதோமோ? கெடுவாய்! யதாச்ருத க்ராஹியாயிருந்தாய். தாத்பர்யஜ்ஞாநமில்லையாயிருந்ததீ! அபிதாந வ்ருத்தியொழிய தாத்பர்யம் போகாதாயிருந்ததீ!, லோகஸம்வாதத்துக்காக ஒன்று சொன்னோமத்தனை என்றிருக்கவேண்டாவோ? அபிமதவிஷய மிருந்தவிடத்தே சென்று 'தண்ணீர்' என்றால், தண்ணீரைவார்ப்பார்களோ? சொல்லுகிற வார்த்தையையும் எங்களையும் அறிந்தன்றோ பரிமாறுவது; நாங்கள் "பறை" என்றால் வேறேயொன்று த்வநிக்கிறதென்று அறியவேண்டாவோ? (கொள்வானன்று காண்) எங்களை நீகொள்ளுமத்தனையொழிய, நாங்கள் உன்பக்கலிலே உன்னையொழியவுங்கொள்வதொன்றுண்டு என்றிருந்தாயோ?

(கோவிந்தா) பசுக்களின்பின்னே திரிவார்க்கு, பெண்கள் வார்த்தையின் கருத்துத்தெரியாதிறே! பசுக்களின் பின்னே திரிவார்க்கு அவற்றுக்குள்ள ஜ்ஞாநமிறேயுள்ளது; நாலுநாள் எங்களைவிட்டுக் கெட்டகேடென்றான். நீ பசுக்களையே விரும்பி எம்மைத் துறந்தால் இதுவோ பலம். (கோவிந்தா) "குறைவொன்றுமில்லாத கோவிந்தா" என்று -ஜ்ஞாந பூர்வகமான உபாயஸ்வீகாரம் பண்ணுகிற இடமாகையாலே குணபூர்த்திசொல்லக்குறையில்லை; அவ்விடத்தில் ப்ராப்யருசியாலே கண்ணுஞ்சுழலையிடுகையாலும் பலாந்தரத்தைக் காட்டி நழுவத் தேடுகையாலுமுண்டான தோஷத்தாலும் இவ்வளவும் சொல்லவேணுமிறே யிங்கு. (கோவிந்தா) எங்களையும் எங்கள் ப்ராப்யத்தையும் மறந்தாப்போலே, உன்னையும் உன்பிறவியையும்மறந்தாயீ! (பெற்றம்மேய்த்துண்ணுங் குலத்தில் பிறந்த-கோவிந்தா) பூமியை எடுத்து நோக்கின மஹாவராஹமாக நினைக்கிறாயோ? பூமியை நீரேற்றவாமநனாக நினைக்கிறாயோ? ஸப்தராசியைப்பிரித்தெடுத்த ஹம்ஸரூபியாக நினைக்கிறாயோ? அத்தை ப்ரகாசிப்பித்த ஹயக்ரீவ வேஷமாக நினைக்கிறாயோ? ஆதித்யாந்தர்வர்த்தியாக நினைக்கிறாயோ?

எ.—அறிவில்லாத பசுக்களுக்கு நிர்வாஹகனாய் வந்து பிறந்து ஆயர் சிறுமியர்க்கு உதவிற்றில்லை என்றால் பரவ்யூஹாதிகளையும் யாதவவம்ஶத்தையும் விட்டு, இடைச்சேரியிலே ஸுலபனான உன்னுடையகர்ஷியும் விபலமாகாதோ?

நீங்கள் சொன்ன வார்த்தைக்குப் பலருமறியக் கருத்தாயிருக்குமத்தை நாமும் அறிந்து சொன்னோமாகில் நமக்குத்தாத்பர்யஜ்ஞானமில்லை என்கிறதென்? நீங்கள் "குற்றேவல்" என்கிறத்திலே இரண்டுவகையறிந்து சொல்லுங்கோள்? இற்றைப்பொழுதை உங்களோடேபோக்குகிறோம் அங்ஙனே யாகிலென்றான்; (எற்றைக்கும் ஏழேழுபிறவிக்கும்) இற்றையளவில் போகாதுகாண்! இப்பிறவியளவில்போகாதுகாண்! (எற்றைக்கும் ஏழேழுபிறவிக்கும்) அகாலகால்யமானநலமந்தமில்லதோர் நாட்டிலே யிருக்கவுமாம்; ஆஶ்ரிதஸஜாதீயனாய்க்கொண்டு நிலைவரம்பிலபலபிறப்பாய் ஸம்ஸாரமண்டலத்திலே அநேகாவதாரம்பண்ணவுமாம்; அதில் ஒரு நிர்ப்பந்தமில்லை. (உன்றன்னோடு) நீ பிறவாதிருக்குமிடத்திலும், பிறந்து திரியுமிடத்திலும் கூடத்திரியுமித்தனை. (எற்றைக்கும்) "దేవత్వే దేవదేహోయం మనుష్యత్వే చ మానుషీ" "தேவத்வே தேவதேஹோயம் மநுஷ்யத்வேசமாநுஷீ" (எ0உ) என்கிறபடியே நாங்களும் ஒக்கப்பிறந்து விடாதேதிரியவேணும்; இளையபெருமாள் படைவீட்டிலும் காட்டிலும் ஒக்கத்திரிந்தாப்போலே.

(உன்றன்னோடு) நீ ஶங்கசக்ரகதாதரனாய் ஸ்ரீவைகுண்டத்திலிருக்குமிடத்திலும் எங்களோடேகண்கலந்த உன்னோடும் ஒக்கத்திரியவேணும். (உன்றன்னோடு) அங்கே உருவார்சக்கரம் சங்கு சுமந்து உன்னோடேதிரிகையும், தெருவில்லும் செண்டுகோலுங்கொண்டு இங்கேதிரியவும் பெறுவோமாகவேணும். இத்தைநினைத்திறே கச்சொடுபொற்சுரிகை அடியிலே இவர்கள்தான் அவனுக்குவரவிட்டது. (கோவிந்தா - எற்றைக்கும்) கோயில் கொள்தெய்வமெல்லாந் தொழவைகுந்தங்கோயில்கொண்டு நீயிருக்குமிடத்திலும், "பின்னும் எம்மாண்புமானான்" என்னும்படி நீபிறந்து திரியுமிடத்திலும் உன்னோடேதிரியவேணும். "தேவும் தன்னையும்" என்கிற இரண்டவஸ்தையும் கோவிந்தனுக்கிறே! (உற்றோமேயாவோம்) ஸர்வவித பாந்தவமும் உன்னோடேயாகவேணும். ஒரு உறவைக்குறித்து 'அதுண்டாகவேணும்' என்னுதொழிந்தது, ஒன்றைவிஶேஷிக்கில் அல்லாதவையில்லையாமென்று. எல்லாவுறவும் நீயே யாகவேணும். (உற்றோமேயாவோம்) நீகாட்டுக்குப்போக மூச்சடங்கும்உறவுஉண்டாகவேணும்; அசனூரில் வளரப்போகப் பூண்டும் புலம்புமுறவுண்டாகவேணும்; நீஅபிமதவஸ்துக்களை விஞ்சிவிநியோகங்கொண்டால், பொறுதொழியில் செய்வதென்? என்று வயிறு பிடித்துக்கொள்ளுமுறவு உண்டாக

எ.—வேணும்; நீ நில்லுங்கோளென்றால் நீர்பிரிந்தஜந்துக்களைப்போலே துடிக்கு முறவுண்டாகவேணும்; நீ பாம்பின்வாயிலே விழுந்தாயென்றால் பிணம்படும்படியான பாந்தவம்வேணும்; கழிந்த பிழைகளுக்குக்காப்பிடு முறவு வேணும்; எங்கள் வீட்டிலே இட்ட ஆஸநத்தைஊன்றிப்பார்க்குமுறவுவேணும்; விட்டு அணைக்கத்தேடில் வெளுக்குமுறவுண்டாகவேணும். (கோவிந்தாஉன்றன்னோடு) "𑌮𑌾𑌤𑌾𑌪𑌿𑌤𑌾𑌭𑍍𑌰𑌾𑌤𑌾𑌨𑌿𑌵𑌾𑌸𑌃𑌶𑌰𑌣𑌂𑌸𑍁𑌹𑍃𑌦𑍍𑌗𑌤𑌿𑌰𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃" "மாதாபிதாப்ராதாநிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத்கதிர் நாராயணः" (௭௦௩)என்கிறபடியே "அவரோயினியாவார்" என்றிருக்கவொண்ணாது, "𑌭𑍍𑌰𑌾𑌤𑌾𑌭𑌰𑍍𑌤𑌾𑌚𑌬𑌨𑍍𑌧𑍁𑌶𑍍𑌚𑌪𑌿𑌤𑌾𑌚𑌮𑌮𑌰𑌾𑌘𑌵𑌃" "ப்ராதாபர்த்தாசபந்துஶ்ச பிதாசமமராகவः" (௭௦௪)என்கிறபடியே "அவருயிர்செகுத்தவெம்மண்ணல்" என்றிருக்கவொண்ணாது, அவையுமெல்லாம் உன்னோடேயாகவேணும்; "பெற்றதாய்நீயே பிறப்பித்ததந்தைநீமற்றையாராவாரும்நீ" என்றிருக்கவேணும். (உற்றோமே) ஸம்பந்தமுண்டாயிருக்கச்செய்தே பத்துமாஸம் பிரிந்திருத்தல், பதினாலாண்டு பிரிந்திருத்தல், பதினாறாண்டு பிரிந்திருத்தல் செய்யவொண்ணாது.

அத்தனையோ வேண்டுவதென்றான்; (ஆட்செய்வோம்)பந்தபலம் பெறவேண்டாவோ? உறவு என்று ஸாதர்ம்யம்பெற்றிருக்கவொண்ணாது, ப்ராப்திபலமான கைங்கர்யத்தைப் பெறவேணும். (ஆட்செய்வோம்) அரசுக்குப் பட்டங்கட்டி அருகிருக்கவொண்ணாது. ஆகிறது மற்றென்னென்றான்; (உனக்கு-ஆட்செய்வோம்) ஆட்செய்யுமிடத்தில் எங்களுக்கு உறவையறிவித்து அடிமைகொண்டு ஸாபேக்ஷனாய் நிற்கிறவுனக்குச்செய்யவேணும். (உனக்கு-ஆட்செய்வோம்) ஆட்கொள்ளத்தோன்றிய உனக்குச்செய்யவேண்டாவோ? அத்தனையோ என்றான்; (உனக்கே) உனக்கும் எங்களுக்குமாயிருக்கிற விருப்பைத்தவிர்ந்து "தனக்கேயாக" என்னுமாப்போலே கொள்ளவேணும். எங்கள் அபிநிவேஶத்தாலே உன் அபிமதம் செய்யவொண்ணாது, நீ உகந்ததாகவேணும். தேஶகாலாவஸ்தா ப்ரகார நியமஶூந்யமாக அபிநிவேஶத்தாலே பாரியாநிற்கச்செய்தேயும் ருசிரமான தேஶத்திலே நியோகித்துக் கொள்ளவேணுமென்று அவன் உகந்து ஏவினத்தைச்செய்யக்கடவதாயிறே யிருப்பது. "உன்றன் திருவுள்ளமிடர்கெடுந்தோறும்" என்னக்கடவதிறே! (நாம்) உனக்கு அபிமதமானத்தை எங்கள் நிர்ப்பந்தமொழிய நீ ஏவ செய்தபோதன்றோ எங்களுக்கு ஸ்வரூபஸித்தியுண்டாயிற்றாவது. (ஆட்செய்வோம்) "உயர்ந்துயர்ந்து அப்பாலவன்" என்கிறபடியே உத்துங்கவிஷயமாகையாலும் ஆயர்சிறுமியரான தாங்கள் தாழ்ந்த மனிச்சராகையாலும், "செய்வோம்" என்று ப்ரார்த்திக்கிறார்கள். (கோவிந்தா-உனக்கே நாம் ஆட்செய்வோம்) "நீள்குடக்

எ.— கூத்தனுக்காட்செய்வதே" என்கிறபடியே-உனக்கு ஆட்செய்யு மதன்றோ ப்ராப்தமா யிருக்கிறது.

அப்படியாகிறது, இனிஎன்னென்றான்; (காமம்மாற்று) வேறொருகாமமுண்டாய்ச் சொல்லுகிறதல்லவிறே! "தேறேலென்னை" என்றிருக்குமவர்களாகையாலே. அடிமைசெய்வாரையும் செறுமவை, ப்ரக்ருதி வாஸனையாலும் மநஸ்ஸு அஸ்திரமாயிருப்பதொன்றாகையாலும், ஸம்பாவிதமாக ஶங்கித்து, "குடகமே" என்று துடங்கி நாட்டார்க்குச் சொன்னவை துடருகிறதோ? என்று, அது நடையாடாதபடிபண்ணவேணுமென்கிறது. அத்தனையோ என்றான்; அவ்வளவு போராது; (மற்றை-காமம்-மாற்று) நீ ஸ்ரீவைகுண்டத்திலே ஸூரிகளுக்கு முகங்கொடுத்திருக்கு மிருப்பிலே க்ரமத்திலே பெறும்படியிருக்கவொண்ணாது, நீயும் பெண்காள்! என்றழைக்க நாங்களும் க்ருஷ்ணன் என்று சொன்ன பரிமாற்றமே நடக்கவேணும். "[Grantha] ஸ்தம்" "நகாமகலுஷம்சித்தம்" (எ0டு) அவனுடைய ப்ராப்யதையையும், ப்ராபகத்வத்தையும், ஶரண்யதையையும், இந்நிலத்தின் தன்மையையும், அந்நிலமுத்தேஶ்ய மென்னுமிடத்தையும், மநோரதந்தானே அமையுமென்னு மிடத்தையும் சொன்னவாறே, ஒரு அபேக்ஷையின்றிக்கே பலவற்றிலே நெஞ்சு தாழநின்றதே! என்ன; "[Grantha] ஸ்தம்-[Grantha]" "தேபாதயோஸ்திதம்-மம-சித்தம்-நகாமகலுஷம்"-ப்ராப்யத்வம் ப்ராபகத்வம் ஶரண்யத்வம் இவையெல்லாஞ் சொல்லிற்று நீயாகையாலே; இவ்விடம் த்யாஜ்யமென்றது - உன்னுடைய அநுபவத்துக்கு விரோதியாகையாலே; அவ்விடத்தில் உத்தேஶ்யதாபுத்தி நடந்தது - அநுபவத்துக்கு ஏகாந்த ஸ்தலமென்று அல்லாதவை உத்தேஶ்யமென்று சொன்னேனென்று உன் திருவடிகளிலே நிலைநின்றவர்கள் நெஞ்சு ஸ்ரீவைகுண்டாதிகளால் கலங்காதுகாண் என்றதிறே!, அப்படியே இவர்களும் (மற்றை-காமம்) என்கிறார்கள். (மற்று) என்றது- "மற்றொன்றினிற்றகதல்லா" "மற்றொன்றினைக்காணாவே" என்கிற இடங்களிற்சொல்லுகிறத்தை. (கோவிந்தா-மற்றை-காமம்-மாற்று) கண்ணன் வைகுந்தனோடான நிலையைக் குலைக்கவேணும். "இம்மைப்பிறவிசெய்யாதே இனிப்போய்ச்செய்யுந்தவந்தானென்" என்னுமவர்களிறே! நாங்கள் சிந்தயந்தி பட்டது படாமல்கிடாய்! அத்தனையோவேண்டுவதென்றான்; (நங்காமம்-மாற்று) ஆட்கொள்ளுமிடத்திலே எங்களுக்கொரு இந்த்ரியசாபல்ய நடக்கும், அந்த ஸௌந்தர்யரூபமான அந்தராயத்தையும் பரிஹரிக்கவேணும். அத்தனையோ என்றான்; (காமங்கள்) என்கிறார்கள்

ள.—இருவர் கூடப் பரிமாறுநின்றால் அத்தால் பிறக்கும்இனிமை இரண்டுதலைக்கும் ஒத்திருக்குமிறே! விஷயவைலக்ஷண்யத்தாலும் ஆஶ்ரயத்தின் இனிமையாலும் மிகவும் ப்ரீதிரூபமாயிறே பரிமாற்றமிருப்பது. அதில் ஸ்வரூபத்துக்கு விரோதியான அஹங்கார கர்ப்பமான அடிமையும் அபுருஷார்த்தமிறே! நாங்கள் செய்கிற அடிமைகண்டு நீயுகந்தால் அவ்வுகப்புக்கண்டுவரும் உகப்பொழிய போக்த்ர்த்வப்ரதிபத்தியும் மதீயத்வப்ரதிபத்தியும் போஜநத்துக்கு க்ரிமிகேஶங்கள்போலே போகடவேண்டும்படி விரோதமாயிறே யிருப்பது, அந்த விரோதிகளையும் தவிர்த்துத் தந்தருளவேணுமென்கிறார்கள். ஸ்வரூபவிரோதியும் ஸாதநவிரோதியும் ப்ராப்திவிரோதியும் ப்ராப்யவிரோதியுமென்று நாலுவகையாயிறே விரோதிகளிருப்பது. அதில் ஸாதநவிரோதியும் ப்ராப்தி விரோதியும் கீழ்ப்பாட்டிலே கழிந்தமை சொல்லிற்று; மற்றையிரண்டும் இப்பாட்டிலே கழிக்கிறது.

“கறவைகள்பின்சென்று” என்று-உபயாந்தரத்தில் அந்வயம் சொல்லுகையாலும் ப்ராப்திப்ரதிபந்தகத்துக்கு க்ஷாபணம்பண்ணுகையாலும் இரண்டுங் குலைந்ததிறே! ப்ராப்யருசியும் த்வரையும் ஆர்த்தியும் விளைந்து பாஹ்யங்களில்ஸங்கம்குலைந்தபடி சொல்லுகையாலே ஸ்வரூபவிரோதிகழிந்தபடிசொல்லிற்று, இப்பாட்டில் முற்கூற்றால்; (மற்றைநங்காமங்கள்மாற்று) என்கிறத்தாலே பலவிரோதியைக்கழிக்கிறது; (கோவிந்தா - உனக்கு) என்று அகாரார்த்தஞ்சொல்லிற்று; (உனக்கே) என்று உகாரார்த்தஞ்சொல்லிற்று; (நாம்) என்று மகாரார்த்தஞ்சொல்லிற்று; (உன்றன்னோடுற்றோமே யாவோம்) என்கிறவிடத்தாலே - நாராயணபதத்தில் அர்த்தஞ்சொல்லிற்று; (எற்றைக்கும் ஏழேழ்பிறவிக்கும்) என்கையாலே-சதுர்த்யர்த்தம் சொல்லிற்று; (மற்றைநங்காமங்கள் மாற்று) என்று - நமஸ்ஸில் அர்த்தஞ்சொல்லிற்று; நடுவே நமஸ்ஸுக்கிடக்கிறது, ஸ்வரூப உபாயங்களிரண்டிலும்கிடக்கிற விரோதி போக்குகைக்கிறே!.

ப்ராப்யருசிகார்யமானத்வரையும், அதின்பலமான கலக்கமும் விளைந்தஆர்த்தியும், இதெல்லாவற்றுக்குமடியான ப்ராப்யாந்தரஸங்கநிவ்ர்த்தியும், பேற்றில் அளவிறந்த பாரிப்பும், அதில் ஸ்வப்ரயோஜநத்வ நிவ்ர்த்தியும் சொல்லாநின்றுகொண்டு, ப்ரபந்த தாத்பர்யத்தையும் நிகமிக்கிறார்கள். ஸத்வோத்தரகாலத்திலே உணருகையும், பகவத்ஸந்நிதியேற வருகையும், ஸேவிக்கையும், விக்ரஹாநுபவம் பண்ணுகையும், தத்ஸம்ர்த்தியை ஆஶாஸிக்கையும், தன்பக்கலிலே ஆபிமுக்யம் பண்ணுவித்துக்கொள்ளுகையும், அவதாரப்ரயோஜநங்களை விண்ணப்பஞ்செய்கையும், ஆர்த்தியை ப்ரகாஶிப்பிக்கையும், திரு

மூ.—அக்ஷ. (மः) என்கை ஸ்வரூபநாஶம், (நமः) என்கை ஸ்வரூபோஜ்ஜீவநம்.

வ்யா.—அவ.—இப்படி ஸ்வரூபோபாயபுருஷார்த்தங்கள் மூன்றுக்கும் விரோதியாகிறது, இவனுடைய அஹங்கார மமகாரங்களாகையாலே, அதினுடைய க்ரௌர்யத்தையும், தந்நிவ்ருத்தியிலுண்டான நன்மையையும் அருளிச்செய்கிறார்

((மः) என்கை ஸ்வரூபநாஶம், (நமः) என்கை ஸ்வரூபோஜ்ஜீவநம்) என்று. அதாவது — "చేతనస్య యదామమ్యం స్వస్మిన్ స్వీయే చ వస్తుని | మమ ఇత్యక్షరద్వన్ద్వం తదామమ్యస్య వాచకమ్||" "சேதநஸ்யயதாமம்யம் ஸ்வஸ்மிந் ஸ்வீயேசவஸ்துநி | மமஇத்யக்ஷரத்வம் ததாமம்யஸ்யவாசகம்||" (௯0) என்கிறபடியே, (மः) என்கிற இதிலே அஹங்கார மமகாரங்கள் இரண்டுமுண்டாகையாலே அதிலே அந்விதனாகை இவ்வாத்மாவினுடைய ஸ்வரூபத்துக்கு நாஶம்; (நமः) என்று அதில் அந்வயமற்றிருக்கை ஸ்வரூபத்துக்கு உஜ்ஜீவநம் என்கை.

எ--வுள்ளமறிய பலாந்தரஸங்கநிவ்ருத்தியைக்காட்டுகையும், ஸூரிகள்பரிமாற்றத்தை அபேக்ஷிக்கையும், ஸ்வரூபவிரோதிகளையறுத்துத் தரவேணுமென்று வேண்டிக்கொள்ளுகையும், கைங்கர்யருசியுடையார்க்கு ஸ்வரூபமிறே! இவையெல்லாம் நிழலெழும்படி க்ருஷ்ணன் திருமுகத்தைப்பார்த்து விண்ணப்பஞ்செய்கிறார்கள்"]. ... ❋

அவ.— மேலுக்கவதாரிகை இப்படியென்று துடங்கி.

பகவச்சாஸ்த்ரே ("చేతనస్య") ("சேதநஸ்ய") இதி. சேதநனுக்குயாதொருபோது தன்பக்கலிலும் தன்வஸ்துவின்பக்கலிலும் மமத்வம் நடையாடுகிறது; அப்போது மம என்கிற இரண்டெழுத்தும் அந்த மம்யத்துக்கு வாசகமாயிருக்கும்.

தொ.—அவ.— மேலுக்கவதாரிகை (இப்படி) இத்யாதி.

(இப்படி) என்றது — முன்புசொன்னபடியென்றபடி. (அதினுடைய) என்றது — அஹங்காரமமகாரங்களினுடையவென்றபடி. (தந்நிவ்ருத்தியில) என்றது - அஹங்காரமமகாரங்களினுடைய (நிவ்ருத்தியில்) என்றபடி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. ("మమ్యం") ("மம்யம்") என்றது-மமகாரமென்றபடி. ("మమ ఇత్యక్షరద్వన్ద్వం తదామమ్యస్య వాచకం") ("மமஇத்யக்ஷரத்வம்த்வம் ததாமம்யஸ்யவாசகம்") என்றது — இவ்விடத்தில் 'அஹம் மம' என்கிறபோதும், 'இதம் மம' என்கிறபோதும் அஹம் இதம் ஶப்தங்களன்று மமகாரவாசகம், இரண்டிடத்திலும் மம என்கிறஶப்தமே மமகாரவாசகமென்றபடி. இவ்விடத்தில அஹங்காரஶப்தார்த்தம் உபதேஶகம்யம். (அதில்) என்றது - அஹங்காரமமகாரங்களில் என்றபடி. [உஜ்ஜீவநம்] என்றது — உத்க்ருஷ்டஜீவநம் என்றபடி.

மூ.—அஎ. இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும் காட்டும்.

வ்யா.— "द्व्यक्षरस्तु भवेन्मृत्युस्त्र्यक्षरं ब्रह्मणः पदम् । ममेति द्व्यक्षरो मृत्युर्न ममेति च शाश्वतम् ॥" "த்வ்யக்ஷரஸ்துபவேந்ம்ர்த்யுஸ்த்ர்யக்ஷரம்ப்ரஹ்மணःபதம் । மமேதித்வ்யக்ஷரோம்ர்த்யுர்நமமேதிசஶாஶ்வதம்॥" (௯௧) என்னக்கடவதிறே.

அஎ.— இப்படி ஸ்வரூபோபாய புருஷார்த்த விரோதிகளைக் கழிக்கிறவளவன்றிக்கே, இந்நமஸ்ஸுதான் ஸ்வரூபாதித்ரயத்தையும் ப்ரகாஶிப்பிக்கும் என்கிறார்

(இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையும்காட்டும்) என்று.

எ.— ("द्व्यक्षरः") ("த்வ்யக்ஷரः") இதி. இரண்டக்ஷரம் ம்ர்த்யுஶப்தவாச்யமான ஸம்ஸாரமாயிருக்கும்; மூன்றக்ஷரம் ப்ரஹ்மஶப்தவாச்யமான ஆத்மாவினுடைய ஸ்வரூபயாதாத்ம்ய பரமாயிருக்கும்; மம என்கிற இரண்டக்ஷரமும் ம்ர்த்யு; ந மம என்கிற மூன்றக்ஷரமும் நிலைநின்ற ஸ்வரூபம; இவ்விடத்தில் ஸ்வரூப யாதாத்ம்யபரமாவது - ஶேஷத்வவிஶிஷ்ட பாரதந்த்ர்யம்.

அஎ.— மேலுக்கவதாரிகை (இப்படி) என்றுதுடங்கி.

[இதுதான் ஸ்வரூபத்தையும், உபாயத்தையும், பலத்தையுங் காட்டும்] என்கிறயோஜனையில நமஸ் ஏகபதமாய் ஶேஷத்வப்ரகாஶகமான நமஸ்காரவாசியாகக்கடவது; அன்றிக்கே மூன்றிடத்திலும் ஸகண்டநமஸ்ஸாக யோஜிக்கையேமுக்யம்.

தொ.—உக்தார்த்தத்தில் ப்ரமாணங்காட்டுகிறார் ("द्व्यक्षरस्तु") ("த்வ்யக்ஷரஸ்து") இத்யாதியால்.

("த்வ்யக்ஷரஸ்து")என்றது-த்வ்யக்ஷர ஏவ என்றபடி. ("मृत्युः") ("ம்ர்த்யுः")என்றது- மாரகம் என்றபடி· ("ब्रह्मणःपदं") ("ப்ரஹ்மணः பதம்") என்றது - ப்ரஹ்மத்துக்குப்ராப்யமாயிருக்கும் என்றபடி; இச் சேதநனுடைய உஜ்ஜீவநார்த்தமிறே! ஈஶ்வரன் க்ர்ஷிபண்ணுகிறது, அந்தக்ர்ஷிபலமிறே! இது, ஆகையாலே ப்ரஹ்மத்துக்கு ப்ராப்யமென்னக்குறையில்லை. இவன், 'அஹம் நமம' என்ற அன்றிறே! அவன் ஸத்தைபெற்றுனுவதும்; அன்றிக்கே ("பதம்") என்றது - பதப்ரதமென்றபடியாகவுமாம்.

இப்படி பாதகமாகவும் அநுகூலமாகவும் சொல்லப்படுகிற த்வ்யக்ஷரத்ர்யக்ஷரங்கள்தான் எவையென்ன அருளிச்செய்கிறார்

("ममेति") ("மமேதி") இத்யாதியால். ("च") ("ச") என்றது- (த்ர்யக்ஷரஶ்ச) என்றபடி. ("शाश्वतं") ("ஶாஶ்வதம்") என்றது- ஶாஶ்வதப்ரதமென்றபடி.

அஎ.— மேலுக்கவதாரிகை (இப்படி) இத்யாதி.

(இப்படி) என்றது - கீழ்ச்சொன்னபடியேயென்றபடி. (கழிக்கிறவளவன்றிக்கே) என்றது - கழிக்கிறமாத்ரமன்றிக்கே என்றபடி.

மூ — அ௮. "தொலைவில்லிமங்கலந்தொழும்" என்கையாலே ஸ்வரூபம் சொல்லிற்று ;

வ்யா.--அ௮.--இதுதன்னை உபபாதிக்கிறார் மேல் மூன்றுவாக்யத்தாலே. ("தொலைவில்லிமங்கலம்") இத்யாதி. அதாவது - ("தொலைவில்லிமங்கலந்தொழும்") என்று, அவனுகந்தருளின நிலத்தளவும் செல்ல ஶேஷமாயிருக்கும்படியைச சொல்லுகிறவளவில் ("தொழும") என்று நமஸ்காரத்தைச்சொல்லுகையாலே, (ஸ்வரூபம்சொல்லிற்று) என்கை.

எ.—அ௮.— மேல்வாக்யத்துக்கு அவதாரிகை (இதுதன்னை) என்று தொடங்கி.

திருவாய்மொழி - ௬ - பத்து - ௫ - திரு - க - பாட்டு.

["துவளின்மாமணிமாடமோங்கு தொலைவில்லிமங்கலந்தொழு
மிவளைநீரினியன்னைமீருமக்காசையில்லைவிடுமினோ
தவளவொண்சங்குசக்கரமென்றுந் தாமரைத்தடங்கணென்றுங்
குவளையொண்மலர்க்கண்கணீர்மல்க நின்றுநின்றுகுமிறுமே".]

["அவ.—இவள் ப்ரக்ருதியறியாதே திருத்தொலைவில்லிமங்கலத்தைக் காட்டினபின்பு உங்கள் ஹிதவசநத்துக்கு இவள் மீளுமோ? என்கிறாள்.

வ்யா.—(துவள்) இத்யாதி. "உனக்கிப்போதுதவாதபடி தூரஸ்தம்" என்னுதல், "பூதகாலத்திலவதாரங்கள்" என்னுதல், உகந்தருளின நிலங்களிலே உள்ளுநிற்கிறவனளவிலே ப்ரவணையாதல் செய்தாளாய் மீட்க நினைக்கிறீகோளோ ?

தொ.—அ௮.— மேலுக்கவதாரிகை (இதுதன்னை) இத்யாதி.

மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (சொல்லுகிறவளவில்) என்றது- சொல்லுகிறபோது என்றபடி. நமஶ்ஶப்தம் ஸ்வரூபத்தைக்காட்டுமோ? என்னில் ; ப்ரணவோக்தமான அநந்யார்ஹஶேஷத்வம், தனக்குவிரோதியான அந்யரிலே அந்யதமனான ஸ்வஶேஷத்வம்போய் ஸ்புடமாக ப்ரகாஶிப்பது இந்நமஸ்ஸிலேயாகையாலே இந்நமஸ்ஸு ஸ்வரூபத்தைக்காட்டும்.

பி.—அ௮.—ப்ரகாரதயா விஶேஷணதயா நமஶ்ஶப்தம் "நமஃ-ப்ரஹ்வீபாவே" "நமு - ப்ரஹ்வீபாவே" என்று வணக்கத்தைச்சொல்லி அத்தாலே ஶேஷத்வகார்யமான (நமஸ்காரத்தை)ச்சொல்லக்கடவது ; ["தொழும்"] என்கையும் [நம:] என்கையும் பர்யாயமாகையாலே ["தொலைவில்லிமங்கலந்தொழும்"] என்று ஶேஷத்வகார்யமாய் காயிகமான (நமஸ்காரத்தைச்சொல்லுகையாலே)[ஸ்வரூபஞ்சொல்லிற்று]என்றபடி.

எ.—அசலிட்டுத் திருத்தொலைவில்லிமங்கலத்தை விரும்புகிற இவளை யெங்ஙனே மீட்கும்படி. சரமாவதியிலே நிற்கிற இவளை ப்ரதமாவதியிலே நிற்பார் மீட்கவோ? துவளென்பது - குற்றம். அதின்றிக்கேயிருக்கை. அவ்வூர்ச்சரக்கிலே குற்றமுண்டாகிலன்றோ இவளை மீட்கலாவது. குற்றமுண்டாய்க்கழிந்ததல்ல. ஜீவபரர்களிருவருக்கும் அபஹத பாப்மத்வாதிகளுண்டாயிருக்கச்செய்தே ஜீவாத்மாவுக்கு ஹேயமுண்டாய் பகவதநுக்ரஹத்தாலே கழியும், பரமாத்மா ஹேய ஸம்ஸர்க்காநர்ஹனாயேயிருக்கும்; அப்படியேயாயிற்றவ்வூரில் மாடங்களில் ரத்நங்களும். (மாமணி) ஒளியேயல்ல, பெருவிலையனுமாயிருக்கும். (ஓங்கு) அவ்வூரில் மாடங்களின்நிழலீடு நிருகரியனவும் வந்து காணுமிருப்பது. "இடமணித்து" என்று போலேகாணும் நாயகன் பிரிந்தது. மாளிகையின் நிழற்கீழேயிட்டு வைத்துக்காணும் பிரிந்தது. அவன்பிரிந்தபோது தொடங்கி அவ்வூரையும் அவ்வூரில் மாடங்களையும் அவற்றில் மாணிக்கங்களையும்பார்த்து, வைத்தகண் வாங்கமாட்டாதே யிருந்தாள்போலேகாணும். (தொலைவில்லிமங்கலம்) அதுப்புக்கூடாக அவ்வூரையன்றோ இவளுகந்தது. (தொழுமிவளை) 'கருத்திருக்கும், வெளுத்திருக்கும்' என்னுமாப்போலே, தொழுகை நிரூபகமாயிருக்கை. "ஸாஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீநம்" "ப்ராஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீநம்" (எ0சு) என்னுமாப்போலே. "கைபுரங்கைதொழும்பின்னை" என்னுமாப்போலே. (இவளை) இவளைமீட்கப்பார்ப்பதே! இவள்படியை புத்திபண்ணியன்றோ மீட்பது; (தொழுமிவளை) இவள்படி கைமேலே காணநிற்கச்செய்தே நீங்கள் மீட்கத்தேடுகிறபடியெங்ஙனே? (இவளைநீர்) பழிசொல்லப் பணைக்கிறவளிவள், பழி பரிஹரிக்கப்பார்க்கிறீர்கோள்நீங்கள். (இனி) தொழுகை தேஹயாத்ரையாயிற்று முன்னேயன்றோ மீட்கப்பார்ப்பது. (அன்னைமீர்) பகவத்விஷயத்திலே அவகாஹிக்க என்றொன்றில்லையோ? நியந்த்ர் நியாம்யபாவமேயோ வேண்டுவது. பெற்றவர்களென்று, அலக்யங்களிலே இழியக்கடவதோ? (உமக்காசையில்லை) ப்ராப்தயௌவனைகளானார்பக்கல் பெற்றவர்களுக்கு ப்ராப்தியுண்டோ? புக்கவிடத்தே ப்ரவணையாகாநிற்க, பெற்ற ப்ராப்திகொண்டு மீட்கவோ?

(விடுமினோ) இவ்வளவில் நீங்கள் கைவாங்கவமையும்.

பெற்றதாய்மார் "விடுமின்" என்னுங்காட்டில் விடார்களிறே! பின்னையும் நிர்ப்பந்திக்க; வேண்டா, இவளுக்கோடுகிற ரஸத்தைக் கண்டுகொடுநிற்கப்பாருங்கோள்! இவளுடைய அநுபவத்துக்குத் தண்ணீர்த் துரும்பாகாதே இத்தைக்கண்டுகொடு நிற்கவமையுமென்கிறாள். எங்களை 'ஆசைப்படவேண்டா, விடுங்கோள்' என்கிறீர்

எ.—னென்னில்; இவள் பேச்சிலும் நினைவிலும் நீங்களாதல் நானாதலுண்டோ? (உங்களையாதல் என்னையாதல், சொலலுதல் நினைத்தல் செய்கிருளோ?) "[illegible]" "த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச" என்னும் நிலையன்ரு இவளது. (தவளவொண் சங்கு) ஶ்யாமமான திருமேனிக்குப் பரபாகமான வெண்மையையுடைத்தாய், "உண்பது சொல்லிலுலகளந்தான் வாயமுதம்" என்கிற அழகையுடைத்தான சங்கு. (சக்கரம்) அங்ஙனமொரு விஶேஷணமிட்டுச் சொல்லவொண்ணுத அழகையுடைய சக்கரம். (என்றும்) 'இவற்றைக்காணவேணும்' என்னுதல், 'இவற்ருேடே வரவேணும்' என்னுதல் சொல்லமாட்டுகிறிலள் பலஹாநியாலே. (தாமரைத்தடங்கணென்றும்) அந்த ஆழ்வார்களளவும் வந்து அலையெறிகிற திருக்கண்கள். தாமரையை ஒருவகைக்கொப்பாகச்சொல்லலாய், போக்தாக்களளவன்றிக்கே யிருக்கிற திருக்கண்கள். (என்றும் - என்றும்) ஒரு மலையெடுத்தாப்போலே; சொல்லுக்குச்சொல்லுத்தளர்ந்து நடுநடுவே விச்சேதித்தாயிற்றுச் சொல்லுவது. திவ்யாயுதங்களையும் கண்ணழகையுங் காட்டியாகாதே இவளைத்தோற்பித்தது.

(குவளை) இத்யாதி. இக்கண்களைக்கண்டால் தாமரைத்தடங்கணென்ரு நிர்மலக அடிப்பது. கண்ணும் கண்ணநீருமாய் இவளிருக்கிற இருப்பைக் கண்டுகொண்டிருக்கவன்ரு உங்களுக்கடிப்பது. ["[illegible]"] ["ஆஹ்லாதஶீதநேத்ராம்பு:"] (எ0எ) இத்யாதி ஸதாதர்ஶநத்துக்கு ஒருதேஶந் தேடிப்போகவேண்டாகாணும். குவளைப் பூப்போலே யழகியகண்கள் நீர்மல்க.

அவள் தன்னுடைய ஸ்த்ரீத்வத்தைக் காற்கடைக்கொள்ள, நீங்களெங்ஙனே மீட்கப்பார்க்கும்படி. கண்ணநீர்பாய்கையாவது-ஸ்த்ரீத்வமழிகையிறே! (நின்றுநின்று குமிறுமே) பேச்சுப்போய் கண்ணநீராய், கண்ணநீர்போய் தடுமாறுகிற அவஸ்த்தையிலே மீட்கப்போமோ! ராஜகோஷ்ட்டியிலே "உகும், இறும்" என்று சிலர் பொருள்சொல்ல. விக்ரமஸிங்கனென்பானொருவன், "அங்ஙனல்ல, கன்றைக்கடக்கக் கட்டிவைத்தால் முலைக்கண் கடுத்துப் பசு அலமந்துபடுமாப்போலே, உள்ளோடுகிறக்லேஶம் வாய்விடமாட்டாதே நோவுபடுகிற இவளுக்கிது வார்த்தையோ" என்ருன். பெருவெள்ளத்தில் சுழிக்குமாப்போலே, அகவாயிலுள்ளது வெளியிடமாட்டாள்; உள்ளேநின்று சுழிக்கிறபடி. (தொலைவில்லிமங்கலந் தொழும்) என்கையாலே-காயிகவ்யாபாரஞ்சொல்லிற்று; (தவளவொண் சங்குசக்கரமென்றும் தாமரைத் தடங்கணென்றும்) என்று சொல்லுகையாலே-வாசிகவ்யாபாரம் சொல்லிற்று; (குமிறும்) என்கையாலே - மாநஸவ்யாபாரம் சொல்லிற்று"].

மூ— "வேங்கடத்துறைவார்க்குநம" என்கையாலே உபாயம்சொல்லிற்று;

வ்யா.— ("வேங்கடத்து") இத்யாதி. அதாவது- ("வேங்கடத்துறைவார்க்குநம") என்று திருவேங்கடமுடையானுக்கு சேஷம் நான் எனக்குரியேனல்லேன் என்று, ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத ஸ்வரூபபாரதந்த்ர்யத்தைச் சொல்லுகையாலே, அவனே உபாயம், என்னுமிடம் ஸித்திக்கையாலே (உபாயம் சொல்லிற்று) என்கை.

எ.— திருவாய்மொழி - ௩ - பத்து - ௩ - திரு - ௬ - பாட்டு.

> ["வேங்கடங்கண்மெய்ம்மேல்வினைமுற்றவுந்
> தாங்கடங்கட்குநல்லனவேசெய்வார்
> வேங்கடத்துறைவார்க்குநமவென
> லாங்கடமையதுசுமந்தார்கட்கே".]

["அவ.— கீழ் திருமந்த்ரார்த்தத்தை யருளிச்செய்தார்; அதிலே யருளிச்செய்யாததோர் அர்த்தமுண்டிறே! நமஶ்ஶப்தார்த்தம். (அதாவது - அவித்யாதிகளுடம்கழிகை.) அத்தையருளிச்செய்கிறார். அவன் ரக்ஷ்யவர்க்கத்திலே பெற்றவளவால் பர்யாப்தனன்றிககே யிருந்தாலும், நாம் அபிநிவிஷ்டராளுலும், ஶரீரஸம்பந்த நிபந்தநமாக அநாதிகாலம் நாம்பண்ணிவைத்த பகவத்ப்ராப்தி ப்ரதிபந்தககர்மங்கள் செய்வதென்னென்ன; நாமிதிலே துணியவே அவையெல்லாம் தன்னடைவே நஶிக்குமென்கிறார்.

வ்யா.— (வேங்கடங்கள்) கடமென்று - கடனென்றபடி. கடங்களென்றது-கடன்களென்றபடி. அவையாவன- ["त्रिभिर्ऋणवा जायते"] ["த்ரிபிர்ர்ணவாஜாயதே"] (எ0அ) என்கிறபடியே - மூன்று ர்ணத்தோடேகூடவாயிற்று இவன்வந்துபிறப்பது; ["ब्रह्मचर्येणर्षिभ्यो यज्ञेन देवेभ्यः प्रजया पितृभ्यः"] ["ப்ரஹ்மசர்யேணர்ஷிப்ய: யஜ்ஞேநதேவேப்ய:ப்ரஜயாபித்ர்ப்ய:"] (எ0௯) என்கிறபடியே - ப்ரஹ்மசர்யத்தாலும், யாகத்தாலும், ப்ரஜோத்பத்தியாலும் ர்ஷிகளுக்கும், தேவர்களுக்கும், பித்ர்க்களுக்கும் தனிசு இறுக்கக்கடவன்.

தொ.— மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (ஸித்திக்கையாலே) என்றது - ஸ்வஸ்வாதந்த்ர்யநிவர்த்திரூபார்த்தபலத்தாலே (ஸித்திக்கையாலே) என்றபடி; அதாவது-ஸ்வஸ்வாதந்த்ர்யம் நிவர்த்தித்தபோதே ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம் நிவர்த்திக்கையாலே, அநந்தரம் ஸ்வரக்ஷணத்தில் ஸ்வஶேஷியான ஈஶ்வரன்கைபார்த்திருக்கையாகிற பாரதந்த்ர்யம் ஸித்தித்த அநந்தரம் 'அவனே உபாயம்'என்னுமிடம் (ஸித்திக்கை).

௭.— "ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம்" "ஜ்ஞாநாக்நிதக்தகர்மாணம்" (௭௧0) என்னுகின்றதிறே! (மெய்ம்மேல்வினை முற்றவும்) ப்ராக்தநஸம்பந்தநிபந்தநமாக வரக்கடவபாபங்களைச் சொல்லுகிறது. ஆக, "கடன்கள், மெய்ம்மேல் வினைமுற்றவும், வேம் - நசிக்கும்." என்றிங்ஙனே ஆளவந்தாரருளிச்செய்யும்படி. இத்தைநம்பெருமாளர் கேட்டருளி, "இதுக்கு வேதாந்தத்தில் சொல்லுகிறகட்டளையிலே பொருளாகவமையாதோ?" என்றிங்ஙனே அருளிச்செய்வர். அதாவது - "உத்தரபூர்வாகயோரச்லேஷவிநாசௌ" "உத்தரபூர்வாகயோரச்லேஷ விநாசௌ" (௭௧௧) என்றும், "ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" "ஏவம்ஹாஸ்ய ஸர்வே பாப்மாந:ப்ரதூயந்தே" (௭௧௨) என்றும் சொல்லுகிறபடியே, வேம் என்கையாலே - பூர்வாகத்துக்கு விநாசமும், உத்தராகத்துக்கு அச்லேஷமுமாகச்சொல்லுதல்; அன்றிக்கே, இவ்விநாசந்தான் - மற்றையதுக்கும் உபலக்ஷணமாய், அச்லேஷியாமையைச்சொல்லிற்றாகவுமாம். பூர்வாகமாவது - ஜ்ஞாநம்பிறப்பதற்குமுன்பு புத்திபூர்வகமாகப் பண்ணிப்போரும் ப்ராதிகூல்யம். உத்தராகமாகிறது - ஜ்ஞாநம்பிறந்தபின்பு ப்ராமாதிகமாகப்பண்ணும் ப்ராதிகூல்யம். பின்பும் விரோதியான தேஹஸம்பந்த மநுவர்த்திக்கையாலே பாபங்களிலே ப்ரவர்த்தியாநிற்கும்; அநந்தரம், ஜ்ஞாநம்பிறவா, கடுகமீண்டு முன்புசெய்ததுக்கு 'நாமென்செய்தோமானோம்' என்றநுதபித்துப் படும். கடன்கள் - மேல்வினைமுற்றவும் - வேம்; இதுமெய் - இது ஸத்யம், "ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" "ஏவம் ஹாஸ்யஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" என்றதிறே. ப்ரத்யக்ஷாதிகள் ப்ரமத்துக்கு மூலமாய் ப்ரமவிவர்த்தகமுமாயிருக்கும்; அங்ஙனன்றியே, "யதாபூதவாதி ஹி ஸாஸ்த்ரம்" "யதாபூதவாதிஹி ஸாஸ்த்ரம்" (௭௧௩) என்கிறபடியே - ஸாஸ்த்ரஞ்சொல்லிற்றென்றால் அவ்வர்த்தம் மெய்யாயிருக்குமிறே! முகப்பாட்டிலேசொல்லவேண்டுவதொரர்த்தஞ்சொல்லாதேபோந்ததிறே! அவ்வம்சமிங்கேசொல்லுகிறார். கடலுக்குத்தொடுத்த அம்பை, அவன்காலடிவரநின்றவாறே, அநந்தரத்தே "உன் விரோதிகளைச்சொல்லாய்" என்றானிறே! இவ்விடத்திலே பட்டர் ஒரு இதிஹாஸமருளிச்செய்வர் - "பண்டு, தலையில்மயிரின்றிக்கேயிருப்பானொருவன் தெப்பரிமாறாநின்றான், அங்கேயொருவன் சென்று 'மயிரைப்பெறுதேகில் தனியேநின்று பரிமாறுகின்றீ' என்ன, 'என்றுன் கடந்தது' என்ன; 'ஒன்றுமில்லை' 'கொண்டுபோகவந்தேன்' என்ன, 'ஆகிலொருகோட்டைபைக்கொண்டு போகலாகாதோ' என்றெடுத்துவிட, அவன்அத்தைக்கொண்டு வாராநிற்கச்செய்தே எதிரேயொருவன்வந்து 'இதுக்கென்பெற்றது' என்ன, 'உன்றனைகோட்டை

எ—த்தலையன்தந்தான்’ என்றானாய், அவன் அத்தைச்சென்றங்கே ‘இன்னா ன் உம்மைவைதுபோகாநின்றான்!’ என்ன, ‘அடா! என்னெல்லையுங்கொ ண்டு என்னையும் வைதுபோவதே’ என்று தொடர்ந்துவந்தானாய், அவ ன்புரிந்துபார்த்து ‘ஏன்றான் குழல்களலையவலைய ஓடிவாராநின்றதீ !’ என்ன, ‘ஒன்றுமில்லை இன்னமொரு கோட்டைகொண்டு போகச் சொல்லவந்தேன்’ என்றானாய்; அப்படியே, கடலை முகங்காட்டுவித்துக் கொள்ளுகைக்காகக் காலைப்பிடிப்பது கோலைத்தொடுப்பதாகாநிற்க, அவன்வந்துமுகங்காட்டினவாறே, ‘உனக்கம்புதொடுத்தோம்’ என்ன லஜ்ஜித்து, ‘உன்விரோதிகளைச்சொல்லுநாமித்தைவிட’ என்றாரிறே’’! (தாங்கள்)இத்யாதி. இதுதான், பலபோக்தாவானவனுக்கு உத்தேஸ்ய த்தோபாதி ப்ரார்த்தித்துப்பெறவேண்டியிருக்குமோவென்னில்; அது வேண்டா, தாங்கள் தங்களுக்குநன்றான கைங்கர்யத்தைப்பண்ணு நிற்கவமையும், இவ்விரோதி தன்னடையேபோமென்கிறார். “தாங் கள் தங்களுக்கு நன்றான ப்ரதிபந்தத்தைச்செய்யவமையும்” என்ன வொண்ணுகிறே, “வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்” என்கிற அதிகாரியைக்குறித்துச் சொல்லுகையாலே. அதிகாரி வைலக்ஷண்ய மும் வ்ருத்திவைலக்ஷண்யமும் தோன்றும்படி - “தாங்கள்தங்கட்கு” என்றிங்ஙனேயூன்றிச் சொல்லுமாமநந்தாழ்வான். (தாங்கள்) இதரவி ஷயங்களில் விரக்தராய் கைங்கர்யருசியுடையரா யிருக்குமவர்கள். (தங்கட்கு) இப்படிப்பட்ட ருசியுடையராயிருக்கிற தங்களுக்கு. (நல்லனவேசெய்வார்) தங்கள் ஸ்வரூபத்தோடுசேர்ந்த கைங்கர்யத் தையேபண்ணுவார். “தாங்கள் தங்கட்கு நல்லனவேசெய்வார்” என்கிறது - இவர்களை எங்ஙனேயாக நினைத்தென்னில; (வேங்கட த்து) இத்யாதி. (வேங்கடத்துறைவார்க்கு) சதுர்த்தியின் அர்த்தஞ்சொ ல்லுகிறது. (நம) எனக்கன்று, அவனுக்கென்றபடி. (எனல்) இதுதான் நெஞ்சிலுண்டாகவும்வேண்டா, உக்திமாத்ரமேயமையும். இதுதான் அல்பமாகிலு மிவன்றனக்கருமையாயிருக்குமோவென்னில்; (ஆம்)ஸுல பம். “எளிது” என்று, ஸ்வரூபத்தோடே சேராததாயிருக்குமோவெ ன்னில்; (கடமை) ப்ராப்தம். (அது சுமந்தார்கட்கே) பெறுகிற பேற் றின்கனத்தையும் இவனுடையநேர்த்தியில் அல்பதையையும் பார்த்து “இப்பேற்றுக்கிவனிம்மலையைச்சுமவானோ’’ என்பானைப்போலே “அ து சுமந்தார்கட்கு’’ என்று தம்கருத்தாலே சொல்லிற்றாகவுமாம். பெறுகிற பேற்றின்கனத்தையும் பகவத்க்ருபையையும் அறிந்திருக்கிற இவர்கருத்தாலே சொல்லிற்றாதல் ; இவன்பக்கலுள்ளதனைக் [illegible] நினைத்திருக்குமவன்கருத்தாலே சொல்லிற்றாதல்; “[illegible] ஷ்டடாம்’’ (எகா) என்றிறே ! அவனிருப்பது. த்ரௌபதி [illegible]

மூ.— "அந்திதொழுஞ்சொல்" என்கையாலே பலம்சொல்லிற்று.

வ்யா.—("அந்திதொழுஞ்சொல்") இத்யாதி. அதாவது—("அந்திதொழுஞ்சொல்") என்று தாஸ்யரஸமதிஶயித்தால், அதினுடைய சரமதஶையிலே சொல்லக்கடவ ("தொழுஞ்சொல்") என்று நமஶ்ஶப்தத்தைச் சொல்லுகையாலே (பலம்சொல்லிற்று) என்கை.

ஏ.—சொல்ல—"கோவிந்தா" என்றவாறே, "நம்பேரைச்சொன்னான்" என்று திருவுள்ளம்புண்பட்டிருக்குமவனிறே! [కృష్ణమాందూరవాసినం] [க்ருஷ்ணமாம்தூரவாஸிநம்] (ஏகரு) அவளைக்கொண்டாடா, தன்னை நிந்தியா, வ்யஸநப்பட்டானிறே! அப்போது ஸதஸ்ஸில் பிறந்தபரிபவம் பரிஹ்ருதமாகச்செய்தேயும், நம்பேரைச்சொல்லிக் கூப்பிட்டவளுக் காற்றாமையிலே முகங்காட்டப்பெற்றிலோம் என்றுள்ளதனையும் இழவுபட்டிருந்தானிறே! நம்பேர் தன் காரியஞ்செய்ததத்தனைபோக்கி, நாமிவளுக்கொன்றும் செய்திலோமிறே என்றிருந்தான். அஸக்ருதயாக இரண்டுஶப்தத்தைச் சேர்த்துச்சொல்ல, அது விஶ்லேஷணத்துக்கு உடலாகாநின்றதிறே! ஶப்தஶக்தியாலே; அவ்வோபாதியும் போராமையில்லையிறே! திருநாமம்.

("வேங்கடத்துறைவார்க்கு நமவெனலாம்கடமை யதுசுமந்தார்கட்கு)- கடங்கள்மெய்ம்மேல் வினைமுற்றவும்வேம். மெய், ஆகையால் தாங்கள் தங்கட்கு நல்லனவேசெய்வார்."]

திருவாய்மொழி - கூ - பத்து - அ - திரு - எ - பாட்டு.

["உண்டுகளித்தேற்கும்பரென்குறைமேலைத்
தொண்டுசெளித்தந்திதொழுஞ்சொல்லுப்பெற்றேன்
வண்டுகளிக்கும்பொழில்சூழ்திருப்பேரான்
கண்டுகளிப்பக்கண்ணுள்நின்றகலானே".]

["அவ.— அவனுடைய ஆதரத்தாலே தமக்குண்டான கார்த்தார்த்யத்தை யருளிச்செய்கிறார்.

தொ.—["அந்திதொழும்"] இத்யாதி.

மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. சேதநன் எம்பெருமான்விஷயத்திலேபண்ணும் கைங்கர்யத்திலே இவனுக்கு ஸ்வப்ரயோஜநத்வபுத்தி நிவர்த்தித்தாலொழிய ஈஶ்வரனுக்கு ப்ரயோஜநமாக மாட்டாமையாலே, இந்நமஶ்ஶப்தம் ததேகபோக்யத்வவிரோதியான இச்சேதநனுடைய ஸ்வபோகபுத்தியைக் குலைத்து அவ்வழியாலே ததேகபோகமான கைங்கர்யத்தைக்காட்டும்.

மூ.—அக. "உற்றது முன்னடியார்க்கடிமை" என்கையாலே,

வ்யா.—அக.—இப்பதத்திலே ததீயசேஷத்வமும் ஆர்த்தமாக அநுஸந்தேயமாகையாலே, அத்தையருளிச்செய்கிறார்

("உற்றதும்") என்று தொடங்கி. அதாவது - ("நின்திருவெட்டெழுத்துங்கற்று, நானுற்றது முன்னடியார்க்கடிமை") என்று, திருமந்த்ரங்கற்றதால் நான் ("உற்றது முன்னடியார்க்கடிமை") என்னுமிவ்வார்த்தத்திலே என்கிறபடியே,

ஏ.—வ்யா.— (உண்டுகளித்தற்கு மேலென்ன குறை) இப்படியநுபவித்துக் களிக்கப்பெற்ற எனக்கொருகுறையுண்டோ? அவனுடையகுணங்களையநுபவித்து மயர்வறமதிநலமருளப்பெற்றவெனக்கு மேல வேண்டுவதொன்றுண்டோ? என்றிருக்கிறார். ஜ்ஞாநலாபமுண்டானபின்பு "அவ்வருகில ப்ராப்திபெற்றிலோம்" என்று வருவதொருகுறையுண்டோ? உம்பரென்றது - மேலென்றபடி.

(மேலைத்தொண்டு) இத்யாதி. மேலானதாஸ்யரஸமதிசயித்து. "ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந்" "யேநயேந தாதா கச்சதி" (எகசு) என்கிற ரஸத்தையநுபவித்து. "ஶேஷோஸ்ம்யஹம்" "ஶேஷவ்ருத்திஃ" என்றதுபோலன்றிறே ஸ்வரூபாநுரூபமானது. (தொண்டுகளித்து) தொண்டாலே உகப்புத்தலைமண்டையிட்டு. அதினுடைய சரமதசையிலே "நமஇத்யேவவாதிநஃ" "நமஇத்யேவவாதிநஃ" என்று புக்திபூர்வகமாகச்சொல்லுவதொன்றுண்டு, அப்பாஸுரத்தைச் சொல்லப்பெற்றேன். அதாவது-ப்ரீதியுந்த சொல்லாலே திருவாய்மொழிபாடி அடிமைசெய்யப்பெறுகை.

(வண்டு) இத்யாதி. வண்டுகள் மதுபானம்பண்ணிக்களிக்கிறபொழிலாலே சூழப்பட்ட திருப்பேரிலேவர்த்திக்கிறவன். ஜ்ஞாநாதிகரோடு திர்யக்குக்களோடு வாசியறக்களிக்கும்தேசம். (கண்டுகளிப்ப) "மெய்கொள்ளக்காண விரும்புமென்கண்கள்" என்று விடாய்த்தகண்கள் கண்டுகளிக்கும்படியாக. (கண்ணுள்நின்றகலானே) நான் போகச்சொல்லிலும் கண்வட்டத்திலின்றும் அகலுகிறிலன்; விஷயப்ரவணர் போகச்சொன்னாலும் தூணைக்கட்டிக்கொண்டு போகாதாப்போலே. இப்படியவனை யநுபவித்துக்களிக்கப்பெற்ற எனக்கு மேலொருகுறையுண்டோ?"] ... ... *

அக —மேல்வாக்யத்துக்கவதாரிகை (இப்பதத்திலே) என்று தொடங்கி.

*["உற்றது முன்னடியார்க்கடிமை"] என்கிற ஸ்ரீஸூக்திப்படியே

தொ.—அக.— மேலுக்கவதாரிகை (இப்பதத்திலே) இத்யாதி.

(இப்பதத்தில்) என்றது - இந்நமஃபதத்தில் என்றபடி. (ஆர்த்தமாக) என்றது - அர்த்தபலத்தாலேயென்றபடி; அதாவது - ததீயபர்யந்தமானால் அல்லது ஸ்வரூபஸித்தி இல்லாதபகவதநந்யார்ஹஶேஷத்வரூபார்த்தபலத்தாலே என்றபடி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. ["உற்றதும்"] என்றது - ஊன்றியிருந்ததுமென்றபடி.

இப்பாட்டையும், இதன் வ்யாக்யாநத்தையும் ககஉ பக்கத்தில் கண்டுகொள்வது.

மூ.— இதிலே பாகவதசேஷத்வமும் அநுஸந்தேயம்.

வ்யா.—அஹங்காரமமகாரங்கள் நிவர்த்தமாய், பகவச்சேஷத்வம் உள்ளபடி ப்ரகாசிக்கிற இந்நமஸ்ஸிலே தத்காஷ்டையான (பாகவத சேஷத்வமும்) அநுஸந்திக்கவேணுமென்கை.

எ.—[இதிலே]-(அஹங்காரமமகாரங்கள் நிவர்த்தமாய் பகவச்சேஷத்வம் உள்ளபடி ப்ரகாசிக்கிற இந்நமஸ்ஸிலே),[பாகவதசேஷத்வமும்]-(தத்காஷ்டையான) [பாகவதசேஷத்வமும்], [அநுஸந்தேயம்]-(அநுஸந்திக்கவேணும்) என்று மூலார்த்தம்.

இது தன்னை ஸ்ரீபாகவதத்திலே ஸ்ரீஸௌநகபகவான் மூகபேதேந அருளிச்செய்தானிறே! "సంసారవిషవృక్షస్య ద్వేఫలే హ్యమృతోపమే। కదాచిత్కేశవే భక్తిస్తద్భక్తైర్వా సమాగమః॥" "ஸம்ஸாரவிஷவ்ருக்ஷஸ்யத்வேபலேஹ்யம்ருதோபமே|கதாசித்கேசவேபக்திஸ்தத்பக்தைர்வாஸமாகமஃ||"(எகஎ)"பக்தி-சேஷத்வகார்யமாகையாலே இங்கு ப்ரதமபதத்தாலே ப்ரதமபலமான சேஷத்வத்தையும், (தத்பக்தைர்வாஸமாகமஃ) என்று த்விதீயபலத்தை த்விதீயபதத்தாலும் அருளிச்செய்கிறான்" என்று அஸ்மதாசார்யோக்தம். "అథభాగవతంబ్రూతయద్ధర్మోయాదృశోనృణాం।యథాచరతియద్బ్రూతేర్యైర్లింగైర్భగవత్ప్రియః॥" "அதபாகவதம்ப்ரூதயத்தர்மோயாத்ருசோந்ருணாம் | யதாசரதியத்ப்ருதேயைர்லிங்கைர்பகவத்ப்ரியஃ||"(எகஅ) என்று உத்தவர்பாகவதலக்ஷணத்தை க்ருஷ்ணனைக்கேட்க, "సర్వభూతేషుయః పశ్యేద్భగవద్భావమాత్మనః।భూతానిభగవత్యాత్మన్యేష భాగవతోత్తమః॥" "ஸர்வபூதேஷுயஃ பச்யேத்பகவத்பாவமாத்மநஃ | பூதாநிபகவத்யாத்மந்யேஷபாகவதோத்தமஃ||"(எகக) என்று துடங்கி "విసృజతిహృదయంనయస్యసాక్షాద్ధరిరవశాభిహితోప్యఘౌఘనాశః। ప్రణయరశనయాధృతాంఘ్రిపద్మస్సభవతిభాగవతప్రధానః॥" "விஸ்ருஜதிஹ்ருதயந்நயஸ்ய ஸாக்ஷாத்தரிரவசாபிஹிதோப்யகௌகநாசஃ |ப்ரணயரசநயாத்ருதாங்க்ரிபத்மஸ்ஸபவதிபாகவதப்ரதாநஃ||" (எஉ0)என்றருளிச்செய்தானிறே! இங்கு "பாகவதர் என்கிறது - பரசேஷத்வஜ்ஞாநரஸிகர்" என்று தேசிகர். "తస్యయజ్ఞవరాహస్యవిష్ణోరమితతేజసః। ప్రణామంయేపికుర్వంతి తేషామపినమోనమః॥ విష్ణోర్దేవాదిదేవస్యజగద్ధాతుఃప్రజాపతేః। యేప్రణామకృతస్తేభ్యోనమస్తేభ్యఃపునఃపునః॥" "தஸ்யயஜ்ஞவராஹஸ்யவிஷ்ணோரமிததேஜஸஃ | ப்ரணாமம்யேபிகுர்வந்தி தேஷாமபிநமோநமஃ||

தொ.— தத்காஷ்டையான) என்றது-பகவச்சேஷத்வஸீமாபூமியானவென்றபடி.

ஏ.— விஷ்ணோர்தேவாதிதேவஸ்ய ஜகத்த்யாதுஃப்ராஜாபதேஃ| யேப்ராணமக்தஸ்தேப்யோ நமஸ்தேப்யஃபுநஃபுநஃ||" (எஉக) என்று ப்ரமாணங்களில் நமஃபதத்தாலே பாகவதஶேஷத்வத்தைச் சொல்லுகையாலே இங்கும் நமஃபதத்தில் சொல்லுகையே உசிதமென்று கருத்து. "నమః ప్రహ్వీభావే" "நமு - ப்ரஹ்வீபாவே" என்று நமஸ்ஸு ப்ரஹ்வீபாவவாசகமாய், ப்ரஹ்வீபாவம் ஶேஷத்வகார்யமாகையாலே நமஃபதம் ஶேஷத்வஸூசகமாயிருக்கும். "మమ ప్రియస్య మదర్చాతో మద్భక్తపరివర్జితా| మమాజ్ఞాస ఇతి స్వామి వచనాత్ తత్ప్రియార్చనం॥ అత్యంతాధికతాం చాస్య తేషు తద్భక్తయోగతః। అత సచ్ఛేషతాకాష్ఠా తద్భక్తశేషతా॥ కర్మోపాధికశేషత్వమేవాత్ర నిషిధ్యతే।" "மமப்ரியம்மதர்சாதோமத்பகதவர்ஜிதா|மமாக்ஞாஸ இதி ஸ்வாமிவசநாத்தத்ப்ரியார்சநம்|| அத்யந்தாதிகதாஞ்சாஸ்ய தேஷுதத்பக்தயோகதஃ| அதஸ்தச்சேஷதாகாஷ்டா தத்பக்தஶேஷதா|| கர்மோபாதிகஶேஷத்வமேவாத்ர நிஷித்யதே|" (எஉஉ).

அந்தபாகவதர்களிலும் ஸத்காரயோக்யரென்றும், ஸஹவாஸயோக்யரென்றும், ஸதாநுபவயோக்யரென்றும த்ரிவிதராயிருப்பர்கள்.

ஸத்காரயோக்யராவார் — நாமரூபப்ரதாநர்; "యేకంఠలగ్నతులసీనళినాక్షమాలా యే బాహుమూలపరిచిహ్నితశంఖచక్రాః। యే వాలలాటఫలకే లసదూర్ధ్వపుండ్రా స్తే వైష్ణవా భువనమాశు పవిత్రయంతి॥" "யேகண்டலக்நதுளஸீ நளிநாக்ஷமாலா யேபாஹுமூலபரிசிஹ்நிதஶங்கசக்ராஃ| யேவாலலாடபலகேலஸதூர்த்வபுண்ட்ராஃ தேவைஷ்ணவாபுவநமாஶுபவித்ரயந்தி||"(எஉ௩.) "చోరో వా యది వా జారో హ్యధమో వాపి దుర్జనః। యో హ్యంకితో వైష్ణవలాంఛనేన పూజ్యస్సనిత్యః ప్రతిమాసమానః॥" "சோரோவாயதிவாஜாரோ ஹ்யதமோவாபி துர்ஜநஃ| யோஹ்யங்கிதோவைஷ்ணவலாஞ்சநேந பூஜ்யஸ்ஸவிஷ்ணோஃ ப்ரதிமாஸமாநஃ| (எஉ௪) "అపక్వమచ్యుతస్యాపి నావమన్యేత కించన। హితం వా బోధయేత్ సాధు దత్వా కించిదీప్సితం॥" "அபக்வமச்யுதஸ்யாபி நாவமந்யேத கிஞ்சந | ஹிதம் வாபோதயேத்ஸாது தத்வா கிஞ்சிதீப்ஸிதம்||" (எஉரு).

(அந்தஷாட்குண்யாயத்தமான) என்றது - அந்தஷாட்குண்யாதீநமானவென்றபடி. [வாத்ஸல்யம்] - தோஷேபிகுணவத்வபுத்திஃ; வத்ஸம்-லாளயதீதி-வத்ஸலஃ, வத்ஸஸ்யபாவோவாத்ஸல்யம்; "నారాయణో యస్యాస్స్వయం వర్తతే నామమంగళం । నారాయణస్తమస్త్వైవత్సం గౌరివవత్సలా॥" "நாராயணோயஸ்யாஸ்யேவர்த்ததேநாமமங்களம் । நாரயணஸ்தமவ்வாஸ் தேவத்ஸம்கௌரிவவத்ஸலா||" (எ௫௪).

தொ.-ஷட்குணங்களுக்கு ப்ராதாந்யமாவது-தன்னைப்பற்றிஸகல குணங்களுக்கும்ப்ரகாஸமாம்படியிருக்கை. அது எங்ஙனேயென்னில்; முதல்தன்னிலே ஸர்வேஸ்வரன்பண்ணும் ஜகத்ரக்ஷணத்துக்குப்ரதாநாபேக்ஷிதகுணம் க்ருபையிறே! அதுதானும் பரதுஃகதுஃகித்வமாதல், பரதுஃகாஸஹிஷ்ணுத்வமாதல், பரதுஃகாவிசிகீர்ஷையாதலிறே! இம்மூன்றிலொன்றும் ஈஸ்வரன் பரதுஃகத்தை அறியாதபோது கூடாதிறே! [வாத்ஸல்ய]மாவது - குற்றமே நலத்தமாக இவனை அங்கீகரிக்கையிறே!

மூ.—ஸௌசீல்யாதிகளும்,

வ்யா.— ஸௌசீல்ய ஸ்வாமித்வ ஸௌலப்யாத் யஸங்க்யேய கல்யாணகுணவிசேஷங்கள்.

எ.— மஹதோமந்தைஸ்ஸஹ நீரந்த்ரேண ஸம்ச்லேஷ: - [ஸௌசீல்யம்] ; விஷ்ணுபுராணே “నాహం దేవో న గంధర్వో న యక్షో న చ దానవః । అహం వో బాంధవో జాతో నైతచ్చింత్యమితోఽన్యథా” ॥ “நாஹந்தேவோ நகந்தர்வோ நயக்ஷோநசதாநவ: । அஹம்வோபாந்தவோஜாதோ நைதச்சிந்த்யமதோந்யதா॥”(எருரு)(ஸ்வாமித்வ)மாவது - ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தபதார்த்தங்களையும் தன்னதென்று அபிமாநிக்கை.(ஸௌலப்யம்) -கிட்டஎளியனாகை. (அஸங்க்யேய கல்யாணகுணவிசேஷங்கள்)என்றது- ‘యథా రత్నాని జలధేరసంఖ్యేయాని పుత్రక । తథా గుణా హ్యనంతస్య హ్యసంఖ్యేయా మహాత్మనః॥” “யதாரத்நாநிஜலதேரஸங்க்யேயாநிபுத்ரக। தஸ்யாகுணாஹ்யநந்தஸ்ய ஸங்க்யேயாமஹாத்மந:॥” (எருஙு)என்று மஹாபாரதத்தில்சொல்லுகிறபடியே அஸங்க்யேயமான கல்யாணகுணவிசேஷங்களென்றபடி.

(குணவிசேஷங்கள்)என்றதாலே-மார்தவார்ஜவ ஸௌஹார்த்த ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்ய ஔதார்ய சாதுர்ய ஸ்தைர்ய தைர்ய சௌர்யங்களென்றபடி. ஆச்ரிதவிரஹாஸஹத்வம் - மார்தவம். மநோவாக்காயைகரூப்யத்வம் - ஆர்ஜவம். ஸ்வஸத்தாநபேக்ஷதத்ரக்ஷாபரத்வம் - ஸௌஹார்தம். ஜந்மவ்ருத்தஜ்ஞாநாத்யநபேக்ஷயா ஸர்வைராச்ரயணீயத்வம் - ஸாம்யம். ஸ்வார்த்தநிரபேக்ஷபரதுக்கநிராசிகீர்ஷா - காருண்யம். பரதுக்கதுக்கித்வம்வா, க்ஷீரவதுபாயபாவேபிஸ்வாதுத்வம் வா - மாதுர்யம். பக்தாநுக்ரஹ வதாந்யத்வாதே: ஆமூலதோ துரவகாஹத்வம் - காம்பீர்யம் ; ஹர்ஷாமர்ஷ வ்யஞ்ஜகவிகாரரஹித்யத்வம்வா - காம்பீர்யம். ப்ரத்யுதகாத்ர்யேபி அத்ருப்தத்வம் - ஔதார்யம் ; ஸ்வாத்மபர்யந்தம் ஸர்வாபிலஷிதத்ரவ்யதாநம் - ஔதார்யமித்திவா. ஆச்ரிததோஷகோபநம் சாதுர்யம். அகம்ப்யத்வம் - ஸ்தைர்யம். அபக்ஷப்ரதிஷ்டத்வம் - தைர்யம். பரபலப்ரவேசஸாமர்த்யம்-சௌர்யம். தந்நிராகரணம் - பராக்ரமம்.

தொ.— அங்கீகரிக்குமிடத்தில் தந்தோஷம் தனக்குத்தட்டாதபடி யிருக்கைக்கு சக்தி அபேக்ஷிதமாயிற்றே! இப்படி யல்லாதுகளொன்றி சொல்வது. [வாத்ஸல்யா]திகளுக்கு குணவிசேஷத்வமாவது - ஆச்ரயணோபயோகித்வாத்,

மூ.—திருமேனியும், காந்தி ஸௌகுமார்யாதிகளும்,

வ்யா.—(திருமேனி) ஆவது-அஸாதாரணமான திவ்யமங்களவிக்ரஹம். ஏகவசநம் ஜாத்யபிப்ராயமாய், நித்யமான திவ்யவிக்ரஹத்தையும், ஐச்சிகமாக பரிக்ரஹிக்கும் விக்ரஹாந்தரங்களையும் சொல்லுகிறது; அல்லாதபோது, ஓரோஸமூஹமாக எண்ணிவருகிற ப்ரகரணத்துக்குச் சேராது; இதுதான் நடுவிற்றிருவீதிப்பிள்ளை, பட்டர், ஆச்சான்பிள்ளை இவர்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்களிலே ஸுஸ்பஷ்டம்.

(காந்திஸௌகுமார்யாதிகள்) ஆவன - அந்த விக்ரஹகுணங்களான ஸௌந்தர்ய, ஸௌகுமார்ய, ஸௌகந்த்ய, லாவண்ய, யௌவநாதிகள்.

எ.— "అలంకరణమంగానాంశోభేతిపరికీర్తితా । కాంతిరిత్యుచ్యతే సా తు శోభైవాపూర్వమన్మయా॥ ప్రసూనపల్లవాసహం యత్తత్సౌకుమారం ప్రచక్షతే । సుశ్లిష్టసంధిబంధో యః సౌందర్యం తన్నిగద్యతే॥ చక్షురానందజననం తల్లావణ్యమిహోచ్యతే । ఘనీభావం ... యువా॥ అభూషణోపి రమ్యత్వం మాధుర్యం పరికీర్తితం । దేవతిర్యఙ్మనుష్యాణాం చేష్టావంతిస్వలీలయా॥ జగతాముపకారాయ న సా కర్మనిమిత్తజా" "அலங்கரணமங்காநாம்சோபேதி பரிகீர்த்திதா। காந்திரித்யுச்யதே ஸா து சோபைவாபூர்வமந்மயா॥ ப்ரஸூநபல்லவாஸஹம் யத்தத்ஸௌகுமாரம் ப்ரசக்ஷதே। ஸுச்லிஷ்டஸந்திபந்தோயஸ் ஸௌந்தர்யந்தந்நிகத்யதே॥ சக்ஷுராநந்தஜநநம் தல்லாவண்யமிஹோச்யதே॥ ஷோடசாத்ப்ரப்ருதி கோயுவா॥ அபூஷணேபிரம்யத்வம் மாதுர்யம் பரிகீர்த்திதம்। தேவதிர்யங்மனுஷ்யாக்யா சேஷ்டாவந்திஸ்வலீலயா॥ ஜகதாமுபகாராய நஸாகர்மநிமித்தஜா॥" (எகுஎ).

தொ.—(விக்ரஹ)க்கு அஸாதாரணத்வமாவது-விக்ரஹாந்தரங்களோடொக்கிராமை. (ஐச்சிகமா)வது - இச்சாதீநமாயிருக்கை. [திருமேனியும்] என்கிறவிடத்தில் ஏகவசநத்தை ஜாதிபரமாக்காதபோது வருந்தோஷத்தை யருளிச்செய்கிறார் (அல்லாதபோது) இத்யாதி. இதுக்கு ஸம்வாதப்ரமாணம் (இதுதான்) இத்யாதி.

மூ.— திவ்யபூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரியபிராட்டியார் துடக்கமான

வ்யா.—(திவ்யபூஷணங்கள்) ஆவன - ஆபரணசூர்ணையிலே பாஷ்யகாரர் அருளிச்செய்தபடியே, கிரீடாதி நூபுராந்தமாக அத்திருமேனிக்குச் சாத்தும் அஸங்க்யேயமான திருவாபரணங்கள்.

(திவ்யாயுதங்கள்) ஆவன - அழகுக்கும், ஆச்ரிதவிரோதி நிரஸநத்துக்கு முடலாயிருந்துள்ள ஶங்கசக்ரகதாஸி ஶார்ங்காத்யஸங்க்யேயாயுதவிசேஷங்கள்.

(பெரியபிராட்டியார் துடக்கமான நாய்ச்சிமார்) ஆவார்-"శ్రీవల్లభ, ఏవంభూతభూమినీళానాయక" "ஸ்ரீவல்லப, ஏவம்பூத பூமிநீளாநாயக" (௬௬) "దేవిత్వామనునీయ సహమహిషీ దేవ్యస్సహస్రంతథా" "தேவித்வாமநுநீயா ஸஹமஹிஷீ தேவ்யஸ்ஸஹஸ்ரந்ததா" (௬௪) என்கிறபடியே, ப்ரதாநமஹிஷியான பெரியபிராட்டியார் முதலாக

எ.—"స్వోచితవివిధ విచిత్రానంతాశ్చర్యనిత్యనిరవద్యనిరతిశయసుగంధనిరతిశయ సుఖస్పర్శనిరతిశయౌజ్జ్వల్యకిరీటమకుటచూడావతంసమకరకుండలగ్రైవేయక హారకేయూరకటకశ్రీవత్సకౌస్తుభముక్తాదామోదరబంధనపీతాంబరకాంచీగుణనూపురాద్య పరిమితదివ్యభూషణ స్వానురూపాచింత్యశక్తిశంఖచక్రగదాసిశార్ఙ్గాద్యసంఖ్యేయకల్యాణదివ్యాయుధ" "ஸ்வோசிதவிவித விசித்ராநந்தாச்சர்ய மஹாவிபவாநந்தபரிமாண நித்ய நிரவத்ய நிரதிசய ஸுகந்த நிரதிசய ஸுகஸ்பர்ச நிரதிசயௌஜ்ஜ்வல்ய கிரீட மகுட சூடாவதம்ஸ மகர குண்டல க்ரைவேயக ஹார கேயூர கடக ஸ்ரீவத்ஸ கௌஸ்துப முக்தா தாமோதர பந்த பீதாம்பர காஞ்சீகுண நூபுராத்யபரிமித திவ்யபூஷண ஸ்வாநுரூபாசிந்த்ய சக்தி சங்க சக்ர கதாஸி சார்ங்காத்யஸங்க்யேய கல்யாண திவ்யாயுத" (எ௰அ).

ஶ்ரீகுணரத்நகோசே ("భోగ్యా వామపి నాంతరీయకతయా పుష్పాంగరాగస్రజాం నిర్వృత్తప్రణయానువాహనవిధాః ప్రీతాః పరీవాహతాం । దేవిత్వామను నీయ సహమహిషీదేవ్యస్సహస్రంతథా-యాస్వం తన్వతి హృద్యదృష్టిభిరసావేవాత్తమం ప్రియం శ్లాఘసే॥" "போகயா வாமபி நாந்தரீயகதயா புஷ்பாங்கராகஸ்ரஜாம் நிர்வர்த்தப்ரணயாதி வாஹநவிதௌ தா: பரீவாஹதாம் | தேவித்வாமநுநீய ஸஹமஹிஷீ தேவ்யஸ்ஸஹஸ்ரந்ததா யாஸ்வத்வம் ஸ்வகபரஹ்ருத்தர்ஷ்டிபிரிவஸ்வாபி: ப்ரியம் ஶ்லாகஸே॥" (எ௰௧) ஶ்ரீரங்கநாயகியே! தேவரீர் யாவர் சிலதேவிமாராலே உம்முடைய அவயவங்களாயிருக்கிற ஸ்தநபாஹுத்ருஷ்டிகளாலே சலந்தாப்போலே நாயகனை உகப்பியாநின்றீர்; நீரோடேகூட ஸ்ரீபூமிப்பிராட்டியும் அஸங்க்யேயராயிருக்கிற தேவிமாரும் ஸ்ரக்சந்தநாதிகளோபாதி விட்டிருகையாலே உங்களிரண்டுபேருக்கும் போகோபகரணங்களாயிருப்பர்கள்;

பி.—(அழகுக்கும் ஆச்ரிதவிரோதி நிரஸநத்துக்கும் உடலாய்) என்றது - ஆயுதகோடியிலும் ஆபரணகோடியிலும் அந்வயமாகையாலே இரண்டுக்குமுடலாயிருக்குமென்றபடி.

மூ.—நாய்ச்சிமார்களும், நித்யஸூரிகளும், சத்ரசாமராதிகளும்,

வ்யா.—தத்ஸமாநைகளான பூமிநீளைகளும். மற்றுமநேகர்களாகச் சொல்லப்படுகிறவர்களும். "லக்ஷ்மீப்ரப்ருதிமஹிஷீவர்க்கங்களும்" என்றிறே! ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தது.

(நித்யஸூரிகள்) ஆவார் - அநந்தகருடவிஷ்வக்ஸேநாதிகளாயிருந்துள்ள அஸங்க்யேயரான ஸூரிஜநங்கள்.

(சத்ரசாமராதிகள்) ஆவன - கைங்கர்யோபகரணங்களான சத்ர சாமர தாலவ்ர்ந்த ப்ர்ங்கார பதத்க்ரஹாதிகள்.

எ.— உங்களுடைய ஸம்ஶ்லேஷத்திலே உண்டாயிருக்கிற ப்ரணயத்தினுடைய அதிஶயம் அதாவது - உந்மஸ்தகரஸமாயிருந்துள்ளவளவிலென்றபடி : அப்போது ப்ரவாஹத்துக்கு மதகுகள்போலே ஆகாநிற்பர்கள். இத்தால் நீளாதுடக்கமான தேவிமார்களோடே ஈஶ்வரன் ஸம்ஶ்லேஷித்தபோது பெரியபிராட்டியார் தம்முடைய முலையிலும் கண்ணிலும் கையிலுங் கலந்தாப்போலேயிருப்பர்; மற்றை தேவிமாரும் ஈஶ்வரன்பிராட்டியோடே கலந்தபோது ஸ்ரக்சந்தநாதிகளோபாதி போகோபகரணங்களாயிருப்பர்கள் ; ஆகையாலே பரஸ்பர ஸாபத்ந்யமில்லையென்றபடி. "అన్యథా కలహం స్త్రీణాం సపత్నీనాం కరోమ్యహం" "அந்யதாகலஹம்ஸ்த்ரீணாம் ஸபத்நீநாம்கரோம்யஹம்" (எகூo)என்று கலஹப்ரியரான நாரதர்க்கு அவகாஶமில்லையாய்த்து. (தத்ஸமாநைகளான) என்றது-பெரியபிராட்டியாருக்கு ஸமாநைகளான என்றபடி.

"అనన్తవిహగేశానవిష్వక్సేనాదయోమరాః। మదాజ్ఞాకారిణో యత్రమోదంతే సకలేశ్వరాః॥" "அநந்தவிஹகேஶாந விஷ்வக்ஸேநாதயோமரா:।மதாஜ்ஞாகாரிணோயத்ரமோதந்தே ஸகலேஶ்வரா:॥" (எகூக).

(தாலவ்ர்ந்தம்) - திருவாலவட்டம். (ப்ர்ங்காரம்) - திருக்காவேரி. (பதத்க்ரஹம்) திருப்படிக்கம். (ஆதி)ஶப்தத்தாலே ஆஸந ஶயநாதிகளைச் சொல்லுகிறது.

தொ.— (ப்ர்ங்காரம்) - வெற்றிலைப்பெட்டி (பதத்க்ர்ஹம்) - தம்பலப் படிக்கம்.

பி.—(தாலவ்ர்ந்தம்)-திருவாலவட்டம். (ப்ர்ங்காரபதத்க்ரஹம்) - கலஶப்பானையும், திருப்படிக்கமும்,

மூ.—திருவாசற்காக்கும்முதலிகளும், கணாதிபரும், முக்தரும்,

வ்யா.—(திருவாசற்காக்குமுதலிகள்) ஆவார் – சண்ட ப்ரசண்ட பத்ர ஸுபத்ர ஜய விஜயாதிகள்.

(கணாதிபர்) ஆவார்–குமுத குமுதாக்ஷ புண்டரீக வாமந ஶங்குகர்ண ஸர்வநேத்ர ஸுமுக ஸுப்ரதிஷ்டிதாதிகள்.

(முக்தர்) ஆவார் – "கரைகண்டோர்" என்கிறபடியே,

எ.—பரமஸம்ஹிதாயாம் "చండప్రచండౌ ప్రాగ్ద్వారేయామ్యే భద్రసుభద్రకౌ। వారుణ్యాంజయవిజయౌ సౌమ్యేధాతృవిధాతృకౌ॥ కుముదః కుముదాక్షశ్చ పుండరీకోథవామనః। శంకుకర్ణస్సర్వనేత్రః సుముఖస్సుప్రతిష్ఠితః॥" "சண்டப்ரசண்டௌ ப்ராக்த்வாரேயாம்யேபத்ரஸுபத்ரகௌ । வாருண்யாம்ஜயவிஜயௌ ஸௌம்யே தாத்ர்விதாத்ர்கௌ॥ குமுத:குமுதாக்ஷஶ்ச புண்டரீகோதவாமந:।ஶங்குகர்ணஸ்ஸர்வநேத்ரஸ்ஸுமுகஸ்ஸுப்ரதிஷ்டித:॥" (௭௯ ௨).

திருவாய்மொழி – அ – பத்து – ௩ – திரு – ௧0 – பாட்டு.

"கலக்கமில்லாநற்றவமுனிவர் கரைகண்டோர்
துளக்கமில்லாவானவரெல்லாந் தொழுவார்கள்
மலக்கமெய்தமாகடறன்னைக் கடைந்தானை
யுலக்கநாம்புகழ்கிற்ப தென்செய்வதுரையீரே."

"அவ.–இவர் பயத்தைப்பரிஹரிக்கைக்காக நமக்கு ஸநகாதிகள் முக்தர் நித்யஸூரிகள் இவர்கள் கிட்டிநின்று பரிமாறுகிறார்கள், நாந்தாம் அரியசெயல்களும் செய்யவல்லோம் சிலரானபின்பு, நீர் நமக்கஞ்சவேண்டாகாணுமென்ன ; முன்பு பயஹேதுக்களானவைதானே பயநிவர்த்திக்குடலாய், அத்தையநுஸந்தித்து இனியராகிறார். இவர்தமக்கு இன்னபோதின்னது பயஹேதுவாம், இன்னபோதின்னது பரிஹாரமாமென்று தெரியாதிறே!

வ்யா.—(கலக்கமில்லாநற்றவமுனிவர்) தங்கள் ஜ்ஞாநத்துக்கு விஷயங்களால்வரும் கலக்கமின்றிக்கே, மஹாதபஸ்ஸுக்களை யுடையராய் மநநஶீலரான ஸநகாதிகள். (கரைகண்டோர்) முக்தர். (துளக்கமில்லாவானவர்) துளக்கம் – நடுக்கம். ஸம்ஸாரஸ்பர்ஶமில்லாத நித்யஸூரிகள். துளக்கம்-சலநம், அதாவது – ஸங்கோசம். (எல்லாந்தொழுவார்கள்) முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யமுக்தருமான இவர்களடிமைசெய்கிறவர்கள். அடிமையாவது – ஸ்வாமிக்கதிஶயத்தைப் பண்ணுமதாகையாலே, மங்களாஶாஸநமிறே! (மலக்கம்) இத்யாதி. மஹத்தத்வமான கடலை க்ஷுபிதமாம்படி கடைந்த பெருமிடுக்கன். பரிஜநங்கள் தாங்களும் குழைசரக்காம்படி பெருமிடுக்கனென்கை.

மூ. — பரமாகாஶமும்,

வ்யா. — ஸம்ஸாரஸாகரத்தைக் கடந்து அக்கரைப்பட்டு, நித்யஸூரிகளோடு ஸமாநாகாரராய், நிகிலகைங்கர்ய நிரதராயிருக்கும் அஸங்க்யேயரானசேதநர்.

(பரமாகாஶம்) ஆவது - பஞ்சோபநிஷந்மயமான பரமபதம்; இதுதான் பஞ்சோப நிஷந்மயமாகையாலே ஸமூஹாத்மகமாயிறே! இருப்பது. ஆகையால், ஸமூஹகணனைக்கு விரோதமில்லை. "பஞ்சோபநிஷந்மயமாகையாலே, பரமபதமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்" என்றிறே! ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தது.

ஏ. — (உலக்க) இத்யாதி. அவன்படியை நேராகவறியாத நாம் பரிவிலே யிழிந்து முடியப்பேசப்புக்கது என்செய்தோமானோம், சொல்லீர்கோள்? முன்பு தன்மிடுக்கைக்காட்டினவிடங்களில் அத்தை பிரதிபத்திபண்ணாதே அதுதன்னையேசொல்ல, இப்போது ஸமாஹிதமாயற்றது, இப்ப்ரபந்தம் தலைக்கட்டக்கடவதாகையாலேயாதல், ஈஶ்வரனுடைய ஜீவநார்த்ஷ்டத்தாலேயாதலிறே!". ... ... ※

(நித்யஸூரிகளோடு ஸமாநாகாரராய்) என்றது - "సర్వేచతుర్భుజాస్సర్వే సర్వే సమవిగ్రహాః । శఙ్ఖచక్రధరాస్సర్వే స్రగ్విణః పీతవాససః॥ అనురంజంతి దేవేశం భక్త్యా మృత్యుసేనవై" "ஸர்வே சதுர்புஜாஶ்ஶுத்தாஸ்ஸ்வாத்மேஶஸமவிக்ரஹா:| ஶங்கசக்ரதராஸ்ஸர்வே ஸ்ரக்விண: பீதவாஸஸ:|| அநுரஞ்ஜந்தி தேவேஶம் பக்த்யா மர்தரஸேநவை|" (௭௯௩).

(பஞ்சோபநிஷந்மயமான) என்றது - பரமஸம்ஹிதாயாம் "శక్తయః పంచసంఖ్యాతాః పంచోపనిషదాఖ్యయా । పంచశక్తిమయో దేవః పరమాత్మా జగత్ప్రభుః॥ పరమేష్ఠీ పుమాన్విశ్వో నివృత్తిస్సర్వ ఏవహి । పంచైతాశ్శక్తయః ప్రోక్తాః పరస్య పరమాత్మనః॥" "ஶக்தய: பஞ்ச விக்யாதா: பஞ்சோபநிஷதாக்யயா | பஞ்சஶக்திமயோ தேவ: பரமாத்மா ஜகத்ப்ரபு:|| பரமேஷ்டீ புமாந்விஶ்வோ நிவ்ர்த்திஸ்ஸர்வ ஏவஹ | பஞ்சைதாஶ்ஶக்தய: ப்ரோக்தா: பரஸ்ய பரமாத்மந:||" (௭௯௪)

தொ. — (பஞ்சோபநிஷந்மயமான) என்றது - "పరమేష్ఠీ పుమాన్ విశ్వో నివృత్తిస్సర్వ ఏవహి" "பரமேஷ்டீ புமாந்விஶ்வோ நிவ்ர்த்திஸ்ஸர்வ ஏவஹ" என்கிற (பஞ்சோபநிஷந்மயமான) என்றபடி. (பரமபதம்) ஒன்றேயாகையாலே ஸமூஹமாக எண்ணிக்கொண்டு வருகிற ப்ரகரணத்துக்குச் சேருமோவென்ன அருளிச்செய்கிறார் (இதுதான்) இத்யாதியால். ஸம்வாதப்ரமாணம் ("பஞ்சோபநிஷத்") இத்யாதி.

பி. — [பரமாகாஶமும்] - "పరమేష్ఠీ పుమాన్ విశ్వో నివృత్తిస్సర్వ ఏవహి । పంచైతాశ్శక్తయః ప్రోక్తాస్తస్య పరమాత్మనః॥" "பரமேஷ்டீ புமாந் விஶ்வோ நிவ்ர்த்திஸ்ஸர்வ ஏவஹி | பஞ்சைதாஶ்ஶக்தய: ப்ரோக்தாஸ்தஸ்ய பரமாத்மந:||" என்றுசொல்லப்பட்ட பஞ்சோபநிஷத்துக்கள்.

வ்யா.—ஆக (ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும்) என்று தொடங்கி, இவ்வளவும் ஸ்வரூபநிரூபகதர்மங்களையும், நிரூபிதஸ்வரூபவிசேஷணங்களான கல்யாணகுணங்களையும், அக்குணங்களுக்கு ப்ரகாசகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், விக்ரஹகுணமான ஸௌந்தர்யாதிகளையும், அந்த ஸௌந்தர்யாதிகளோபாதி, பூத்தாப்போலே சாத்தின திவ்யாபரணங்களையும், அவ்வாபரணங்களோடு விகல்பிக்கலாம்படியான திவ்யாயுதங்களையும், இவைபித்தனையும், காட்டிலெறித்த நிலாவாகாதபடி அருகேயிருந்தநுபவிக்கிற நாய்ச்சிமாரையும், அச்சேர்த்தியிலே அடிமைசெய்கிற நித்யஸூரிகளையும், அவர்களுக்கு கைங்கர்யோபகரணங்களான சத்ரசாமராதிகளையும், இச்சேர்த்திக்கு என்வருகிறதோவென்று வயிறெரிந்துநோக்கும் திருவாசல்காக்கும்முதலிகளையும், அப்படி மங்களாசாஸநபரராய்

எ.— (பூத்தாப்போலே) என்றது - கல்பகதரு (பூத்தாப்போலே) என்றபடி. (அவ்வாபரணங்களோடு விகல்பிக்கலாம்படியான) என்றது-இவையும் ஆபரணங்களோவென்று சொல்லலாம்படியான வென்றபடி. (காட்டிலெறித்த நிலாவாகாதபடி) என்றது - "స్వైస్వైవయది భుజ్యేత కేవలం వనచంద్రికా" "ஸ்வைஸ்வைவயதி புஜ்யேத கேவலம் வநசந்த்ரிகா" (எகூ) என்கிறபடியே ஸ்வயமநுபவித்து ஆநந்திக்கையன்றிக்கே என்றபடி. "సా శ్రీశ్రీర్భాంధవైర్భృత్యైర్యాచకైర్యానుభుజ్యతే" "ஸாஶ்ரீஶ்ரீர்ப்பாந்தவைர்ப்ருத்யைர்யாசகைர்யாநுபுஜ்யதே" இதி பூர்வார்த்தஃ. (அருகேயிருந்து) என்றது - ஸமீபத்திலேயிருந்து என்றபடி. (அச்சேர்த்தியிலே) என்றது - ஈச்வரனும் நாய்ச்சிமாருமான (அச்சேர்த்தியிலே) என்றபடி. (வயிறெரிந்து) இத்யாதி. "స్వాస్త్రరూపస్ఫురన్మౌళిమాంశుక ఇత్యుత్థానాం సురాం స్తర్జనీముద్రయా। నాథనిద్రాంచితోన్నిద్రతాం ప్రేక్షణాం" "ஸ்வாஸ்த்ரரூபஸ்புரந்மௌளிமாம்சுக இத்யுத்தாநாம்ஸுராம்ஸ்தர்ஜநீமுத்ரயா। நாதநித்ரோசிதோந்நித்ரதாம்ரேக்ஷணம்" (எகூகூ) என்னுமாப்போலே (வயிறெரிந்து) நோக்கும் மங்களாசாஸநம்பண்ணும் திருவாசல்காக்கும்முதலிகளென்றபடி. "సంచరంతీం స్తుమస్తాంచ పంచాయుధీం" "ஸஞ்சரந்தீம்ஸ்துமஸ்தாஞ்ச பஞ்சாயுதீம்" இதி ஸ்ரீரங்கராஜஸ்தவே ஸ்ரீபராசரபட்டார்ய ஸ்ரீஸூக்திஃ.

தொ.—நித்யவிபூதியிலுள்ள நாரஸப்தார்த்தங்களை அருளிச்செய்துமுடித்தமையை அருளிச்செய்கிறார்,

(ஆக) இத்யாதியால்.

பி.—(காட்டிலெறித்தநிலா) என்றது-அநுபவிகிறவர்களில்லாத காட்டிலே ப்ரகாசிக்கிற சந்த்ரனென்கை.

மூ.—ப்ரக்ருதியும், பத்தாத்மாக்களும்,

வ்யா.—திருப்படைவீட்டுக்கடைய காவலாயிருக்கும் கணுதிபரையும், நிவர்த்தஸம்ஸாரராய் அவர்களோடொரு கோவையாயடிமைசெய்கிற முக்தரையும், அவ்வடிமைக்கு வர்த்தகமான பரமபதத்தையும் அருளிச்செய்தாராய்த்து.

லீலாவிபூதியிலுள்ளவற்றை அருளிச்செய்கிறார்மேல்.

(ப்ரக்ருதி) ஆவது - குணத்ரயாத்மகதயா ஸமூகாத்மிகையாயிருக்கும் மூலப்ரக்ருதி. "குணத்ரயாத்மிகையாகையாலே மூலப்ரக்ருதியும் ஸமூஹாத்மிகையாயிருக்கும்" என்றிறே! இதற்கும் ஆச்சான் பிள்ளையருளிச்செய்தது.

(பத்தாத்மாக்கள்) ஆவார் - உரைமெழுகிற்பொன்போலே, இப்ரக்ருதிக்குள்ளே உருமாய்ந்துகிடக்கிற ஆத்மாக்கள்.

எ.—(திருப்படைவீடு) இத்யாதி. "జనపదసరిదంతరీప పుష్యత్పురపరిపాలననిత్యజాగరూకాన్ । ప్రహరణపరివారవాహనాఢ్యాన్ కుముదముఖాన్ గణనాయకాన్నమామి॥" "ஜநபதஸரிதந்தரீபபுஷ்யத்புரபரிபாலநநித்யஜாகரூகாந்| ப்ரஹரணபரிவாரவாஹநாட்யாந்குமுதமுகாந்கணநாயகாந்நமாமி" (எகூஎ) என்கிறபடியே (திருப்படைவீட்டிற் கடையக்காவலாயிருக்கும் கணுதிபரை) யென்றபடி. (அவர்களோடொரு கோவையாய்) என்றது - நித்யஸூரிகளோடு ஏககோஷ்டியாய் என்றபடி. (அவ்வடிமைக்கு வர்த்தகமான) என்றது - ஶுத்தஸத்வாத்மகமாய் ஜ்ஞாநாநந்தஜநகமாகையாலே நித்யமுக்தர்பண்ணும் (அவ்வடிமைக்கு வர்த்தகமான) வென்றபடி.

(உருமாய்ந்துகிடக்கிற) என்றது - கரணகளேபரஶூந்யராய்க்கிடக்கிறவென்றபடி.

தொ.—[ப்ரக்ருதியும்] இத்யாதிக்கவதாரிகை (லீலா) இத்யாதி.

(உள்ளவற்றை) என்றது - உள்ளநாரஸப்தார்த்தங்களை யென்றபடி.

ப்ரக்ருதிஸ்வரூபத்தை அருளிச்செய்கிறார்,

[ப்ரக்ருதி] (யாவது) இத்யாதியால். (மூலப்ரக்ருதி) என்றது - மூலமானப்ரக்ருதியென்றபடி. (மூல) மாகையாவது - மஹதாதிப்ரக்ருத்யந்தமான விகாரங்களுக்கெல்லாம் காரணமாயிருக்கை. ஸம்வாதப்ரமாணம் ("குணத்ரய") இத்யாதி. (உருமாய்ந்து) என்றது - ஸ்வரூபமழிந்தென்றபடி.

மூ.—காலமும்,

வ்யா.—(காலம) ஆவது-அஹோராத்ராதி விபாகயுக்ததயா ஸமூஹாத்மகமாயிருக்கும் அசித்விசேஷம். "அஹோராத்ராதிவிபாகங்கள் அநேகமாகையாலே, காலமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்" என்றே! இதுக்கும் ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தது.

ஆகஇவ்வளவும்ஸ்வரூபேணநித்யங்களானவஸ்துக்களைச்சொல்லிற்று.

மேல் ப்ரவாஹரூபேண நித்யங்களைச்சொல்லுகிறது. ஸ்வரூபேண நித்யத்வமாவது - ஸத்தானபதார்த்தத்தினுடைய உத்பத்தி விநாசாத்யந்தாபாவம். ப்ரவாஹரூபேண நித்யத்வமாவது - உத்பத்திவிநாசயோகியாகாநிற்கச்செய்தேயும், பூர்வகாலத்திலுண்டான நாம ரூப லிங்காதிகளுடைய அநந்யதாபாவம்.

ஏ.—(அஹோராத்ராதி) என்கிறவிடத்தில் ஆதிசப்தத்தாலே பக்ஷமாஸர்த்வயநவர்ஷங்களைச்சொல்லுகிறது.

(உத்பத்தி விநாசாத்யந்தாபாவம்) என்றது - "అపక్షయవినాశాభ్యాం పరిణామర్ధిజన్మభిః । వర్జితశ్శక్యతేవక్తుం యస్సదాస్తీతికేవలం॥" "அபக்ஷயவிநாசாப்யாம் பரிணாமர்த்திஜந்மபிঃ । வர்ஜிதச்சக்யதேவக்தும்யஸ்ஸதாஸ்தீதிகேவலம்॥" (எசு அ) என்கிறபடியே (உத்பத்திவிநாசாத்யந்தாபாவம்) என்றபடி. (உத்பத்திவிநாசயோகியாகாநிற்கச்செய்தேயும்) என்றது - உத்பத்திவிநாசங்களுடைய ஸம்பந்தத்தையுடைத்தாகாநிற்கச்செய்தேயுமென்றபடி. (அநந்யதாபாவம்)என்றது - அதுவேயாயிருக்கை. விஷ்ணுபுராணே "యథర్తుష్వృతులింగాని నానారూపాణిపర్యయే। దృశ్యంతేతానితాన్యేవతథాభావాయుగాదిషు॥" "யதர்த்துஷ்வர்துலிங்காநிநாநாரூபாணிபர்யயே । த்ருச்யந்தேதாநிதாந்யேவததாபாவாயுகாதிஷு॥" (எசுக) என்றுர்துக்களில் ர்துலிங்கங்களான புஷ்பபலாதிகள் நாநாவாய் வேறுபட்டிருக்கச்செய்தேயும் பர்யாயந்தோறும் அவைதாமே காணப்படுமாப்போலே யுகாதிகளிலும் பதார்த்தங்கள் மாறாதபடி முன்போலே ஸ்ரஷ்டங்களாம்.

தொ.—[கால] ஸ்வரூபத்தை யருளிச்செய்கிறார், [கால] மாவதித்யாதியால்.ஸமூஹமாயெண்ணிவருகைக்கு அவிரோதமில்லாமையை யருளிச்செய்கிறார், (அஹோராத்ர) இத்யாதியால்.

(ஸ்வரூபேணநித்யங்களான) நாரங்களைச்சொல்லி முடித்தபடியை யருளிச்செய்கிறார், (ஆக) இத்யாதியால்.

மேலுக்கவதாரிகை (மேல்) இத்யாதி. (ஸ்வரூபேணநித்ய) த்வத்தை யுபபாதித்தருளிச்செய்கிறார், (ஸ்வரூபேண) இத்யாதியால்.

ப்ரவாஹநித்யத்வத்தை உபபாதிக்கிறார், (ப்ரவாஹ) இத்யாதியால்.(பூர்வகாலத்தில்)என்றது-பூர்வஸ்ர்ஷ்டியிலென்றபடி.(அநந்யதாபாவமா)வது-பூர்வம்போலேயிருக்கைஎன்றபடி.

பி.—(உத்பத்திவிநாச) ரஹிதம் என்றால் சாவிஷாணாதிகளுக்கு உத்பத்தி விநாசமில்லாமையாலே அத்தை வ்யாவர்த்திக்கைக்காக (ஸத்தானபதார்த்தம்) என்கிறார்.

மூ.—மஹதாதிவிகாரங்களும், அண்டங்களும், அண்டத்துக்குட்பட்ட தேவாதிபதார்த்தங்களும்.

வ்யா.—இதில் (மஹதாதிவிகாரங்கள்) ஆவன—மஹத்தத்வம் தொடங்கி ப்ருதிவியளவாக உண்டான இருபத்துமூன்று தத்வமும்.

(அண்டங்கள்) ஆவன – இம்மஹதாதிகளாலே ஆரப்தங்களாய், "అండానాంతు సహస్రాణాం సహస్రాణ్యయుతానిచ" "அண்டாநாந்து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநிச" (௬௫) என்கிறபடியே, அஸங்க்யேயமாயிருக்கிற அண்டவிசேஷங்கள்.

(அண்டத்துக்குட்பட்ட தேவாதிபதார்த்தங்கள்) ஆவன—அண்டாந்தர்வர்த்திகளான தேவ மநுஷ்ய திர்யக் ஸ்தாவரங்கள்.

ஆக நாரபதார்த்தமருளிச்செய்தாராய்த்து.

ஏ.—விஷ்ணுபுராணே ("అండానాంతు సహస్రాణాం సహస్రాణ్యయుతానిచ। ఈదృశానాంతథాతత్ర కోటికోటిశతానిచ॥") తత్ర-మూలప్రకృతౌ. ఈదృశానాం-అండానాం-సహస్రాణాం-సహస్రాణి - అయుతానిచ - కోటికోటిశతానిచ-సన్తి ఇత్యర్థః. ("அண்டாநாந்து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநிச। ஈத்ருசாநாந்ததாதத்ர கோடிகோடிசதாநிச॥" (௭௭௰) தத்ர-மூலப்ரக்ருதௌ. ஈத்ருசாநாம் – அண்டாநாம் – ஸஹஸ்ராணாம்-ஸஹஸ்ராணி-அயுதாநி ச- கோடிகோடிசதாநிச - ஸந்தி இத்யர்த்த:. பகவச்சாஸ்த்ரே "జ్ఞానాదయోగుణారూపం లక్ష్మీర్నిత్యానపాయినీ। భూమినీళాదయో దేవ్యస్సేనేశాద్యాశ్చ సూరయః॥ తద్ధామపరమం కాలః పురుషః ప్రకృతిస్తథా। మహదాదిధరాన్తాని సప్తచావరణాన్యపి॥ బ్రహ్మాండంతదంతస్థాలోకాశ్చ సచరాచరాః। ఏవమండాన్యనంతానితత్సర్వన్నారముచ్యతే॥" "ஜ்ஞாநாதயோகுணாரூபம் லக்ஷ்மீர் நித்யாநபாயிநீ। பூமிநீளாதயோதேவ்யஸ் ஸேநேசாத்யாச்ச ஸூரய:॥ தத்தாம பரமம்கால: புருஷ: ப்ரக்ருதிஸ்ததா॥ மஹதாதி தராந்தாநி ஸப்தசாவரணாந்யபி॥ ப்ராஹ்ம மண்டந்தத்தந்தஸ்தா லோகாச்சஸசராசரா: । ஏவமண்டாந்யநந்தாநி தத்ஸர்வந்நாரமுச்யதே॥" (௭௭௧).

தொ.—(இதில்) என்றது-(ப்ரவாஹரூபேண நித்யத்வ)ங்களிலென்றபடி.

நாரபதார்த்தத்தை நிகமித்தமையை அருளிச்செய்கிறார், (ஆக) இத்யாதியால்.

ஸூ.—௧௮. அயநமென்றது - இவற்றுக்காஶ்ரயமென்றபடி.

ஸூ.—௧௯. அங்ஙனன்றிக்கே, இவைதன்னை ஆஶ்ரயமாக உடையனென்னவுமாம்.

வ்யா.—௧௮.—மேல் அயநபதார்த்தத்தை யருளிச்செய்கிறார்,

(அயநமென்றது-இவற்றிற்காஶ்ரயமென்றபடி) என்று. அதாவது - அயநஶப்தம் ஆஶ்ரயவாசியாகையாலே, (இவற்றிற்கு அயநம்) என்றது - இவற்றிற்காஶ்ரயமென்றபடியென்கை.

௧௯.— பஹுவ்ரீஹிஸமாஸார்த்தத்தை யருளிச்செய்கிறார்,

(அங்ஙனன்றிக்கே யிவைதன்னை யாஶ்ரயமாகவுடையனென்னவுமாம்) என்று. அதாவது - இவற்றிற்காஶ்ரயமென்று தத்புருஷனாகச் சொல்லுகையன்றிக்கே, (இவைதன்னை யாஶ்ரயமாகவுடையன்) என்று பஹுவ்ரீஹியாகச்] சொல்லவுமாமென்கை. (இவற்றுக்காஶ்ரயம்) என்கிறவிடத்தில், குணங்களையும் சொல்லிற்றேயாகிலும், (இவைதன்னை யாஶ்ரயமாகவுடையன்) என்கிறவிடத்தில, குணங்களை யொழியச்சொல்லவேணும்; அக்குணங்களுக்கு வ்யாப்யத்வம் சொல்லுமளவில்

எ.—௧௮.—மேல்வாக்யத்துக்கு அவதாரிகை (மேல்) என்று துடங்கி.

(ஆஶ்ரயவாசியாகையாலே) என்றது-அயதே-அஸ்மிந்-இதி அயநம் இதி அதிகரணேவ்யுத்பத்யா (ஆஶ்ரயவாசியாகையாலே) யென்றபடி. [இவற்றுக்கு] என்றது-ஸ்வரூபதः ப்ரவாஹதோ நித்யவஸ்துககளுடைய திரள்களுக்கென்றபடி.

௧௯.— மேலுககவதாரிகை (பஹுவ்ரீஹி) இத்யாதி.

(வ்யாப்யத்வ) மாவது - ஆஶ்ரயம. (சொல்லுமளவில்) என்றது-சொல்லும்போதென்றபடி.

தொ.—௧௮.—மேலுக்கவதாரிகை (மேல்) இத்யாதி.

மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. [இவற்றுக்கு] என்றது - நாரங்களுக்கென்றபடி.

௧௯.—கீழ் தத்புருஷஸமாஸார்த்தத்தை யருளிச்செய்து மேல் பஹுவ்ரீஹிஸமாஸார்த்தத்தை யருளிச்செய்கைக் கவதாரிகை யருளிச்செய்கிறார்,

(பஹுவ்ரீஹி) இத்யாதி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (இவற்றுக்கு) என்றது - நாரங்களுக்கென்றபடி. [இவைதன்னை] என்றது-நாரங்களையென்றபடி.

பஹுவ்ரீஹிஸமாஸத்தில் நாரஶப்தம் குணமொழிந்த நாரங்களைச்சொல்லுமென்னுமத்தை யருளிச்செய்கிறார்,

(குணங்களுக்கு) இத்யாதியால். (வ்யாப்யத்வம் சொல்லுமளவில்) என்றது - ஆஶ்ரயத்வம் சொல்லும்போதென்றபடி.

அதவா குணங்களை ஒழியச்சொல்லுகைக்கு ஹேதுவையருளிச்செய்கிறார், (குணங்களுக்கு) இத்யாதியால்.

பி.—௧௯.—குணங்களிலே (வ்யாப்யத்வம்) சொல்லும்போது

வ்யா.—ஆத்மாஶ்ரயமும் அநவஸ்த்தையுமாகிற தோஷங்கள் வருகையாலே. "தன் குணங்களிலே ஈஶ்வரன்வ்யாபிக்கும்போது குணவிஶிஷ்டனாயே வ்யாபிக்கவேணும், நிர்க்குணமாய் வஸ்துவிராமையாலே; அப்போது, வ்யாப்யகுணங்களே வ்யாபககுணங்களாய், வ்யாபககுணங்களே வ்யாப்யங்களாயறுகையாலே, ஆத்மாஶ்ரயதோஷமுண்டாம்;

ஏ.—(ஆத்மாஶ்ரய) மாவது—ஆத்மந:—ஆத்மைவ—ஆஶ்ரய:—ஆத்மாஶ்ரய: என்று வ்யுத்பத்தியாய் தனக்குத் தானே ஆஶ்ரயமாயிருக்கை; அநாவது-பரஸ்பராபேக்ஷா. (அநவஸ்த்தை) யாவது - உபர்யுபர்யபேக்ஷா. (தோஷங்கள் வருகையாலே குணங்களை யொழியச்சொல்லவேணும்.) என்றந்வயம்.

அது தன்னை விவரித்தருளுகிறார்,

("தன்குணங்களிலே") என்று துடங்கி.

இப்போது நாராஶப்தவாச்யமாய், அணுவாய், நிரவயவமான ஆத்மாவின்பக்கலிலே ஷட்பாவராஹித்யத்தாலே அந்தராவகாஶமில்லாமையாலே ஈஶ்வரனுக்கு அந்தர்வ்யாப்தி கடிக்கும்படி எங்ஙனேயென்னில்; வ்யாபகமான ஈஶ்வரஸ்வரூபமும், வ்யாப்யமான சேதநஸ்வரூபமும் ஜ்ஞாநைகாகாரங்களாகையாலே தேஜோத்ரவ்யங்கள்போலே ஸ்வச்சரூபமாகையாலே ஒன்றுக்கொன்று ப்ரதிகாதமில்லாமையாலே ஸர்வத்ர அந்தர்வ்யாப்தி அகிபடயேந உபபந்நம்; "ய ஆத்மாநமந்தரோயமயதி" என்று யாவனொருவன் ஆத்மாவை உள்ளே நின்று நியமிக்கிறானென்கிற ஶ்ருதிதானே யித்தைக்காட்டிற்றிறே!

தொ.—தோஷத்வயம்வருகையை ஸம்வாதப்ரமாணத்தாலே நிரூபித்தருளிச்செய்கிறார்,

(" தன்குணங்களிலே") இத்யாதியால். ("வ்யாபிக்கும்போது") என்றது - அந்த:ப்ரவிஶ்ய வ்யாபிக்கும்போதென்றபடி.

குணவிஶிஷ்டனுக்கே வ்யாப்தியென்கையிலே ஹேதுவையருளிச்செய்கிறார்,

("நிர்க்குணமாய்") இத்யாதி. (" நிர்க்குணமாய்") என்றது - ஸ்வரூபநிரூபககுணஶூந்யமாயும் நிரூபிதஸ்வரூபகுண ஶூந்யமாயுமென்றபடி. (" அப்போது") என்றது - குணவிஶிஷ்டனுக்கு வ்யாப்தி சொல்லும்போதென்றபடி. ("வ்யாப்யகுணங்களே வ்யாபககுணங்களாய்") என்றது-ஆஶ்ரயகுணங்களே ஆஶ்ரயிகுணங்களாயென்றபடி. (" வ்யாபககுணங்களே வ்யாப்யகுணங்களாய்") என்றது - ஆஶ்ரயிகுணங்களே ஆஶ்ரயகுணங்களாய் என்றபடி.

பி.—ஆத்மாஶ்ரயதோஷமும், தத்பரிஹாரே (அநவஸ்த்தா)தோஷமும் வருமென்று விகல்பம். (இவைதன்னை ஆஶ்ரயமாகவுடையன்). (" ஆத்மாஶ்ரய") மாவது – தன்னைத்தானே ஆஶ்ரயிக்கை; தன்கழுத்திலே தானே ஏறுமாப்போலே என்றபடி.

மூ.—௧௦௦. இவையிரண்டாலும் பலித்தது

வ்யா.— அதுக்குமேலே, தன் குணங்களிலே குணிவ்யாபிக்க வென்றுபுக்கால், ததாஸ்ரயமான குணங்களையும் குணிவ்யாபிக்கவேணும்; அந்த வ்யாபகனுடைய குணங்களையும், குணிவ்யாபிக்க வேணும். ஆகையாலே, அநவஸ்த்தாதுஸ்த்தமாம்" என்று இது தன்னை ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தாரிறே!

௧௦௦.— இவ்வுபய ஸமாஸத்தாலும், பலிதார்த்தத்தை யருளிச் செய்கிறார்,

(இவையிரண்டாலும்) என்றுதுடங்கி. அதாவது-நாரங்களுக்கயநம், நாரங்களை அயநமாக வுடையவன் என்கிற, (இவை இரண்டாலும்) பலித்த அர்த்தம்,

---

எ.—௧௦௦.— மேல்வாக்யத்துக்கவதாரிகை (இவ்வுபயஸமாஸத்தாலும்) என்றுதுடங்கி.

[இவை யிரண்டாலும் பலித்தது]-(நாரங்களுக்கயநம், நாரங்களை அயநமாகவுடையவன் என்கிற இவை யிரண்டாலும்பலித்தஅர்த்தம்),

---

தா.— ("அதுக்குமேலே") என்றது-ஆத்மாஸ்ரயமாகிற தோஷமாகைக்குமேலே ஆத்மாஸ்ரயரூபதோஷ பரிஹாரார்த்தமாக ஆத்மாஸ்ரயகுணங்களுக்கும் ஆஸ்ரயிகுணங்களுக்கும் ஸ்வரூபபேதமங்கீகரிக்கிலென்றபடி. ("தன்குணங்களிலே குணி வ்யாபிக்க என்று புக்கால்") என்றது - ஸ்வநிஷ்டங்களான குணங்களிலே குணி குணாந்தரவிஸிஷ்டனாய் வ்யாபிக்கவேணுமென்று ப்ரவேஸித்தாலென்றபடி. ("ததாஸ்ரயமான குணங்களையும்") என்றது - குணநிஷ்டங்களாய் வ்யாப்யகுணபின்னங்களான குணங்களையுமென்றபடி. ("ஆகையாலே") என்றது - குணபேதஞ்சொல்லும்போது பஹுகுணகல்பநம்வருகையாலென்றபடி. ("அநவஸ்தாதுஸ்த்தமாம்") என்றது - பஹுகுணகல்பநம் அநவஸ்தையாகையாலே தோஷயுக்தமாமென்றபடி.

௧௦௦.— மேலுக்கவதாரிகை (இவ்வுபய) இத்யாதி. (உபயஸமாஸத்தாலும்) என்றது - தத்புருஷனாலும், பஹுவ்ரீஹியாலுமென்றபடி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. [இரண்டாலும்] என்றது-இரண்டு ஸமாஸத்தாலுமென்றபடி.

பி.— ("அநவஸ்த்தாதுஸ்த்தம்") என்றது-(தன்குணங்களிலே குணி வ்யாபிக்கும்போது) தத்குணவிஸிஷ்டதயாவ்யாபித்வம், ஆத்மாஸ்ரயதோஷபியா குணாந்தரவிஸிஷ்ட தயா வ்யாபகத்வம் வக்தவ்யம்; ததாச பூர்வோக்ததோஷபியா குணாந்தரவிஸிஷ்டதயா வ்யாபகத்வம் வக்தவ்யம் இதி (அநவஸ்த்தாதுஸ்த்தமேவ).

மூ —பரத்வ ஸௌலப்யங்கள்;
மூ.—௧0௧. அந்தர்யாமித்வமும்,

வ்யா.—தன்னையொழிந்த ஸமஸ்தவஸ்துக்களுக்கும், தான் ஆதாரமாயிருக்கையாகிற (பரத்வமும்;) இப்படி பெரியனான தான் ஸகலசேதநா சேதநங்களிலும் தன்னை யமைத்துக்கொண்டு, புக்கிருக்கையாகிற (ஸௌலப்யமும்) என்கை.

௧0௩.— இன்னமுமொரு ப்ரகாரத்தாலே, இந்த ஸமாஸத்வய பலிதங்களை யருளிச்செய்கிறார்,

(அந்தர்யாமித்வமும், உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாம்) என்று. அதாவது-பஹுவ்ரீஹியும், தத்புருஷனுமாகிற உபயஸமாஸத்தாலும் பலித்தது, அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளிற் சொல்லுகிறபடியே, அகிலசேதநா சேதநங்களிலும், அந்தராத்மதயாவஸ்திதனாய்க் கொண்டு நியந்தாவாயிருக்கையாகிற (அந்தர்யாமித்வமும்,)

எ.—[பரத்வஸௌலப்யங்கள்]-(தன்னையொழிந்த ஸமஸ்தவஸ்துக்களுக்கும் தானாதாரமாயிருக்கையாகிற பரத்வமும், இப்படி பெரியனான தான் ஸகலசேதநா சேதநங்களிலும் தன்னை யமைத்துக்கொண்டு புக்கிருக்கையாகிற ஸௌலப்யமும்) என்று மூலார்த்தம்.

௧0௩.— யோஜநாந்தரத்துக்கவதாரிகை (இன்னமும்) என்று தொடங்கி.

[அந்தர்யாமித்வமும்]-(அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகளில் சொல்லுகிறபடியே அகிலசேதநா சேதநங்களிலும் அந்தராத்மதயா அவஸ்திதனாய்க்கொண்டு) நியந்தாவாயிருக்கையாகிற) [அந்தர்யாமித்வமும்],

---

தொ.— (வஸ்துக்களுக்கும்) என்றது - நாரங்களுக்குமென்றபடி. இப்படி) என்றது-ஸகலவஸ்துக்களுக்கும் ஆதாரமாம்படியென்றபடி. (பெரியனான) என்றது - விபுவானவென்றபடி. (தன்னையமைத்துக்கொண்டு) என்றது - விபுவானதன்னை ஶரீரியாம்படி வைத்துக்கொண்டென்றபடி.

[இவையிரண்டாலும்பலித்தது பரத்வஸௌலப்யங்கள்] என்கிறவிடத்தில் தத்புருஷனாலே பரத்வமும், பஹுவ்ரீஹியால் ஸௌலப்யமும் என்கிற நியமமன்றியிலே தத்புருஷனாலும் பரத்வஸௌலப்யங்கள் பலிக்கும்; பஹுவ்ரீஹியாலும் பரத்வஸௌலப்யங்கள் பலிக்கும் என்றருளிச்செய்வர். அதெங்ஙனேயென்னில்; தன்னையொழிந்தஸகலவஸ்துக்களுக்கும் தாமாதாரமாமளவில ஸங்கல்பத்தாலன்றிக்கே திவ்யாத்மஸ்வரூபத்தாலே தரதமபாவம்வையாதே எல்லார்க்குமொக்க ஆதாரமாயிருக்கையாகிற ஸௌலப்யமும், ஸர்வாந்தர்யாமிதயா ஸர்வாதாரகனாய ஸர்வத்தையும் நியமிக்கவல்லனாகையாகிற பரத்வமும் இதாறானையாலே உபயஸமாஸத்தாலும் உபயமும்சொல்லுகிறது.

௧0௪.— மேலுக்கவதாரிகை (இன்னமும்) இத்யாதி. மூலார்த்தம். (அதாவது) இத்யாதி. இந்தயோஜனையிலே பஹுவ்ரீஹியாலே [அந்தர்யாமித்வமும்];

பி.—௧0௪.— பஹுவ்ரீஹியாலே [அந்தர்யாமித்வமும்],

மூ.—உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாம்.

வ்யா.—‘‘ஈங் - கதௌ’’ ‘‘இண்-கதௌ’’ என்கிறதாதுவிலேயாதல் ‘‘அய-கதௌ’’ ‘‘அய-கதௌ’’ என்கிறதாதுவிலேயாதல் ஸித்தமான அயநபதத்தில் கரணவ்யுத்பத்தியாலும், கர்மணிவ்யுத்பத்தியாலும் ப்ரகாஶிதமான (உபாயத்வமும், உபேயத்வமுமாகவுமாம்) என்கை. பஹுவ்ரீஹியோஜனை சொல்லுகிறவிடத்தில், யோக்யதாநுகுணமாக நாரஶப்தத்தை, குணங்களையொழிந்த வஸ்துக்களுக்கு வாசகமாகக்கொண்டாப்போலே, தத்புருஷயோஜனையிலும், அயநஶப்தத்தை உபாயோபேயவாசியாகக்கொள்ளுமளவில், யோக்யதாநுகுணமாக நாரஶப்தத்தை அசேதநங்களையொழிந்த சேதநவஸ்துக்களுக்கு வாசகமாகக் கொள்ளக்கடவது.

எ.— [உபாயத்வமும் உபேயத்வமுமாகவுமாம்] (அயநபதத்தில் கரணவ்யுத்பத்தியாலும் கர்மணிவ்யுத்பத்தியாலும் ப்ரகாஶிதமான) [உபாயத்வமும் உபேயத்வமுமாகவுமாம்] என்று மூலார்த்தம்.

(கரணவ்யுத்பத்தி)யாவது-ஈயதே-அநேந இதி-அயநம்’’ என்கிறது.

(கர்மணிவ்யுத்பத்தி)யாவது—ஈயதே-அஸௌ-இதி-அயநம்’’ என்கிறது.

தா.— (அயநபதத்தில் கரணவ்யுத்பத்தியில்) [உபாயத்வமும்]; (கர்மணிவ்யுத்பத்தியில் [உபேயத்வமும்] சொல்லுகிறதென்று கண்டு கொள்வது.

(அயந) பதத்தை ஆஶ்ரயவாசியாக் கொள்ளுமளவில் (நார) பதத்தை சேதநமாத்ரவாசியாகக கொள்ளவேணுமென்கையை ஸதர்ஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார்

(பஹுவ்ரீஹி) என்று துடங்கி. (யோக்யதாநுகுணமாக) என்றது-ஶரீரதயா ஆஶ்ரயமாகைக்கு அநுகுணமாக வென்றபடி. (தத்புருஷயோஜனையிலும்) என்றது - ‘‘நாராணம்-அயநம்-நாராயணம்’’ என்கிற யோஜனையிலு மென்றபடி. (யோக்யதாநுகுணமாக) என்றது - உபாயோபேயாபேக்ஷாநுகுணமாகவென்றபடி..

பி.—தத்புருஷனாலே [உபாயத்வமும் உபேயத்வமும்] சொல்லுகிறது. ‘‘ஈயதே-அநேந-இதி-அயநம்’’ என்கிற (கரணவ்யுத்பத்தியா)லே [உபாயத்வமும்], ‘‘ஈயதே - இதி - அயநம்’’ என்கிற (கர்மணிவ்யுத்பத்தியா)லே [உபேயத்வமும்] சொல்லுகிறதென்றபடி. அயநஶப்தம் கரணவ்யுத்பத்தியில் உபாயோபேய ப்ரதிபாதகமாமிடத்தில் - த்ரிதியாதத்புருஷனாலும் ஸித்திக்குமாகையாலே, கீழ்ச்சொன்ன ஸமாஸத்வயத்திலும் என்றவிடத்தில் தத்புருஷஸமாஸம் ஷஷ்டீதத்புருஷனையன்றிக்கே தத்புருஷஸாமாந்யமென்று தாத்பர்யம். கரணவ்யுத்பத்தி)யாவது – ‘‘ நாராঃ - அநேந - ஏநம் - யந்தி - இதி - நாராயணঃ’’ நாரங்களானவைகள் அவனாலே கரணத்தாலே அவனையடைகை. (கர்மணிவ்யுத்பத்தி)யாவது – ‘‘ நாரைঃ ஈயதே - இதி - நாராயணঃ’’ நாரங்களாலே தானடையப்படுமவனென்கை.

வ்யா.— "నారస్త్విత్రిసర్వపుంసాంసమూహఃపరికథ్యతే।గతిరాలంబనంతస్య తేననారాయణస్స్మృతః॥" "நாரஸ்த்விதிஸர்வபும்ஸாம்ஸமூஹஃபரிகத்யதே । கதிராலம்பநம்தஸ்யதேநநாராயணஸ்ஸ்ம்ருதஃ॥" (௬௬) என்றும், "నారశబ్దేన జీవానాంసమూహఃప్రోచ్యతేబుధైః। తేషామయనభూతత్వాన్నారాయణఇహోచ్యతే॥" "நாரஶப்தேநஜீவாநாம்ஸமூஹஃப்ரோச்யதேபுதைஃ । தேஷாமயநபூதத்வாந்நாராயணஇஹோச்யதே" (௬௭) என்றும் இத்யாதிகளிலே இவ்வர்த்தம்சொல்லப்படாநின்றதிறே!

எ.—பாத்மே ("நார") இதி. நாரமென்று ஸர்வசேதநருடைய ஸமூஹம் சொல்லப்படுகிறது; அதுக்கு கதியும் ஆலம்பநமுமாகையாலே நாராயணன் என்று ஸ்மரிக்கப்பட்டான் என்கையாலே சேதநஸமூஹத்துக்கு 'உபாயோபேயபூதன் நாராயணன்' என்றதாய்த்து.

("நாரஶப்தேந") இதி. நாரஶப்தத்தாலே ஜீவஸமூஹம் சொல்லப்படுகிறது; அதுகளுக்கு அயநமாகையாலே நாராயணனென்று சொல்லப்படுகிறான்.

தொ.—உக்தார்த்தத்துக்கு ப்ரமாணங்காட்டுகிறார்,

("நாரஸ்த்விதி") இத்யாதி. இவ்விடத்தில் சகாரம்அசித்வ்யாவ்ர்த்தியைச் சொல்லுகிறது; ஆக அசித்வ்யாவ்ர்த்தமான ஜீவாத்மஸமூஹம் நாரஃ என்று வித்வான்களாலே சொல்லப்படாநின்றது ; அந்த நாரத்துக்கு உபேயமாயும் உபாயமாயுமிருக்கையாலே ஸர்வேஶ்வரன் நாராயணன் என்று சொல்லப்படாநின்றான்; வித்வான்களாலே நாரஶப்தத்தாலே ஜீவாத்மாக்களுடைய ஸமூஹம் ஶப்தஶக்தியாலே சொல்லப்படுகிறது ; அந்த நாரஶப்தவாச்யரான ஜீவாத்மாக்களுக்கு உபாயோபேயமாயிருக்கையாலே இவ்விடத்திலெம்பெருமான் நாராயணனென்று சொல்லப்படுகிறான் என்று ஶ்லோகார்த்தம். (இவ்வர்த்தம்) என்றது - யோக்யதாநுகுணமாக நாரஶப்தத்தை ஜீவமாத்ரவாசியாக்குகிற (இவ்வர்த்தம்) என்றபடி.

பி.—நாரஶப்தத்தாலே சேதநவர்க்கத்தையே சொல்லுமோவென்ன; சொல்லுமென்கைக்கு ப்ரமாணத்வயமருளிச்செய்கிறார்

("நாரஸ்த்விதி") என்றுதுடங்கி. "கம்யதே - இதி - கதிஃ" அதாவது - [உபேயம்]. ("ஆலம்பநம், அயநபூதத்வாத்") என்றது-உபாயோபேயபூதனாகையாலே என்றபடி.

மூ.—கOஉ. "எம்பிரானெந்தை"

வ்யா.—கOஉ.—கர்மணிவ்யுத்பத்திஸித்தமான ப்ராப்யத்வத்துக்கு ஸங்கோச மில்லாமையாலே, ஸர்வப்ரகாரவிஶிஷ்டமாயிருக்கையாலும்,

---

எ.—கOஉ.—மேலுக்கவதாரிகை (கர்மணி) என்று துடங்கி.

(கர்மணிவ்யுத்பத்திஸித்தமான ப்ராப்யத்வத்துக்கு ஸங்கோசமில்லாமையாலே) என்றது—"[Telugu script] " "வைகுண்டேது பரேலோகே ஶ்ரியாஸார்த்தம்" என்றும், "[Telugu script]" "ஶ்ரிய தேசபரம்பதம்" (எஎஉ) என்றும், "பரமப்ராப்யையாக பிராட்டி ஶ்ருதியிலே கேழ்க்கப்படா நின்றாள்" என்றும், "[Telugu script]" "ஸோஶ்நுதேஸர்வாந்காமாந்ஸஹ" (எஎ௩) என்று கல்யாணகுணங்களை ப்ராப்யத்வேந அநுபவியா நிற்பன் என்றுஞ் சொல்லுகையாலே அப்ரதக்ஸித்த விஶேஷணபூதையான பிராட்டிக்கும் திருமேனிக்கும் அப்ரதக்ஸித்தவிஶேஷணங்களான வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்யாதி குணங்களுக்கும் ப்ராப்யத்வ முண்டாகையாலே ஸங்கோசமில்லையென்றபடி.

இத்தால் கரணேவ்யுத்பத்தி ஸித்தமான உபாயத்வத்தில் ஸங்கோசமென்னுமிடம் ஸித்தம்; உபாயத்வதஶையில் அப்ரதக்ஸித்த விஶேஷண பூதையானபிராட்டிக்கு புருஷகாரத்வமொழிய உபாயத்வங் கூடாமையாலும், அப்ரதக்ஸித்த விஶேஷணங்களான வாத்ஸல்யாதிகுணங்களுக்கு ஆஶ்ரயண ஸௌகர்யாபாதகத்வமொழிய உபாயத்வங் கூடாமையாலும்.

(ஸர்வ ப்ரகாரவிஶிஷ்டமாயிருக்கையாலும்) என்றது - ப்ரகார [illegible] அப்ரதக்ஸித்த விஶேஷணமாய் ஸமஸ்தங்களாய் அப்ரதக்ஸித்தங்களான வாத்ஸல்யாதி குணவிஶிஷ்டமாயிருக்கையாலு மென்றபடி; ஸர்வவித பந்து ப்ரகாரவிஶிஷ்டமாயிருக்கையாலு மென்றுமாம்; "[Telugu script]" "மாதா பிதா ப்ராதாநிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் | கதிர்நாராயண: (எஎச)"

தொ.—கOஉ.— மேலுக்கவதாரிகை (கர்மணி) இத்யாதி.

(ஸங்கோசமில்லாமையாலே) என்ற அநந்தரம் அது என்று கூட்டிக்கொள்ளவேணும்; இல்லாதபோது இவ்வாக்யம் அந்வயியாது. அது என்றது - கர்மணிவ்யுத்பத்தி ஸித்தமான ப்ராப்யத்வமென்றபடி. (ஸர்வ ப்ரகார விஶிஷ்டமாயிருக்கையாலும்) என்றது - மாத்ருத்வாதி ஸர்வ ப்ரகார விஶிஷ்டமாயிருக்கையாலுமென்றபடி.

மூ.—என்கையாலே ஈச்வரனே எல்லாவுறவுமுறையுமென்று சொல்லும்.

வ்யா.—பந்துலாபமும் ப்ராப்யமாயிருக்கையாலும், ஈச்வரனுடைய ஸர்வவித பந்துத்வமும் இப்பதத்திலே சொல்லும்படியை யருளிச்செய்கிறார்

("எம்பிரான்") என்று துடங்கி. அதாவது – நாராயணசப்தார்த்தத்தை அநுஸந்திக்கிற திருமங்கையாழ்வார் "எம்பிரானெந்தையென்னுடைச்சுற்றமெனக் கரசென்னுடைவாணாள்" என்கையாலே, ஈச்வரனே இவ்வாத்மாக்களுக்கு ஸர்வவிதபந்துவுமென்று, இப்பதத்திலே சொல்லுமென்கை.

எ.—"மாதா என்கையாலே வாத்ஸல்யமும், பிதா என்கையாலே ஸ்வாமித்வமும், ப்ராதா என்கையாலே ஸௌசீல்யமும், நிவாஸ: என்கையாலே நித்யஸாந்நித்யரூபமான ஸௌலப்யமும், சரணம் என்கையாலே உபாயத்வமும், ஸுஹ்ருத் என்கையாலே கார்யோபயோகி ஞானஜாதத்தையும், கதி: என்றுப்ராப்யத்வத்தையும்சொல்லுகிறது" என்று நிர்வஹிப்பர்கள். ஸ்ம்ருதிச்ச "తస్మాన్నారాయణం బంధుం మాతరం పితరం గురుం । నివాసశ్శరణంచాహుః వేదవేదాంతపారగాః॥" "தஸ்மாந் நாராயணம் பந்தும் மாதரம் பிதரம் குரும் । நிவாஸச்சரணம்சாஹு: வேதவேதாந்தபாரகா:॥" (என்று). (பந்துலாபமும் ப்ராப்யமாயிருக்கையாலும்)என்றது-சேதநனுக்கு பந்துக்களுடையலாபமு முத்தேச்யமாகையாலுமென்றபடி.

["எம்பிரானெந்தை" என்கையாலே]-(நாராயணசப்தார்த்தத்தை யநுஸந்திக்கிற திருமங்கையாழ்வார் ["எம்பிரானெந்தை] (யென்னுடைச் சுற்றமெனக்கரசென்னுடைவாணாள்") [என்கையாலே], [ஈச்வரனே எல்லாவுறவு முறையுமென்று சொல்லும்] – (ஈச்வரனே இவ்வாத்மாக்களுக்கு ஸர்வவித பந்துவுமென்று இப்பதத்திலே சொல்லும்) என்று மூலார்த்தம்.

பெரியதிருமொழி – க – ப – க – திரு – ௬ – பாட்டு.

["எம்பிரா னெந்தை யென்னுடைச்சுற்ற
மெனக்கர சென்னுடைவாணாள்
அம்பினா லரக்கர் வெருக்கொள நெருக்கி
யவருயிர்செகுத்த வெம்மண்ணல்
வம்புலாஞ்சோலை மாமதிள்தஞ்சை
மா மணிக்கோயிலே வணங்கி
நம்பிகாள்! உய்ய நான் கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்."]

தொ.— இப்பதத்திலே) என்றது-இவ்வ்யாபகபதத்திலே என்றபடி. மூலார்த்தம்(அதாவது)இத்யாதி.["எம்பிரான்"]எனக்குபகாரகன். ["எந்தை"] எனக்குத்தமப்பன். (என்னுடைச்சுற்றம்) மற்றுமுள்ள என்னுடைய பந்துவர்க்கம். (எனக்கரசு) எனக்கு ராஜா. ("என்னுடைவாணாள்") என்னுடையப்ராணன்.

எ.—[“அவ.—ஆறும்பாட்டு.—இத்தை நீர்போர ஆதரியாநின்றீர், இது தனக்கு அர்த்தமென்னென்ன; சொல்லுகிறார். இதினுடைய பாடத்தை ஜபித்து அத்தாலே பலம் பெறவிருத்தல், இத்தாலே பாபத்தைப் போக்கி கர்மயோகத்துக்குடலாக்குதல் செய்கையன்றிக்கே, அர்த்தாநுஸந்தாநத்தாலே பேறு என்று தமக்கு பக்ஷமாகையாலே அர்த்தத்தைச் சொல்லுகிறார். நம்மாழ்வாரும், திருமந்த்ரம் ஸ்ரீடத்திலே ப்ரஸ்துதமானால், முன்னேயாதல் பின்னேயாதல் அர்த்தத்தைச்சொல்லிப்போருவர் அர்த்தப்ராதாந்யம் தோற்ற ; ஜ்ஞாநாந்மோக்ஷமாக வேண்டுகையாலே.

வ்யா.—(எம்பிரான்) எனக்கு உபகாரகன். (எந்தை) எனக்கு ஜநகன். (என்னுடைச் சுற்றம்) என் குடற்றுடக்கான எல்லா வுறவு முறையுமானவன். (எனக்கரசு) என்னை வன்னியமறுத்து ஆண்டவன். (என்னுடைவாணாள்) என்னுடைய ஆயுஸ்ஸு.

(அம்பினாலரக்கர் வெருக்கொள நெருக்கி அவருயிர் செகுத்த வெம்மண்ணல்) ஸங்கல்பத்தாலன்றிக்கே அம்பாலே ராக்ஷஸரஞ்சும்படி நெருக்கி அவர்களுயிரை முடித்த என் ஸ்வாமி. ஸ்வாமித்வத்தோடே தலைக்கட்டிற்றாய் நின்றது. இத்தால் சொல்லிற்றாய்த்து - “மாதா பிதா ப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:” என்கிறபடியே. இதுதான் உமக்கு வந்தபடி யென்னென்ன (வம்புலாம்சோலை மாமதிள் தஞ்சைமா மணிக்கோயிலே வணங்கி) நித்யவஸந்தமான சோலையையும் மாமதிளையு முடைத்தான தஞ்சைமாமணிக்கோயிலே வணங்கி வந்தது; “எல்லாவுறவு முறையும்தானே” என்று தோற்றும்படி அவன் வந்து நிற்கிற ஸௌலப்யத்தை அநுஸந்திக்கையாலே வந்தது. (நம்பிகாள்!) பகவத்வ்யதிரிக்த விஷயங்களைப்பற்றி தேஹபோஷண பரராயிருக்கிறஅவர்களைச் சொல்லிற்றுதல், பகவத்குணாநுபவம் பண்ணி அத்தாலே பூர்ணராயிருக்கிற வவர்களைச் சொல்லிற்றுதல். (உய்ய நான் கண்டுகொண்டேன்) நீங்களெல்லாம் புறம்பே போய் க்லேசப்படாநிற்க நானுஜ்ஜீவிக்கும்படி காணப்பெற்றே னென்னுதல் ; நீங்கள் உஜ்ஜீவிக்கும் விரகறிந்து கரையேறினாப்போல நானும் கரையேறப் பெற்றே னென்னுதல். (நாராயணா வென்னும் நாமம்) ‘ஸர்வவிதபந்துவுமவனே’ என்கிற அர்த்தத்துக்கு வாசகமான திருநாமத்தைக் காணப்பெற்றேன்.”] ... ...

மூ.—௪0௩. நாம் பிறர்க்கானவன்றும், அவன் நமக்காயிருக்கும்.

மூ.—௪0௪. இராமடம்

வ்யா.— ௪0௩.—இப்படி பந்த்துபூதனுயக்கொண்டு, இத்தலைக்கவன் செய்யுமதேதென்ன வருளிச்செய்கிறுர்,

(நாம் பிறர்க்கானவன்றும், அவன் நமக்கா யிருக்கும்) என்று. அதாவது-(நாம்) தன்னோடு ஒட்டற்று, (பிறர்க்கு) நல்லரா யிருந்த காலத்திலும், (அவன் நமக்கு) நல்லன் (ஆயிருக்கும்) என்கை.

௪0௪.—இப்படி நாம் அந்யபரரானவன்றும், நமக்கேயாயிருந்து அவன் செய்துபோருமது தானேதென்ன அருளிச்செய்கிறுர்

(இராமடம்) என்று துடங்கி.

எ.—௪0௩.— மேலுக்கவதாரிகை (இப்படி) என்று துடங்கி.

(தன்னோடொட்டற்று) என்றது - ஸர்வவிதபந்துவான தன்னோடுண்டான சேஷத்வ ஸம்பந்தத்தை அற்றென்றபடி. [பிறர்க்கு] என்றது - ஸம்ஸாரிகளுக்கென்றபடி.

[நாம் பிறர்க்கானவன்று] - (நாம் தன்னோடொட்டற்று பிறர்க்கு நல்லராயிருந்த காலத்திலும்), [அவன் நமக்காயிருக்கும்]-(அவன் நமக்கு நல்லனுயிருக்கும்) என்று மூலார்த்தம்.

௪0௪.—மேலுக்கவதாரிகை (இப்படி நாம் அந்யபரனுனவன்றும்) என்று துடங்கி.

தொ.—௪0௩.—மேலுக்கவதாரிகை(இப்படி)இத்யாதி. (இப்படி)என்றது-ஸர்வவிதமான என்றபடி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (தன்னோ டொட்டற்றுப் பிறர்க்கு நல்லராயிருந்த காலத்திலும்)என்றது-தன்னோடே அநந்யார்ஹசேஷத்வேந ஸம்பந்தியாகாமல் பிறரோடே சேஷத்வேநஸம்பந்தியாயிருந்தகாலத்திலும் என்றபடி.(அவன் நமக்கு நல்லனுயிருக்குமென்கை) என்றது—நம்மோடு நிருபாதிக ஸம்பந்தமுடைய ஈச்வரன் நமக்கு நன்மைகளை ஆசாஸித்திருக்குமென்கையென்றபடி.

௪0௪.—மேலுக்கவதாரிகை (இப்படி) இத்தியாதி. (இப்படி)என்றது—கீழ்ச்சொன்னபடி யென்றபடி.

பி.—௪0௩.— (பிறர்க்குநல்லராயிரு) க்கையாவது - தேவதாந்தரங்களுக்கு நல்லராயிருக்கை.

மூ.— ஊட்டுவாரைப்போலே, உள்ளே பதிகிடந்து ஸத்தையேபிடித்து, நோக்கிக்கொண்டுபோரும்.

வ்யா.— அதாவது-நேர்கோடுநேர் தங்கள்பக்கல்வந்து அபேக்ஷிதங்களைவாங்கி ஜீவியாதே, துர்மாநத்தாலே பட்டினியே திரியுமவர்களையும் விடமாட்டாமையாலே, அசலறியாதபடி ராத்ரி மடத்திலே புஜிப்பிப்பாரைப்போலே, தன்பக்கல் தலைசாயோம் என்று இச்சேதநர் ஸ்வாதந்த்ர்யம் மடித்துத் திரியாநிற்க, இவர்கள் கண்காணுதபடி அந்தராத்மாவாய்க்கொண்டு உள்ளே மறைந்திருந்து இவர்கள் (ஸத்தையே) துடங்கி ரக்ஷித்துக்கொண்டுபோரும் என்கை.

ஆக இந்நாராயணபதத்தாலே கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஈச்வரன் படியை அருளிச்செய்தாராய்த்து.

எ.—(நேர்கொடுநே) என்றது-ப்ரத்யக்ஷமாகவென்றபடி. (தன்பக்கல் தலைசாயோமென்று) என்றது- "ద్విధా భజ్యేయమప్యేవం న నమేయం తు కస్యచిత్" "த்விதாபஜ்யேயமப்யேவந்நநமேயந்துகஸ்யசித்" (எஎ௬) என்கிறபடியே வணங்குகிறதில்லை யென்றபடி. (ஸ்வாதந்த்ர்யம் மடித்துத் திரியாநிற்க) என்றது -" ఈశ్వరో౽హమహం భోగీ సిద్ధో౽హం బలవాన్ సుఖీ। ఆఢ్యో౽భిజనవానస్మి కో౽న్యో౽స్తి సదృశో మయా॥" "ஈச்வரோஹமஹம்போகீ ஸித்தோஹம் பலவாந்ஸுகீ । ஆட்யோபிஜநவாநஸ்மி கோந்யோஸ்திஸத்ருசோமயா॥"(எஎஎ)என்கிறபடியே ஸ்வாதந்த்ர்யத்தை கோஷித்துக்கொண்டு திரியாநிற்கவென்றபடி.

[இராமா_ மூட்டுவாரைப்போலே] - (ராத்ரிமடத்திலே புஜிப்பிப்பாரைப்போலே), (தன்பக்கல் தலைசாயோமென்று இச்சேதநர் ஸ்வாதந்த்ர்யமடித்து திரியாநிற்க) [உள்ளே பதிகிடந்து] – (இவர்கள் கண்காணுதபடி அந்தராத்மாவாய்க்கொண்டு உள்ளே மறைந்திருந்து), ஸத்தையே பிடித்து நோக்கிக்கொண்டுபோரும்] – (இவர்கள் ஸத்தையே துடங்கி ரக்ஷித்துக்கொண்டுபோரும்) என்று மூலார்த்தம்.

நாராயண சப்தார்த்தத்தை நிகமித்தருளுகிறார்

(ஆக) என்று துடங்கி. (ஈச்வரன்படியை) என்றது - ஈச்வரனுடைய ப்ரகாரத்தையென்றபடி ; ஈச்வரஸ்வபாவத்தை யென்றுமாம்; அதாவது-சேஷித்வம்.

தா.—மூலார்த்தம் (நேர்கொடு) இத்யாதி. (நேர்கொடு நேர்) என்றது-எதிராகவென்றபடி. (ஜீவியாதே) என்றது-அநுபவியாதே யென்றபடி. (துர்மாநத்தாலே)என்றது-அஹங்காரத்தாலே யென்றபடி. (ராத்ரிமடத்திலே) என்றது-ராச்சோறிடும் ஸத்ரத்திலே யென்றபடி.

நாராயணபதார்த்தத்தை நிகமித்தபடியை அருளிச்செய்கிறார் (ஆக) இத்யாதியால். இந்நாராயணபதத்தாலே என்றது-சதுர்த்யந்தமான நாராயணபதத்தாலே யென்றபடி. (படியை) என்றது-அந்தர்யாமித்வாதி ப்ரகாரத்தை யென்றபடி.

பி.—௧0அ.— "(அசலறியாதபடி) கவாக்ஷாதிகளிலே வைப்பார்கள் என்று ஸம்ப்ரதாயம்" என்றருளிச்செய்வர். (கைங்கர்யப்ரதிஸம்பந்தியான) என்றது - விஷயமானவென்றபடி.

மூ.—௧0௫. ஆயவென்கிற இத்தால்

வ்யா.—௧0௫.— இனி, இதில் விபக்த்யம்ஸத்தாலே கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறபடியை அருளிச்செய்கிறார்,

(ஆய என்கிற இத்தால்) என்று தொடங்கி. அதாவது-ஆயவென்கிற இந்த சதுர்த்தியாலே

எ.—௧0௫.—மேல் வாக்யத்துக்கவதாரிகை (இனி) என்று தொடங்கி.

(இதில் விபக்த்யம்ஸத்தாலே) என்றது-இந்த நாராயண பதத்தில் விபக்தியாலே யென்றபடி.(கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிறபடியை) என்றது-"ப்ரார்த்தநாயாம் - சதுர்த்தீ" என்று ப்ரார்த்தனையில் வந்த சதுர்த்தியாகையாலே கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கிற ப்ரகாரத்தை என்றபடி. இவ்விடத்தில் ப்ரகாரமாவது-பேதம்.இச்சதுர்த்தி மற்றொரு ப்ரார்த்தனையைச் சொல்லாதே கைங்கர்ய ப்ரார்த்தனையைச் சொல்லுகிறதென் றருளிச்செய்தது-ப்ரணவத்தில் தாதர்த்திய சதுர்த்திக்கு விவரணமாகையாலே; "తస్మైదాస్యంచతుర్థ్యాతుమంత్రేప్రోక్తంహిపార్వతి" "தஸ்மைதாஸ்யஞ்சதுர்த்யாதுமந்த்ரே ப்ரோக்தம்ஹிபார்வதி" (எஎ௮) என்னக்கடவதிறே!

[ஆய என்கிற இத்தால்]-(ஆய என்கிற இந்த சதுர்த்தியாலே),

தொ.—௧0௫.—மேலுக்கவதாரிகை(இனி) இத்யாதி. (இனி)என்றது-நாராயணபதார்த்த மருளிச்செய்த வநந்தரமென்றபடி. (இதில்) என்றது-நாராயண ஸப்தத்திலென்றபடி. (விபக்த்யம்ஸத்தாலே) என்றது-சதுர்த்தியாலேயென்றபடி. மூலார்த்தம்(அதாவது) இத்யாதி.

பி.—௧0௫.— "தாதர்த்த்யே சதுர்த்தீவக்தவ்யா" என்கிறத்தினாலே சதுர்த்தியெல்லாம் தாதர்த்த்யே சதுர்த்தியாயிருக்குமானால் கீழ் ப்ரணவத்திலேயும் தாதர்த்த்யே சதுர்த்தியைச்சொல்லி இங்கேயும தாதர்த்த்யே சதுர்த்தியைச்சொன்னால் புநருக்தமன்றோ ?

'அப்ராப்தே ஹிஸாஸ்த்ரமர்த்தவத்' என்கிற ந்யாயத்தாலே கீழ்ச்சொன்ன ஸேஷத்வத்தை இங்கும் சொல்லும்போதைக்கு ஸாஸ்த்ரம் ப்ரவர்த்தியாதென்றும், ஸாஸ்த்ரவிருத்தமாமென்றும் ஸங்கைபரிஹாரம். கீழ்ச்சொன்ன ஸேஷத்வந்தான் கிஞ்சித்காரமில்லாவிட்டால் ஸேஷத்வம் ஸித்தியாமையாலே தத்ஸித்த்யர்த்தம் கிஞ்சித்காரம் ஸித்திக்கவேணும், கிஞ்சித்காரந்தான் ஸித்தித்ததோ? இல்லையோ ? என்றால் ; அது கீழ் ஸித்திக்க இல்லை ; அந்த கிஞ்சித்காரத்தை (இந்த சதுர்த்தியிலே) ப்ரார்த்திக்கையாலே 'அப்ராப்தே ஹி ஸாஸ்த்ரமர்த்தவத்' என்கிற ஸாஸ்த்ரவிருத்தமுமில்லையென்றும் ; அன்றிக்கே ப்ரார்த்தநாயாமபி சதுர்த்தியுண்டென்னுமத்தாலே சொல்லுகிறதாதலென்று அகாரத்தில் சதுர்த்தியில் ஸ்வரூபதாதர்த்த்யஞ்சொல்லுகிறது ; இந்த சதுர்த்திக்கு ப்ரார்த்தனையும் அர்த்தமாகையாலே கைங்கர்யப்ரார்த்தனையுக்தோற்றுகின்றது. த்வயத்தில் சதுர்த்தியாலே அந்தஸ்வரூபத்துக்கு அநுரூபமான வ்ருத்தியில் தாதர்த்த்யத்தைச்சொல்லுகையாலே கைங்கர்யவாசகமென்னக்குறை இல்லை.

மூ.—"சென்றாற் குடையாம்" என்கிறபடியே எல்லா அடிமைகளும் செய்யவேணும், என்று அபேக்ஷிக்கிறது.

வ்யா.—("சென்றாற் குடையாம்") என்கிறபாட்டிற்சொல்லுகிறபடியே, திருவநந்தாழ்வானைப்போலே ஸர்வவித கைங்கர்யங்களும் (செய்ய வேணுமென்று அபேக்ஷிக்கிறது)என்கை.

எ.— ["சென்றாற் குடையாம்" என்கிறபடியே]-["சென்றாற் குடையாம்"](என்கிற பாட்டில் சொல்லுகிறபடியே), [எல்லா வடிமைகளும் செய்யவேணுமென் றபேக்ஷிக்கிறது]-(திருவநந்தாழ்வானைப்போலே ஸர்வவிதகைங்கர்யங்களும்)[செய்யவேணுமென்றபேக்ஷிக்கிறது]என்று மூலார்த்தம்.

முதல் திருவந்தாதி-௫௩-பாட்டு.

["சென்றாற் குடையா மிருந்தாற்சிங்காசனமா
நின்றான்மரவடியா நீள்கடலுள்—என்றும்
புணையாமணி விளக்காம் பூம்பட்டாம்புல்கு
மணையாந் திருமாற் கரவு."]

["௫௩-பாட்டு. ஸ்வப்ரயோஜநத்துக்கு மடியேற்கும் தூர்மாநிகள் ஆச்ரயிக்கும்படியை அநுஸந்தித்து உள் வெதும்பு அடங்கும்படி அநந்யப்ரயோஜநராய் தத்ததவஸ்த்தோசிதமான வடிவெடுத்துக்கொண்டு அடிமைசெய்யக்கடவ நித்யஸூரிகளுக்குத் தலைவனான திருவநந்தாழ்வான் அங்குத்தைக்கு அடிமை செய்யும்படியை அநுபவிக்கிறார்.

ப—ரை. திரு-பெரியபிராட்டியாரோடே, (நித்யஸம்யுக்தனாயிருக்கிற) மாற்கு-ஸர்வேச்வரனுக்கு, (அவனும் அவளும் கூடக்கண்வளர்ந்தருளுகைக்கும் பரிமாறுகைக்கு யோக்யமான வடிவையுடைய) அரவு-திருவநந்தாழ்வான், (உகப்புக்குப் போக்குவீடாக) சென்றால்-அவன் உலாவியருளப்புக்கால், (மழை வெய்யில்படாதபடி) குடையாம்-குடையாம்; இருந்தால்-(தன்னிச்சையாலே) எழுந்தருளி யிருந்தால், சிங்காசனமாம்-திவ்யஸிம்ஹாஸநமாம்; நின்றால்-(ஸ்வேச்சையாலே) எழுந்தருளிநின்றால், மரவடியாம்-திருவடி நிலைகளாம்; நீள்-பரப்பையுடைத்தான, கடலுள் - கடலிலே, (கண்வளர்ந்தருளும்போதைக்கு) என்றும்-ஸர்வகாலத்திலும், புணையாம்-(திருப்பள்ளி) மெத்தையாம்; (ஏதேனுமொன்றை விளக்கிட்டுக்காண அபேக்ஷிதமானபோது) மணிவிளக்காம்-மங்களதீபமாம்; (சாத்தியருளத்திருப்பரியட்டம் அபேக்ஷிதமானபோது) பூம்பட்டாம் – (பும்ஸ்த்வாவஹமான) அழகிய திருப்பரியட்டமாம்; (சாய்ந்தருளினபோதைக்குப் பிராட்டிமார் சேர பாறு என்னும்படி) புல்கு மணையாம்-தழுவணையாம்.

தா.— "ஆவிர்பூ:" என்கிற அத்யாஹார்தமான க்ரியாபதத்தை கடாக்ஷித்து [எல்லாவடிமைகளும் செய்யவேணுமென் றபேக்ஷிக்கிறது] என்றருளிச்செய்கிறார்.

மூ.—௧0௬. நமஸ்ஸாலே, தன்னோடுறவில்லையென்று வைத்து கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக்கூடுமோவென்னில்;

வ்யா.—௧0௬.—(நமஸ்ஸாலே) தனக்கென்ன வொன்றை விரும்புகைக்கு ப்ராப்தியில்லாத அத்யந்தபாரதந்த்ர்யம் சொல்லியிருக்க, இக்கைங்கர்யத்தைத்தான் விரும்பி அபேக்ஷிக்கை ஸம்பவியாதென்றிருக்குமவர்கள் பண்ணும் ப்ரஶ்நத்தை யநுவதிக்கிறார்

(நமஸ்ஸாலே தன்னோடு உறவில்லையென்று வைத்து கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கக் கூடுமோவென்னில்;) என்று.

எ.—அவ.—கீழே எல்லாநேர்த்தியும் நேர்ந்து தங்களுக்கு உறுப்பாக ஆஶ்ரயிக்குமவர்களைச்சொல்லிற்று; இதில் தங்களை எல்லாமழிய அங்குத்தைக்கு உறுப்பாமவர்களைச் சொல்லுகிறது.

வ்யா.—(சென்றால் குடையாம்) கைங்கர்யம் ஸ்வபுத்யதீந மன்று என்கிறது. 'நான் குடையாய் நின்றேன், நீ இங்கேவா' என்கையன்றி அவன் உலாவப்புக்கால் குடை அபேக்ஷிதமானபோது குடையாகை. (இருந்தால் சிங்காசநமாம்) இருக்கை திருவுள்ளமானபோது திவ்ய ஸிம்ஹாஸநமாம். நிற்கை திருவுள்ளமானபோது மரவடியாம். கண் வளர அபேக்ஷிதமானபோது கடலிலே எல்லாக்காலத்திலும் படுக்கையாம். (அணிவிளக்காம்) ஒரு விளக்காலே ஒரு பதார்த்தத்தைக் காணவேணுமென்றபோது மங்களதீபமாயிருக்கும். (பூம்பட்டாம்) திருப்பரியட்டம் அபேக்ஷிதமானபோது அழகியபட்டாம். (புல்குமணையாம்) தழுவணை அபேக்ஷிதமானபோது தழுவணையாம். (திருமாற்கு) ஶ்ரிய:பதிக்கு. (அரவு) கட்டிப்பொன்போலே எல்லாவடிவையும் ஆக்கிக்கொள்ளலாம்படி யிருக்கிறபடி."] ... ... ;

௧0௬-மேல்வாக்யத்துக்கவதாரிகை [நமஸ்ஸாலே] என்று துடங்கி

(தனக்கென்ன) என்றது-ஸ்வார்த்தமாக வென்றபடி. (அத்யந்தபாரதந்த்ர்யம்) என்றது-அசித்வத் அத்யந்தபாரதந்த்ர்யமென்றபடி. (விரும்பி அபேக்ஷிக்கை) என்றது - ப்ரேம பூர்வகமாக (அபேக்ஷிக்கை) என்றபடி. (ஸம்பவியாது) என்றது-அத்யந்த பாரதந்த்ர்யஸ்வரூப விருத்தமாகையாலே கூடாது என்றபடி.

[நமஸ்ஸாலே]-நமஸ்ஸிலே, [தன்னோடுறவில்லை என்று வைத்து]-தன்னோடு தனக்கு ஸம்பந்தமில்லையென்று அத்யந்த பாரதந்த்ர்யத்தைச் சொல்லியிருக்க, [கைங்கர்யத்தை]—[இக்கைங்கர்யத்தை], ப்ரார்த்திக்கக் கூடுமோவென்னில்;]-தான் விரும்பி அபேக்ஷிக்கை ஸம்பவிக்குமோவென்னில் என்று மூலார்த்தம்.

தா.—௧0௬.—மேலுக்கவதாரிகை (நமஸ்ஸாலே) இத்யாதி. (ப்ராப்தியில்லாத அத்யந்தபாரதந்த்ர்யம்) என்றது - ஸம்பந்தமில்லாத அசித் பாரதந்த்ர்யமென்றபடி. [என்றுவைத்து] என்றது -என்று சொல்லி வைத்து என்றபடி.

மூ—க0எ. "படியாய்க்கிடந்துன் பவளவாய்காண்பேனே" என்கிறபடியே, கைங்கர்யப்ரார்த்தனை வந்தேறியன்று ஸ்வரூபப்ரயுக்தம்.

வ்யா.—க0எ.—அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார்,

("படியாய்க்கிடந்து") என்று துடங்கி. அதாவது-("படியாய்க்கிடந்துன்பவளவாய் காண்பேனே") என்று, அத்யந்தபாரதந்த்ர்யத்தோடே கைங்கர்ய ப்ரார்த்தனையையும் சொல்லுகிறபடியே, (கைங்கர்ய ப்ரார்த்தனை,) ஸ்வபோக்த்ர்த்வரூபாஹங்கார ப்ரயுக்தமாய்க் கொண்டு (வந்தேறி) ஆனது (அன்று,) ஶேஷிக்கதிஶயத்தை விளைத்தல்லது தான் தரியாதபடியான தன்ஸ்வரூபத்தைப்பற்றி வந்ததென்கை.

எ.—க0எ.—மேல்வாக்யத்துக்கவதாரிகை (அதுக்கு) என்று துடங்கி. (ஸ்வபோக்த்ர்த்வ) இத்யாதி.

அசித் வ்யாவ்ர்த்திபரமான ஜ்ஞாத்ர்த்வபலத்தால் வந்தேறியான ஸ்வபோக்த்ர்த்வரூபாஹங்கார ப்ரயுக்தமாய்க்கொண்டு வந்தேறியானதன்று என்றபடி. (தன்ஸ்வரூபத்தைப்பற்றி) என்றது-ஶேஷத்வமாகிற (தன்ஸ்வரூபத்தைப்பற்றி) யென்றபடி; "ఇతిస్వరూపసంసిద్ధం..." "இதிஸ்வரூபஸம்ஸித்தம் ஸுகம்தாஸ்யமவாப்நுயாம்" (எஎக)இதி பாத்மே; ஆகையாலே கூடுமென்றுபவிதார்த்தம். (ஶேஷிக்கதிஶயத்தை விளைத்தல்லது) என்கிறவிடத்தில்(அதிஶய)மாவது-கிஞ்சித்காரம்.

தொ.—க0எ.—மேலுக்கவதாரிகை(அதுக்குத்தரம்) இத்யாதி. மூலார்த்தம் (அதாவது) இத்யாதி. (ஸ்வபோக்த்ர்த்வரூபாஹங்கார ப்ரயுக்தமாய்க்கொண்டு வந்தேறியானதன்று) என்றது-'மமாயம், போக்தாஹம், மமபோகோயம்' என்கிற அஹங்கார கர்ப்பமான நினைவால் ஆகந்துகமாய்க்கொண்டு வந்ததன்று என்றபடி. (தன்ஸ்வரூபத்தைப் பற்றி வந்தது) என்றது-ஶேஷத்வஸ்வரூபத்தால் வந்ததென்றபடி.

பி.—க0எ.— ["படியாய்"] இத்யாதி.

ஸ்வபோக்த்ர்த்வாகாரமாய்க்கொண்டு வந்தேறியன்றிக்கே ஶேஷிக்கதிஶயத்தை விளைக்கையாவது எது? இவனுடைய ஶேஷத்வபராகாஷ்ட்டையைக்கொண்டு இவர்கள்பக்கல் ஸ்வபோக்த்ர்த்வம், ததநுபாரதந்த்ர்யத்தை பஜிப்பதேயென்று முகமலர் ["உன்பவளவாய்காண்பேனே"] என்று அம்முகமலர்த்தியாகிற அதிஶயத்தை விளைக்கையென்றருளிச்செய்வர்.

౮.--పరగతాతిశయాధానేచ్ఛయా ఉపాదేయత్వమేవ-యస్య-స్వరూపం-సః-శేషః,పరః-శేషీ ఇతి అస్యార్థః; అన్యస్య-ప్రయోజనమేవ-యస్య-పరమప్రయోజనం-సః-శేషః,అన్యః-శేషీ ఇతి. అత్ర పరశబ్దః అన్యపర్యాయ ఇతి పరాతిశయశబ్దయోః కర్మధారయశంకానివృత్త్యర్థో గత శబ్దః, తేనస్వగతాతిశయాధాయకే శేషిణ్యతివ్యాప్తివ్యుదాసః. అతిశయః-విశేషః, కించిత్కార ఇతియావత్ ; నాకించిత్కుర్వతః శేషత్వమితి హి మీమాంసకానాం ప్రసిద్ధిః: అనేన అతిశయశబ్దేన స్వరూపానుకూలవినాశాద్యాధాయకానాం శేషత్వశంకావ్యుదాసః; ఫలవినాశస్యహికర్మణస్స్వగతవినాశాధాయక ఫలప్రతిశేషిత్వం. ఆధానశబ్దేన అతిశయంప్రత్యక్షీకరణతయా హేతుత్వంవివక్షితం. అనేన పరగతం అతిశయం స్వస్మిన్ ఆపాదయితుం ఇచ్ఛయా ఉపాదేయస్య శేషిణః శేషత్వశంకానివృత్తిః.

